M. 1190. 1937 October. ஈசுவரஹு ஐப்பசி

# ஆனந்தபோதினி



REGD No. M. 1190.

ANANDA BODHINI

...FICE ... 17 NOV... MADRAS

Vol. 23. பொருளடக்கம். No. 4.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... 241 |
| 2. | சேலத்தில் சுகாரம்பம் | ... 243 |
| 3. | தேவ சபையின் விசேஷக் கூட்டம், பொருள் நூல் | 247.254 |
| 4. | வாழ்க்கையின் மாண்பு | ... 257 |
| 5. | குலமகட்குத் தெய்வம் | ... 263 |
| 6. | ரிக்ஷா வண்டிக்காரன் | ... 266 |
| 7. | இராமலிங்கர் கல்விகற்றவிதம் | 274 |
| 8. | ஔவையார் | ... 278 |
| 9. | குற்றவாளி யார்? | ... 283 |
| 10. | பாரதியின் பாட்டோவியம் | ... 289 |
| 11. | மாணவர் பகுதி | ... 293 |
| 12. | விவசாயம் | ... 298 |
| 13. | "பட்டப்பகல் கொள்ளை!" | ... 300 |
| 14. | நமது ஆகாரம் | ... 303 |
| 15. | தமிழ்நாட்டு [illegible]யும் ஹிந்தியும் | 305 |
| 16. | பாலர்கள் பக்கம் | ... 307 |
| 17. | ஆசிரியர் குறிப்புக்கள் | ... 310 |

# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பர்மா, பினங், ஸிங்கப்பூர் தென் ஆப்ரிக்கா, பசரா, மெசபொடேமியா முதலிய வெளி நாடுகளுக்கு ... ... | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாகப் பெயரை** எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும் எப்போது சேர்ந்தாலும் **அவ்வருட ஆடிமுதல்**தான் கணக்கு வைக்கட் பட்டு **ஆடியாத** சஞ்சிகை முதல், பத்திரிகை **அனுப்பப்படும்.**

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 8-அணுவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம், **இதைக் கவனிக்கவும்**

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் **கிரைய மனுப்பிப்** பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscripion ஜீவிய சந்தா | இந்தியா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு | ,, | 25—0—0 |

*Telephone* No. 3005. *Telegram*:—"Ananda Bodhini", Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"

6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஸ்ரீ மத்

# விவேகானந்த சுவாமிகள்

## விரிவான திவ்ய சரித்திரம்

(2-ம் பதிப்பு) இதன் விலை ரூ. 4.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 3.



சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பிரசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் ... ாலும் வெளியிடப்படவில்லை.

...ஸ்,

தபால்பெட்டி நெ. ... மதராஸ்.

18533

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமையென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன் கண் விரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன் கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர் இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

**இதன் விலை ரூபா 4.**

## ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) **இதன் விலை ரூபா 2.**

**ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.**
**மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.**

சில சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக் கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை என்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற் கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கிடைக்கும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

**நாவலுலகில் நவீன ஜோதி!**

"ஜீவா"வின் எழுத்துச் சித்திரமான

# "இவ்வுலகைத் திரும்பிப்பாரேன்"!

(புவனசுந்தரியின் சுய சரிதை.)

நாவலுலகிலேயே இதுவரை யில்லா புதிய சோபையை உண்டுபண்ணத் தோன்றியிருக்கிறது.

விகடனில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்ததும், 'புத்தக வடிவில் எப்போது வரும்? எப்போது வரும்?' என்று நீங்கள் தேடுநாளாக எதிர்பார்த்திருந்ததுமான இவ்வபூர்வ கற்பனைக் கதை

## இப்போது வெளிவந்துவிட்டது!

பணக்காரர் குடும்பத்தில் நடக்கும் ஊழல்களும், வஞ்சகச் செயல்களும், பயனற்ற ஆங்கிலக் கல்வியைக் கற்றதன் பயனாய் மேனாட்டின் போலி நாகரிகத்தில் மூழ்கிய மங்கையரின் விபரீத செயலும், வாலிபர்களின் காமக் களியாட்டங்களும், இவற்றால் சமூகத்திற்கு ஏற்படும் தீமைகளும் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. மனித வாழ்க்கையில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களைத் தழுவிய கதைப் போக்கின் சிறப்பும், கற்பனைத் திறனும், இனிய எளிய உரை நடையும் யாவர் மனதையும் கொள்ளை கொள்ளும் என்பது திண்ணம். கதைப் போக்கிற்கேற்ப ஆங்காங்கு சித்திரப் படங்கள் இப்புத்தகத்தை அலங்கரிக்கின்றன. இது சுமார் 260-பக்கங்களுக்கு மேற்கொண்டது.

**இதன் விலை அணா 14**

இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

## இதர ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 | பரம்பரை கிராம உத்தியோகஸதர்கள் சட்டம் | 1 | 0 |
| கிரிமினல் லா | 3 | 0 | இந்துதேச சாச்சி ஆக்ட் | 1 | 0 |
| ஸிவில் லா | 3 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | 0 |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 | இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 | ஸ்டாம்பு ஆக்ட் | 0 | 12 |
| முகம்மதியன் லா | 2 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 10 |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | டிரஸ்டிகள் சட்டம் | 0 | 12 |
| கிராம முன்சிப் சட்டம் | 1 | 8 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 | நில ஆக்கிரமிப்பு என்குரோச்மென்ட் சட்டம் | 0 | 4 |
| எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 | கிராமச் சுகாதாரம் | 0 | 2 |
| கர்ணம் டெக்ஸ்ட் | 1 | 4 | | | |

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**
**தபால் பெட்டி நெ 167, மதராஸ்.**

# கைவல்ய நவநீத வசனம்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள் மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1-8-0.

# ஞானகாந்தி

செ. இராஜு செட்டியார், எம்.பி.பிஜி., அவர்கள் இயற்றியவை.

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக் கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரம் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர்மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின் போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும்.

இதன் விலை ரூ. 1-6-0. ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ் தபால்பெட்டி நெ. 167 மதராஸ்.

---



# ஸ்ரீ வல்லப கணபதி ரக்ஷை

ஆகம சாஸ்திரோக்தமாய் ஷட்கோண யந்திரத்தில் மஹா பீஜங்களை அடக்கி மூல மந்திரம் லக்ஷம் கணக்கான ஜபம், ஹோமாக்னி, அன்னசாந்தி முதலானதுகளும் செய்து வெளியிடப்பட்டது. இதன் பலன் வியாபாரம், உத்தியோகம், ஸ்கூல் பரீக்ஷை, புத்ரசந்தானம், நினைத்ததைக் கொடுக்க தயார். இன்னும் இதன் மகிமையும் அணியும் விதமும் ரக்ஷையுடன் விளம்பரம் தெரியவரும். அநேக பெரியோர்களால் இதன் மகிமைபற்றி சர்டிபிகேட்டுகள் அடைந்தபடியால் இதன் விளம்பரம் அடியில் கண்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1 வி. பி. சார்ஜ் அணா 7. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரக்ஷை ரூபா 2. வி. பி. தபாற் செலவு வேறு. ஸ்பெஷல் ரக்ஷை 1-க்கு ரூபா 10. நாமநக்ஷத்திரம் கூட தெரிவிக்கவும்.

**ம-ள-ள-ஸ்ரீ, T. சுப்பிரமணிய குருக்கள்,**

ஸ்தானீக மிராசுதார், திருத்தணி போஸ்டு, சித்தூர் ஜில்லா.

இந்த ரக்ஷையை அணிந்ததால் என் மனோபீஷ்டம் நிறைவேறியது. ரொம்ப சந்தோஷம் என T. S. ராமநாத அய்யர், P. W. D. சூபர்வைசர், ஓசூர், கிருஷ்ணகிரி தாலூக்கா அறிவிக்கிறார்.

# ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்.



கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர்

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரரவர்களால் எழுதப்பெற்ற 10-ம் பதிப்பு "ஜீவப்பிரமைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்னும் நூலில் வேதங்களினுடையவும், ருஷிகளினுடையவும், அரும் பெரும் ரகஸ்யங்களை யெல்லாம் திரட்டி, வேதங்கள், உபநிடதங்கள், ஸ்ரீ பகவத்கீதை இன்னும அரிய பெரிய கோளாய் எடுத்துக் காட்டி யாவரும் உணருமாறு மிக எளிய நடையில் எழுதியுள்ளார்; இதன்றியும் கடவுள் எப்படிப்பட்டவர்; அவர் எங்கு என்ன ரூபத்துடன் இருக்கின்றார்; அவரை அறிவது எப்படி என்பதையும் தெரிவித்திருப்பதுமே யல்லாமல், கோவில்களிலுள்ள மூல விக்கிரகங்களாகிய சுவாமிகளுக்கு தேங்காய்களை உடைத்துக் கற்பூரமேற்றி என் கும்பிடவேண்டுமோ அதன் ரகஸ்யமும் இன்னும் அநேக ரகசியங்களையும் சேர்க்கப்பட்டுள்ளன.

## ஷை யோகீஸ்வரர் அவர்களால் எழுதிய நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அனேக தேவ ரகஸ்யங்களும், அநேக படங்களும் அடங்கிய பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பைண்டு ... ... ... | 4 | 0 |
| மேற்படி நூல் இங்கிலீஷ் முதற்பாகம்... ... ... | 2 | 8 |
| "ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்" தெலுங்கு 5-ம் பதிப்பு | 4 | 4 |
| ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை நான்காம் பதிப்பு ... ... ... | 2 | 4 |
| மேற்படி தெலுங்கு பகவத்கீதை ... ... ... | 2 | 4 |
| ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றாம் பதிப்பு ... ... | 2 | 4 |
| மேற்படி தெலுங்கு கபீர்தாஸ் சரித்திரம் ... ... | 2 | 4 |
| யோகாப்பியாசம் செய்ய வேண்டிய முறைகளை உபதேசிக்கும் நூல் | 1 | 8 |
| மாயையின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தி மனதை நிறுத்தும் நூல்... | 0 | 8 |
| தத்துவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் 3-ம் பதிப்பு | 0 | 6 |
| சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதம் இது மிகவும் சிரேஷ்டமான நூல் ... ... ... | 0 | 8 |
| மேற்படி தெலுங்கு சரீர தேவாலய பாரிஜாதம் ... ... | 0 | 6 |
| இந் நூலாசிரியரின் பூர்வ ஜன்ம இச் ஜன்ம சரித்திரம் 3-ம் பதிப்பு | 0 | 6 |
| மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் ... ... | 0 | 4 |
| மேற்படி மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் இங்கிலீஷ் ... | 0 | 4 |
| ஸ்ரீ சச்சிதானந்தர் தமிழ்ப் பாமாலை ... ... ... | 0 | 4 |

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மதிமோச விளக்கம்.

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

## ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த திக்கு கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தில்; கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், கால வயப்பட்டு, மனம் மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமாபாதகமும் அவற்றிற்கு அஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள்தோறும், ஊர்தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், திடீர்ப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளினும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம் இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே யிருக்கின்றன. உலகமுழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புக்களும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

**இதன் விலை ரூபா 1—0—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ, 167, மதராஸ்.**


ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.



(ALL RIGHTS RESERVED.)



தொகுதி 23 | ஈசுவர ஹு ஐப்பசி மீ கஉ / 1937 ஹு அக்டோபர் மீ 17உ | பகுதி 4



11 NOV 1937


## கடவுள் வணக்கம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்து அயனும்(ம்)மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டு அலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அரு ளாயே. (2)

எங்கள்நா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுஉடல் தழலெழ விழித்த
செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அரு ளாயே. (3)

# அரும்பொருள் விளக்கம்

(இ-ள்) பரஞ்சோதியே! சோதிப்பிழம்பே! சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தீபமே! சுருண்ட கூந்தலையும், பருத்த கொங்கைகளையும் உடைய பார்வதி தேவியை இடப்பாகத்தில் கொண்டிருக்கும் சிவபெருமானே! பராபரனே! பால் போன்று வெண்மையான திருநீற்றைத் தரித்திருப்பவனே! தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், மகாவிஷ்ணுவும் கண்டறியாத நீதிசொரூபனே! பல்வளங்களும் நிரம்பிய திருப்பெருந்துறையில் நிறைந்த மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழ் எழுந்தருளிய ஆதிமூலமே! அடியேன் ஆதரவோடு உன்னை யழைக்கும்போது 'அஞ்சாதே!' என்று கூறி ஆட்கொண் டருள்வாயாக. (எ—று.)

எத்துணை பெரிய தகுதி யுடையோராயினும் ஞானக்கண் கொண்டு பார்த்தாலன்றிப் புலப்படான் என்பார் 'பங்கயத்து அயனும்மால் அறியா நீதியே' என்றும், யாவர்க்கும் முன்னவன் இவன் ஒருவனே என்பார் 'ஆதியே' என்றும் கூறினர். 'அபயம்' என்று அலறினால், 'அஞ்சேல்! ஆட்கொண்டோம்' என அடைக்கலந் தந்தருளல் வேண்டுமென்று, 'அடியேன் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே என்று அருளாயே' என்ற அடிகளால் உருக்கமாகப் பிரார்த்திக்கிறார். (1)

(இ-ள்) நடராஜனே! மலரகிதனே! திருநீறை ஐஸ்வரியமாக உடையவனே! நெற்றியில் கண்ணுடைய மூர்த்தியே! தேவர்கள் தலைவனே! அழுது அலறி உலக முழுதும் தேடியும் உன்னைக் காண முடியவில்லை; திருத்தமாம் பொய்கை என்னும் தீர்த்தத்தையுடைய திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்தமரத்தின் கீழ் எழுந்தருளிய செல்வமே! அடியேன் ஆதரவோடு உன்னை யழைக்கும்போது 'அஞ்சாதே!' என்று கூறி ஆட்கொண் டருள்வாயாக. (எ-று)

யுக உற்பத்தியிலும், யுக முடிவிலும் பரசிவன் ஒருவனே எஞ்சி நிற்கிறான் என்று சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பறைசாற்றுவதால், மாணிக்கவாசகப் பெருந்தகையாரும், 'ஒருத்தனே' என்று விளித்தார். இருதய கமலத்தில் வீற்றிருக்கும் இறைவனை அந்தர் முகமாகவே தரிசனஞ் செய்ய முயல்வதை விட்டு, வெளியே சடப்பொருள்களை யெல்லாம் நோக்கித் தேடி யலைவதில் பயனில்லை என்னும் உண்மையை, 'உன்னை ஓலமிட்டு அலறி உலகெலாந் தேடியுங் காணேன்' என்று எடுத்துக் கூறினர். (2)

(இ-ள்.) பசுத்தன்மை யெய்திய மக்களாகிய எங்களுக்கு நாயகனே! என் இன்னுயிர்த் தலைவனே! மயிர்ச்சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய பார்வதிதேவி, கங்காதேவி ஆகிய இருவருக்கும் கணவனாக இருக்கும் புருடோத்தமனே! தகுதியும் அழகும் வாய்ந்த மன்மதனது உடம்பு பற்றியெரிந்து சாம்பராகும் படியாக விழித்த சிவந்த நெற்றிக்கண்ணையுடைய யோகமூர்த்தியே! திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய அருட்கண்ணுடைய தயாபரனே! அடியேன் ஆதரவோடு உன்னை யழைக்கும்போது 'அஞ்சாதே!' என்று கூறி ஆட்கொண் டருள்வாயாக. (எ-று.)

இரு தேவிகளைக் கொண்டிருந்தும், காமரகிதன் என்பர், 'தக்க நற்காமன் தனது உடல் தழலெழ விழித்த செங்கண் நாயகனே' என்று அருளினர்.




## சேலத்தில் சுகாரம்பம்

"பாழும் கள்ளால் பட்டதை நினைத்தால்
பதைக்குது நெஞ்சம் கொதிக்குது தடா!"

என்று தமிழ் நாட்டுத் தேசிய கவி திரு. இராமலிங்கம் பிள்ளை கதறுகிறார். மதுபானத்தால் மக்கள் சமூகம் அடைந்து வரும் சீர்கேடான நிலைமையைச் சிந்தித்துப் பார்க்கும் எவரும் இவ்விதம் நெஞ்சங் குமுறிக் கதறாமலிருக்க முடியாது. உலகந் தோன்றிய நாள் முதலே மதுபானம் என்னுங் கொடிய வழக்கம் மனித சமூகத்தில் ஏதோ ஒரு வகையான ரூபத்தில் இடம் பெற்றுவிட்டது. மது மயக்கத்தால் மக்கள் செய்யும் தீய செயல்களும், அதன் பயனாக அவர்கள் அடையும் துன்பங்களும் சொல்லி முடியாது. உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காணலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் தேசத்தில் வருஷந்தோறும் ஜனத்தொகை அதிகப்படுவதைவிட்டுக் குறைந்து வர ஆரம்பித்ததாம். ஆகவே, தேசாபிமானமுள்ள சில பிரஞ்சுக்காரர்கள் ஒன்று கூடி, மக்கள் ஜனன தொகையைக் காட்டிலும் மரண எண்ணிக்கை அதிகமாகி வருவதற்குக் காரணமென்ன வென்று ஆராய்ந்தனர். அவர்களது ஆராய்ச்சியின் பயனாக, பல உண்மைகள் வெளிப்பட்டனவாம். அவற்றில் மிக முக்கியமானது மதுபானத்தால் தான் மக்கள் அகால மரணத்துக்கு ஆளாகின்றனர்; மக்கள் மரண எண்ணிக்கையும் வருஷந்தோறும் பெருகி வருகிறது என்று ஏற்பட்டதாம். அம் முக்கிய காரணத்தை அவர்கள் தாங்கள் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்:—

"மதுபானம் மனிதனுக்கு இயற்கையாகவுள்ள அன்பை அழித்து, மகனாகவும், கணவனாகவும், தந்தையாகவும் இருந்து அவன் செய்ய வேண்டிய கடமைகளை மறக்கும்படி செய்கிறது. அது அவனை வேலை செய்யத் திறமையற்றவனாக்கி, திருடவும், கொள்ளையடிக்கவும், இன்னும் பலவிதமாக சட்டத்தை மீறி நடக்கும்படியும் அவனைத் தூண்டுகிறது..........................

"இது மட்டுமல்ல; பாரிசவாயு, இரைப்பை ஈரல் குண்டிக்காய் ஆகியவைகளின் எரிச்சல், க்ஷயம், கபஜுரம், பைத்தியம் முதலிய கொடிய நோய்களுக்கும் மதுபானந்தான் முக்கிய காரணமாகும். மதுபானத்தால் இரத்த நாடிகளும் மெலிவுற்று நோயுறுகின்றன. மதுபானம் இந் நோய்களுக்குக் காரணமா யிருப்பது மாத்திரமல்ல; மதுபானஞ் செய்யாதவர்களுக்கு மேற் கூறிய நோய்கள் வந்தால் அவர்கள் குணமடைவதற்கு இடமுண்டு. மதுபானஞ் செய்பவர்களுக்கு இந் நோய்கள் வந்தாலோ அவன் குணமடைவதற்குப் பெரிதும் இடமில்லை யென்றே சொல்லலாம்"

இதிலிருந்து மதுபான பழக்க முடையவர்களுக்குக் கொடிய நோய்கள் எளிதாக ஏற்படு மென்றும், அவை எவ்வித மருந்தாலும் குணமடையா வென்றும், கடைசியில், அகால மரணத்துக்கே ஆளாக்குகிறது என்றும் ஏற்படுகிறதல்லவா!

'ஆமாம்; ஒரு சிலர்—ஏன் டாக்டர்களுங் கூட—மதுவுக்குச் சில நோய்களைப் போக்கிக் குணமாக்கும் குணமிருக்கிற தென்று கூறுகிறார்களே' என்று வாசகர்கள் கேட்கலாம்; அக் கூற்று முற்றுந்தவறாகும் சிறிது காலத்துக்கு முன் வரை, பல டாக்டர்கள் சில நோய்களுக்குப் பிராந்தி போன்ற மதுபான வகைகளை, நோயாளிகளுக்குக் கொடுத்து வந்தது உண்மை தான். ஆனால், இப்போது நோய்களைக் குணஞ் செய்யுங்குணம் மதுவுக்குச் சிறிதுமில்லை யென்பதை எல்லோருந் தெரிந்துகொண்டனர். அதனால், டாக்டர்கள் மதுவை உள்ளுக்குக் கொடுக்கும் மருந்தாக உபயோகிக்கும் வழக்கத்தை விட்டு வருகின்றனர். மது நோயைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக அதிகப்படுத்தி இன்னும் பல நோய்களை யுண்டாக்குகிறது. ஆகையால் மதுபான வகைகள் எதுவுமே எந்த வகையாலும் மக்கள் உட்கொள்ளத்தக்க தல்லவென்று நாம் உறுதியாகக் கூறுகிறோம்.

மதுபானம் மக்கள் உட்கொள்ளத் தக்க உணவுப்பொருள்களில் ஒன்றா என்று ஆராய்ந்தால், அல்லவென்ற பதிலே கிடைக்கும். ஏனென்றால், உணவுப் பொருள்களுக்கு இருக்கும், உடம்புக்கு ஒரு தீங்கையும் விளைவிக்காமல் அதற்கு உஷ்ணத்தையும் பலத்தையும், வளர்ச்சிக்கும் பழுது பார்ப்பதற்கும் வேண்டியவற்றையுந் தரும் சக்தி மதுபானத்துக்கு இல்லை. மதுபானம் உணவுக்குழாய் வழியாகச் சென்றாலும் அது ஜீரணமாவதுமில்லை; வேறு விதமாக மாற்றமடைகிறது மில்லை. இரத்தத்தோடு கலக்கும் போதும் அது மதுவாகவேதான் இருக்கிறது. மேலும் உடம்பில் எந்தெந்த உறுப்புகளில் மது தங்குகிறதோ அந்தந்த அங்கங்களை அது சுருங்கச் செய்கிறது; வளர்ச்சியையும் பலத்தையுங் குறைக்கிறது. இரைப்பை நோயின்றி யிருக்கும்போது சாதாரண உணவுகளை உண்டால் அது ஏற்றுக் கொள்கிறது. ஆனால் மதுவை முதன்முறையாக அருந்துகையில் இரைப்பை அதை ஏற்றுக்கொள்ளாமல் வாந்தி செய்கிறது.



மது தனக்கு இயற்கையான உணவோ பானமோ அல்ல என்றும், அது தனக்குப் பகைப் பொருளென்றும் அறிந்து, அதை விரைவில் வெளியே தள்ளிவிட முயல்கிறது இரைப்பை தன்னுணர்வால் எச்சரிக்கிற எச்சரிக்கையை யாகிலும் மனிதன் அறிந்து நடக்கவேண்டாமா என்றே கேட்க விரும்புகிறோம்.

மதுபானம் இயற்கையாக உண்டாகிற ஒரு பொருள் அல்ல. பதார்த்தங்கள் அழிவதால் மது உண்டாகிறது. மதுவிலுள்ள முக்கிய பொருளாகிய மதுசாரம் கொடிய விஷத்தன்மை வாய்ந்தது. எனவே, ஒருவனைக் கொல்ல அதிக மதுசாரம் வேண்டியதில்லை.

மதுபானத்தை யருந்தினால் சுறுசுறுப்பு உண்டாகிறதென்று சிலர் கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர், 'நெற்றி வியர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டு வேலை செய்யும் உழைப்பாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மது தேவாமிர்தம்போல் இருந்து ஆறுதலைத் தருகிறது. அதை யருந்திய மாத்திரத்தில் நாள் முழுதும் பட்ட கஷ்டத்தை ஒரு நொடியில் போக்கிச் சுகத்தைக் கொடுக்கிறது' என்றெல்லாம் கூறுகின்றனர். இவ்வித அபிப்பிராயங்களும் தவறாகும். மது அருந்தி முதல் பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கள் வரை புத்தி சுறுசுறுப்பா யிருப்பதுபோலவும், ஆறுதலைத் தருவதுபோலவும் காணப்படுகிறதே யொழிய, பிறகு அவ்வளவும் உடல் சோர்வையும், மனமாறாட்டத்தையுமே யுண்டாக்குகிறது.

மதுபானஞ் செய்யப் பழகும் ஒரு மனிதன் முதன் முதலாக அறிவை யிழக்கிறான். நல்லது தீயது என்று பகுத்தறியக் கூடாத ஒரு நிலைமை யேற்பட்டதும், பல கொடிய செயல்களைச் செய்யக் கூடிய தன்மையை யடைகிறான். பலவித நோய்களுக்கும் அவன் ஆளாகிறான். அது மட்டுமல்ல; ஜன சமூகத்தால் அவன் வெறுக்கப்படுகிறான்; அவ்வளவு ஏன்? அவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவியும், அவனைப் பெற்றெடுத்து அருமையாக வளர்த்த தாயும் கூட அவனை வெறுத் தொதுக்குவார்கள் என்றால், அதிகம் கூறுவானேன்!

"குடியினால் மானிடர்க்கு நேரிடும் விபத்துகள், யுத்தம், நோய், பஞ்சம் ஆகிய இம் மூன்றினால் நேரிடும் விபத்துகளைக் காட்டிலும் அதிகம் என்று சொல்லப்படுகிறது" என்று, 1880-ம் வருடத்தில் காமன்ஸ் சபையில் மிஸ்டர் இவார்டு க்ளாட்ஸ்டன் என்பார் பேசுகையில் குறிப்பிட்டார். இதுவொன்றே மதுபானத்தின் தீமைகளை விளக்கப் போதுமானதாகும்.

மது வரக்கன் மக்களுக்குச் செய்துவரும் தீமைகளைக் கண்டே, நம் நாட்டில் தோன்றிய மகான்களெல்லாம் அக் கொடிய வழக்கத்தை யொழிக்கப் பாடுபட்டார்கள். மது வருந்துவதைக் கண்டிக்க—அதன் தீமைகளை விளக்க—பல நீதி நூல்கள் எழுந்தன. ஆயினும், மதுப்பேயின் ஆதிக்கம் ஒழிந்தபாடில்லை.

நம் ஜீவியகாலத்தில் பெரிய மகானாக விளங்கிவரும் மகாத்மா காந்தி இம் மதுபான பழக்கத்தை யொழிக்க வெகுவாகப் பாடுபட்டு வருவது உலகறிந்த விஷயம். காங்கிரஸ் மகாசபையில் காந்தியடிகளின் செல்வாக்கு ஏற்பட்டதும், காங்கிரஸும் மதுவிலக்குத் திட்டத்தை மேற்கொண்டது. அத் திட்டத்தை நிறைவேற்ற இந்தியா முழுவதுமுள்ள காங்கிரஸ்காரர்களும், அநுதாபிகளும் எடுத்துக் கொண்ட முயற்சியும், பட்ட கஷ்டமும் உலகறிந்த தொன்று. 1930-ம் வருஷத்தில் நடைபெற்ற சட்டமறுப்புப் போராட்டத்தின் போது, மதுபானக் கடைகளை மறியல் செய்து எத்தனையோ காங்கிரஸ்காரர்கள் தடியடி பட்டனர்; சிறை சென்றனர். அச் சமயம் அவர்களது பெருமுயற்சி பலன்தரா வில்லையாயினும், வீண் போகவில்லை காங்கிரஸ்காரர்கள் ஏழு மாகாணங்களில் மந்திரி பதவியேற்று அரசியலை நடத்திவரும் இப்போது, மதுவிலக்கு முயற்சிக்கு விமோசனம் ஏற்படுங் காலம் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டியார் காங்கிரஸ் மந்திரிகளுக்கு வகுத்திருக்கும் வேலைத் திட்டங்களில், 'தத்தம் மாகாணங்களில் மூன்று வருஷ காலத்துக்குள் பூரண மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டும்' என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கிரஸ் மந்திரிகள் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர முயன்று வருவதில் ஆச்சரிய மொன்று மில்லை.

இவ் விஷயத்தில் நமது பிரதம மந்திரி கனம் இராஜகோபாலாசாரியார் மற்ற மாகாணங்களுக்கு முன்பே முந்திக் கொண்டார். அவர் சமீபத்தில் மது விலக்கு மசோதாவை ஜனப் பிரதிநிதி சபையிலும், அரசாங்க சபையிலும் கொண்டு வந்து நிறைவேற்றிச் சட்டமாக்கி விட்டார். இப்போது முதன் முதலாகச் சேலம் ஜில்லாவில் தமது பரீட்சையை ஆரம்பித்திருக்கிறார். அந்த ஜில்லா முழுவதிலுமுள்ள மதுபானக் கடைகளும், அபின் கஞ்சா முதலிய லாகிரிவஸ்து விற்பனையாகும் கடைகளும் எல்லாம் மூடப்பட்டன. இம் மதுவிலக்கு வேலையை, கனம் ஆச்சாரியார் கடந்த இருபது வருஷங்களுக்கு மேலாகவே செய்து நன்கு பழகி யிருக்கிறாராதலால், அதை வெற்றிகாமாக நடத்திக் காட்டி இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டுவதோடல்லாது பூவுலகுக்கே ஒரு புதுமையை உண்டு பண்ணுவார் என்பது திண்ணம். கனம் ஆச்சாரியார் தம் சகாமந்திரிகளோடு 13—நாட்கள் வரை சேலம் ஜில்லா முழுதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். மதுவரக்கன் ஒழிந்ததில் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. குடிப்பேய் ஒழிந்ததால் குடி மக்கள் நலமடைந்து சேலத்தில் சுகாரம்பம் ஏற்பட்டு விட்டது. இனி தமிழ் நாட்டிலுள்ள மற்ற ஜில்லாக்களிலும் இவ்வித சுகாரம்பம் உதயமாவது வெகு தூரத்தில்லை என்றே நாம் நம்புகிறோம்.

# தேவ சபையின் விசேஷக் கூட்டம்

———(0)———

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

எங்கும் ஒரே தங்கப் பேரொளி மயம். 'தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?' —என்று பெரிதும் வியந்து கூறும்படியான அற்புதக் காட்சி. தரை—சுவர்—தூண்கள் முதலிய எல்லாம் ஒரே தங்கமயமாக விளங்கியதொரு அற்புத சபா மண்டபம். எங்கும் அவ்வாறு ஒரே தங்க ஒளி வீசுமாறு, தங்க நிறக் கண்ணாடி இணைக்கப்பட்ட எலெக்ட்ரிக் கலர் விளக்கு எங்கேனும் அமைக்கப் பட்டிருக்குமோ என்று சுற்றிச் சுற்றிப் பார்த்தும், எங்கும் எவ்வித விளக்கும் காணப்பட வில்லை. கதிரவனது பொன்னிறக் கிரணங்கள் உள்ளே நுழைவதற்குக் கூட, அம் மண்டபத்தில் எவ் விடத்திலும் இடமில்லை. அப்படி யிருந்தும், அம் மண்டபம் முழுதும் மாற்றறியாத செழும் பசும்பொன் மயமாகத் தோன்றுவதன் காரணம் என்ன வென்பது எனக்குச் சிறிதும் புலனாகவில்லை. அதனால், அந்த மண்டபத்தி லிருந்தபடியே ஆச்சரியக் கடலில் ஆழ்ந்து நின்றபோது, அடிக்கடி இமைத்துக் கொண்டிருந்த எனது இரு கண்களும் திடீரென்று வேலை நிறுத்தம் செய்து விட்டன; அதாவது அவை மூடிக் கொண்டு விட வில்லை.—இரு இமைகளும் அசைவற்று நின்று விட்டன. அம் மண்டபத்தின் நடுவில் சிறந்து விளங்கியதொரு சிங்காரச் சிங்காசனத்திலே, கம்பீரமான தோற்றத்துடன் கூடிய சுந்தர புருஷன் ஒருவன் அமர்ந்து கொண்டிருந்தான். அவனது சிங்காசனத்தைச் சுற்றிலும் அமைக்கப் பட்டிருந்த பற்பல ஆசனங்களில், சிறந்த அலங்காரங்களுடன் கூடியவர்களும் சாதாரண உடைகளுடன் கூடியவர்களுமாய் பலவகைப்பட்ட ஆடவர்களும் பெண்மணிகளும் அமர்ந்து கொண்டிருந்தனர். அந்த சுந்தர புருஷன் முன்பு, அழகிற் சிறந்த ஒரு மங்கை பரதநாட்டியம் ஆடிக் கொண்டிருந்தாள். அத்தகைய காட்சிகளைக் கவனித்த பின், அவ்விடம் தேவேந்திர சபா மண்டபமாகத்தான் இருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டேன்.

வீணை தாங்கிய தோளுடனும் புன்னகை பூத்த முகத்தோடும் கூடியவராய் நாரத முனிவர் திடீரென அங்கு விஜயம் செய்தார். அவர் வரவைக் கண்டவுடனே, எல்லோரும் எழுந்து நின்று அவர் கையமர்த்தியவுடன் தத்தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். பின்பு, தேவேந்திரன் அவரைத் தனக்கருகில் இருந்ததொரு ஆசனத்தில் அமருமாறு வேண்டிக் கொண்டான். பின்னர் சுற்றிலும் அமர்ந்திருந்த பலரையும் கவனித்து நோக்கிப் பெரிதும் வியந்த நாரதர், இந்திரனை நோக்கி, "என்ன இந்திரா! இன்று என்ன விசேஷம்? என்று மில்லாத விந்தையாக, இந்த சபையை

எட்டிப்பாராத பலருங் கூட இன்று இங்கு விஜயம் செய்திருப்பதன் காரணம் என்னவோ?''—என்று பெருவியப்புடன் வினவினர்.

''என்ன சுவாமிகளே! திரிலோக சஞ்சாரியாகிய தாங்கள், ஒன்றுமே அறியாதவரைப் போல் நடிப்பது பெருவிந்தையாக வல்லவோ இருக்கிறது! பாரதநாட்டில்—அதிலும்—செந்தமிழ் நாட்டில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் மகத்தான அற்புதப் புரட்சி எத்தகையதென்பதை, தாங்கள் அறியீர்களா என்ன? செந்தமிழ் நாடெங்கும் காங்கிரஸ் தேவி குதூகல மிகுதியினால் ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு, அம்பலத்தில் ஆடும் நடராஜர் கூட பெரிதும் பிரமித்து நிற்கிறாரே! ஆழ்வார்களையும் நாயன்மாரையும் தோற்றுவித்து அருள் நெறியையும் பக்தி—மார்க்கத்தை வளர்ப்பதில் பாரத நாட்டிலேயே முதன்மை பெற்று நின்ற செந்தமிழ்த்தாய் இன்று காங்கிரஸ்—பக்தியில் முதன்மை பெற்று விளங்கும் தனது செல்வப் புதல்வர்களைக் கண்டு, வர்ணனைக்கு அடங்காத ஆனந்தத்தினால் பரவசமடைந்து நிற்கிறாளே! உபநிஷதங்களையும் கண்ணபிரான் அருளிய பகவத் கீதையையுமே வழி காட்டிகளாகக் கொண்டு வாழ்க்கை நடத்திவரும் சிறந்த கர்ம வீரராகிய 'ராஜாஜி'யிடம்—அவர்தான்—சேலம்—சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அவர்களிடம்—, சென்னை மாகாண மந்திரி சபையை அமைக்கும் பொறுப்பை அரசாங்கத்தினர் ஒப்புவித்திருக்கின்றனர். அதன் பயனாக, தமிழ்நாட்டுத் தேசியத் தொண்டர்களின் பெயர்களடங்கிய பட்டியைக் கையில் வைத்துக்கொண்டு எவரெவரைத் தேர்ந்தெடுப்பதென்ற தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ராஜாஜி, மிக மிகத் தவித்துக் கொண்டிருக்கிறார். ஆதலால், அவர்மேல் சுமத்தப்பட்டுள்ள பெரும் பாரத்தை விரைவில் குறைக்கவேண்டியது, எனது கடமையாக இருக்கிறது. அதன் பொருட்டு, வைகுந்தன்—கயிலாயம்—சத்திய லோகம்—அளகாபுரி முதலிய உலகங்களுக்கும் செய்தி அனுப்பி, இன்று இந்த விசேஷக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன். என்னை மதித்து இங்கு விஜயம் செய்திருக்கும் பூமி தேவி—ஆரோக்ய லக்ஷ்மி—தான்ய லக்ஷ்மி—ஸரஸ்வதி—பார்வதி—குபேரன் முதலிய எல்லோருக்கும் எனது நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனிமேல், சென்னை மாகாண மந்திரி சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கும் பணியில், தகுந்த யோசனைகள் கூறுமாறு இங்கு கூடியுள்ள அன்பர்களைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்''—என்று அக்கிராசனப் பிரசங்கத்தைச் செய்து முடித்தார், தேவேந்திர மகாராஜர்.

முதன் முதலாக எழுந்து நின்ற குபேரன், சபையை நோக்கிப் பின்வருமாறு பேசத் தொடங்கினான்:—

''சகோதரிகளே! சகோதரர்களே!! பாரத நாட்டுக்கு—அதிலும்—செந்தமிழ் நாட்டுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோமென்பதை, உங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது அனாவசியமென்று கருதுகிறேன். மெய்ஞ்ஞானம் எத்தகையதென்பதை அநுபவ வாயிலாக உணர்ந்து கொள்ளவேண்டி நான் திருவெண்காடனாகத் தோன்றியபோது, எனக்கும் பலவகைப்பட்ட அரிய படிப்பினைகளைக் கற்பித்தது செந்தமிழ்நாடே. ஒரு மனிதனது ஆன்ம முன்னேற்றத்திற்குப் பெரும் பகைகளாகவுள்ள மண்ணாசை—பொன்னாசை—பெண்ணாசை என்னும் மூன்று ஆசைகளைக் காட்டிலும் மிக மிகக் கொடியது பதவி ஆசை. பதவிப் பித்து மிகுதியினால், ஒருவன் எதையும் செய்யத் துணிந்து விடுகிறான். ஆதலால், தற்சமயம், தியாகதேவியாகிய காங்கிரஸ் மாதாவின் சார்பாக பிரதம மந்திரி பதவி ஏற்கத் தகுந்த தொண்டர்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர், மிகச் சிறந்த கர்மவீரராகவும் பொருளாசையும் பதவிமோகமும் அணுவளவு மில்லாததராகவுமே இருக்க வேண்டும். அவர், கர்மவீரர்களின் கடமையைத் தெளிவாக விளக்கிக் காட்டும் உபநிஷதங்களின் உட்பொருள்களையும் பகவத்கீதையில் அறிவுறுத்தப்படும் சீரிய பொருள்களையும் நன்கு உணர்ந்து கொண்டு, உணர்ந்தவற்றைச் செயலிலும் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும். கலையறிவு—மன உறுதி—வைராக்கியம்—அன்பு—கருணை—தியாகம்—என்றும் அஞ்சாத ஆண்மை—எவ்விடரிலும் கலங்காத வீரம்—பொறுமை—நிர்வாகத் திறமை முதலிய சீரிய குணங்களில் சிறந்தவராகவும் அவர் இருக்கவேண்டும். இன்றைய தமிழ் நாட்டில் அத்தகைய உத்தமராக விளங்குபவர், இராஜகோபாலாசாரியார் ஒருவரே. ஆதலின், தமிழ்த்தாயின் தொண்டர்களாகிய காங்கிரஸ் மந்திரிகளின் தலைமைப் பதவிக்குத் தகுந்தவர், அவரேயென்பது எனது அபிப்பிராயம். பொருளாசை சிறிதும் இல்லாத ஞானத் துறவியாகிய அவரிடம் பொக்கிஷ இலாகாவை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஒப்புவித்து விட்டால், தமிழ்மக்களின் பொருள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் குறித்து எவருக்கும் எத்தகைய கவலையேனும் பயமேனும் தோன்றுவதற்கு இடமில்லாமற் போவதுடன், தமிழர்களின் பணம் தமிழர்களுக்கே பயன்படுத்தப் படுமென்றும் அனைவரும் உறுதியாக நம்பியிருக்கலாம்,''



''தமிழ் மாகாண மந்திரி சபைத் தலைவராகவும் பொக்கிஷ இலாகாவின் தலைவராகவும் 'ராஜாஜி'யைத் தேர்ந்தெடுப்பதில், இங்கு கூடியிருக்கும் எவருக்கேனும் ஆட்சேபமிருந்தால், அவர் தமது ஆட்சேபத்தை எழுந்து நின்று தெரிவிக்கலாம்''—என்று இந்திரன் கூறவும், எவரும் எழுந்திருக்கவில்லை; எல்லோருடைய முகங்களிலும் மகிழ்ச்சி பொங்கித் ததும்பியது. பின்னர், பூமிதேவி எழுந்து நின்று பின்வருமாறு பேசலானாள்:—

''சகோதரிகளே! சகோதரர்களே!! பூவுலகம் முழுதும் எனது சொந்த சொத்தாகவே இருந்தாலும், பாரதநாடு ஒன்றில் மட்டுந்தான் எனக்கு எல்லையில்லாத அன்பு. ஏனெனில், மக்களின் வாழ்க்கைச் சிறப்புக்கு உரிய வளங்கள் நிறைந்த நல்லிடங்கள், மற்ற நாடுகளில்விட பாரத நாட்டிலேயே மிகுந்து விளங்குகின்றன. மேலும், எனது சிந்தைக்கினிய காதலராகிய திருமால், நூற்றுக் கணக்கான திருக் கோயில்களில் இன்றும் மகிழ்ந்து குடிகொண்டிருப்பது, செந்தமிழ்நாடு ஒன்றில் தான். அத்தகைய தமிழ் நாட்டிலே, எனது கருணை ஒன்றையே நம்பி உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் விவசாயிகளில் மிகப் பெரும்பாலோரும், வறுமையின் கொடுமையையும் வரிச்சுமையின் கொடுமையையும் தாங்க முடியாமல், உடல் மெலிந்து வலி இழந்து உற்சாகங் குன்றி நெஞ்சு குமுறி நிற்கின்றனர். அத்தகைய எளியவர்களின் நிலையை எண்ணிப் பார்க்குந்தோறும், எனது நெஞ்சம் என்னைச் சகித்தற்கரிய கொடிய சித்திரவதைக்கு உட்படுத்துகிறது. இனியேனும், கொடுந்துயரின் மிகுதியால் இருண்டு கிடக்கும் அவர்களது மன

இருளைப் போக்கி, அங்கு உரிமை இன்ப ஒளி வீசுமாறு செய்வித்து, அவர்களைச் சீரிய வீரர்களாகச் செய்விக்க வேண்டியது, மிக மிக அவசியமாகும். அப்பணியைத் திறம்பட நிர்வகித்து நடத்தக்கூடிய வீரத் தொண்டர், ஆந்திர வீரகேசரி-பிரகாசம் ஒருவரே ஆவர். அவரிடம் நிலவரி இலாகாவை ஒப்புவித்துவிட்டால், தமிழ்நாட்டு விவசாயிகளைப் பெரிதும் துன்புறுத்தும் வரிச்சுமையைக் கூடிய விரைவில் குறைத்து, அவர்களது நெஞ்சிலுள்ள துயர இருளைப் போக்கி இன்ப ஒளியைப் பெருக்குவித்து, அவர்களை அவர் தம்மைப்போலவே எத்தகைய இடர்களிலும் சித்த உறுதி சிறிதும் கலங்காத சீரிய வீரச் சிங்கங்களாகவும் மாற்றிவிடுவாரென்பது எனது எண்ணம். இதைக் குறித்துச் சபையினருக்கு எவ்வித ஆட்சேபமும் இராதென்று நம்புகிறேன்!"

சந்தோஷ ஆரவாரத்தினால் சபையினர் தமது சம்மதத்தைத் தெரிவித்தபின், தான்ய லக்ஷ்மி எழுந்து நின்று பின்வருமாறு பேசலானாள்:—

"அன்பர்காள்! தமிழர்கள் எல்லோரிடத்திலும் எனக்கு அன்பு உண்டு; எனினும், மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமாக உழைத்தும் உழைப்புக்குத் தகுந்த வருமானமின்றி—அதிர்ஷ்ட தேவியின் அநுக்கிரகமின்றி—வறுமையின் கொடுமையால் தினந்தோறும் பெரிதும் வருந்தி நிற்கும் ஹரிஜனங்களிடந்தான் எனக்கு விசேஷ அபிமானம். வயல்களிலே, ஏர் உழுதல்—விதை விதைத்தல்—நாற்று நடுதல்—களை பிடுங்குதல்—நீர் பாய்ச்சுதல்—காவல் காத்தல்-அறுவடை செய்தல்—கதிர்களினின்றும் தானியங்களை உதிர்த்தல் முதலிய வேலைகளில் ஈடுபடுவோரில், மிகப் பெரும்பான்மையோர் எளிய ஹரிஜனங்களே. அவர்கள் அனுபவித்துவரும் கொடுந் துன்பங்கள் குறைக்கப்படாத வரையில், தற்காலத் தமிழ்நாட்டு விவசாயிகளின் நிலைமை அபிவிருத்தி அடைவது மிக மிகக் கஷ்டமே. ஆதலால், தமிழ்நாட்டு விவசாயிகளின் பொருள் நிலை அபிவிருத்தி அடையவேண்டுமானால், எனது சிந்தைக்கினிய எளிய ஹரி ஜனங்களின் மனத்தை, மற்றவர்கள் பெரிதும் குளிரச் செய்விக்கவேண்டும். ஆதலால், தமிழ் மாகாண விவசாய—அபிவிருத்தி இலாகாக்களை, சுயநலங் கருதாத ஹரிஜனத் தொண்டர்களில் சிறந்து விளங்கும் திரு. முனிசாமிப் பிள்ளை வசம் ஒப்புவிப்பது தான் சரியென்று எனக்குத் தோன்றுகிறது."

அத்தேவி அமர்ந்தபின் எழுந்திருந்த ஆரோக்ய லக்ஷ்மி, சபையை நோக்கிப் பின்வருமாறு பேசலானாள்:—

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"—என்ற அழகான பொன்மொழி எழுந்த செந்தமிழ் நாட்டிலே, இன்று காணப்படும் மக்களில் பெரும்பான்மையோர் பலவகைப்பட்ட பிணிகளுக்கு உள்ளாகி மருந்துப் புட்டிகளையே வாழ்க்கைத் துணைவர்களாகக் கொண்டு, சுவையற்ற உற்சாகமற்ற 'வாழ்வு' நடத்திவரும் கொடுமையை நினைக்க நினைக்க, என் மனம் தூண்டிலில் சிக்கிய புழுவைப்போல் பெரிதும் துடிதுடிக்கிறது. அத்தகைய மக்களின் துன்பங்களைப் போக்கி, நாட்டில் நடத்தப்பட வேண்டியிருக்கும் சுகாதாரப் பணிகளைச் சிறந்த முறையில் நடத்தக் கடமைப்பட்டிருக்கும் சுகாதார இலாகாவுக்கு, வைத்தியத் தொழில் அனுபவத்தில் சிறந்து விளங்கும் ஒருவரையே நியமிக்கவேண்டும். அவர் மற்ற வைத்தியர்களைப்போல் வைத்தியத் தொழிலை பொருள் வருமானத்துக்கு உரிய



தொழிலாக மட்டும் கருதாமல், அத் தொழிலை சமூக சேவைக்கு உரிய சீரிய தொண்டாகக் கருதி நடக்கும் அன்பும் அருளும் நிறைந்த நெஞ்சினராக இருக்கவேண்டும். அப் பதவிக்குத் தகுந்த தொண்டர், திரிசிரபுர வைத்தியர்—திரு. சௌரிராஜனே என்று எனக்குத் தோன்றுவதால், அவரையே சுகாதார இலாகா மந்திரியாக நியமிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

பின்னர், கலைமகள் எழுந்து நின்று பின்வருமாறு பேசலானாள்:—

"அன்பர்காள்! இன்றைய தமிழ்நாட்டில், எனது நிலை மிக மிகக் கேவலமாக இருக்கிறது. ரஸிகர்களின் அறிவுக்கு என்றும் திகட்டாத விருந்தளிக்கக் கடமைப்பட்டவளாகிய என்னால், இன்று எனது அருளையே நம்பி பெரும்பொருளைச் செலவழித்து பற்பல கவலைகளுக்கு உள்ளாகி பரீட்சைப் போர்களிலும் வெற்றிபெற்று வெளிக்கிளம்பும் மாணவர்களின் பசிப்பிணியைத் தீர்க்கக்கூட முடியாமல் கண் கலங்கி நிற்கிறேன். என்னிடம் எவ்வளவோ அன்பு கொண்டிருந்த மாணவர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையைச் சகிக்க முடியாமல் என்னைப் பழி தூற்றும்போது, தூக்கிட்டுக்கொண்டு செத்து விடலாமா என்று கூட எனக்குத் தோன்றுகிறது. என்னையே மனப்பூர்வமாக நம்பி நிற்கும் ஏழை ஆசிரியர்கள் அனுபவிக்கும் கொடிய துன்பங்களைப் பார்க்கும்போது, என் கண்களிலிருந்து இரத்தத்துளிகள் சொட்டுகின்றன. அறிவு விளக்கத்திற்கும் ஆன்மஞான வளர்ச்சிக்கும் மாணவர்கள் கல்வி பயின்ற காலம்போய், சுயமதிப்பற்ற அடிமை வேலைக்குத் தங்களைப் பண்படுத்திக்கொள்ளும் பொருட்டு மாணவர்கள் கல்வி பயின்றுவரும் தற்கால நிலையை நினைக்க நினைக்க, 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்ததுபோல்' எனது நெஞ்சு கொடிய சித்திரவதைக்கு உட்படுகிறது. தேச பக்தியையும் வீர உணர்ச்சியையும் பெருக்கவேண்டிய சீரிய கல்விக்குப் பதிலாக, சுயநலப்பித்தையும் அடிமை மோகத்தையுமே வளர்க்கும் அயல்நாட்டுக் கல்வியே தற்காலத் தமிழ்நாட்டிலுள்ள கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வருவதைச் சிந்திக்குந்தோறும், என் மனம் பெரிதும் புண்படுகிறது. காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியிலேனும், அக் குறைகளெல்லாம் விரைவில் ஒழிக்கப்படவேண்டும். அப்பணியைத் திறம்பட நடத்தக்கூடிய கல்வி இலாகா மந்திரியாக, திரு-சுப்புராயனை நியமிக்கலாமென்பது என் எண்ணம். சபையோர்க்கும் அதில் ஆட்சேபமிராதென்று நம்புகிறேன்."

பின்னர், பொது மராமத்து இலாகாவை ஜனாப்-யாகூப் ஹஸனிடம் ஒப்புவிக்கலாமென்று, முஸ்லிம் குலத்திற் பிறந்து சிறந்த ராமபக்தராக விளங்கிய கபீர்தாசரும்; கைத்தொழில் இலாகாவின் நிர்வாகத்தை திரு. வி. வி. கிரியிடம் அளிக்கலாமென்று, தேவசிற்பியாகிய விச்வகர்மாவும்; விளம்பர இலாகாவை திரு. எஸ். இராமநாதனிடம் ஒப்புவிக்கலாமென்று, ஆத்திகர்கள்—நாத்திகர்கள்—இகழ்வோர்—புகழ்வோர்—முதலிய அனைவருக்கும் தோழராகிய நாரதமா முனிவரும்; நீதிமன்ற—சிறை இலாகாக்களை திரு-ராமன் மேனனிடம் ஒப்புவிக்கலாமென்று, மனுச் சக்கரவர்த்தியும்; ஸ்தல-ஸ்தாபன இலாகாவை திரு—கோபால் ரெட்டியிடம் ஒப்விக்கலாமென்று, பாண்டவர்களின் தலைவராகிய தர்மபூபதியும் ஒருவர் பின் ஒருவராக எழுந்து நின்று மிக அழகாகப் பேசி அமர்ந்தனர்.

அதன்பின் எழுந்து நின்ற ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ''ஒருவன் கொந்தளிக்கும் பெரிய கடலின்மேல் சிறியதொரு படகில் அமர்ந்து பிரயாணம் செய்வதால் எவ்வித பயமுமில்லை; ஆனால், அவன் அப் படகுக்குள் கடல் நீர் புகுந்து விடாதவாறு கவனித்துக் கொண்டிருப்பதில், எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அத்தியாவசியம். அதுபோல், தேசீய வீரத் துறவி ஒருவர், ஜனப் பிரதிநிதி சபையின் தலைவராக அமர்வதில் குற்றமில்லை; ஆனால், பதவி மோகம்—அகங்காரம்—ஆடம்பரப் பித்து முதலியவை அவரது மனத்திற்குள் புகுந்துகொண்டு விடாதபடி நடந்து கொள்வதில், அவர் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அத் தலைவர் தமது பதவியின் கௌரவத்தைக் காப்பதற்காக தம்மை விலையுயர்ந்த ஆடைகளால் அலங்கரித்துக் கொள்ள வேண்டியது முற்றிலும் அநாவசியம்; அவரது பதவியின் கௌரவத்தைக் காக்க, அவரது மனத்தூய்மை ஒன்று மட்டுமே போதும்; அவர் பாரதநாட்டில் வறுமையின் கொடுமையால் பெரிதும் வருந்தி நிற்கும் லட்சக் கணக்கான 'தரித்திர நாராயணர்க'ளின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேச ஊழியர்களின் தலைவரேயன்றி, அதிகாரச் செருக்கு மிகுந்தவர்களின் தலைவரன்று. ஆதலால், தமிழ் மாகாண சட்டசபைத் தலைவரின் உயர்ந்த ஆசனத்தில் அமர வேண்டியவர், சட்டை—தலைப்பாகை முதலியவை எவையுமின்றி, என்னைப் போல் இரண்டு சின்னஞ்சிறு துண்டுகளை மட்டும் உடுத்திக் கொள்வதே போதும். அத் தலைமை பதவிக்குத் தகுந்த வீரர், புலவ—சாம்பமூர்த்தி என்பதே என் கருத்து''—என்று கூறி அமர்ந்தார்.

பின்னர், வீரக் களை ததும்பும் முகமுடைய பராசக்தி தேவி எழுந்து நின்று, பின்வருமாறு பேசலானாள்:—

''அன்பர்களே! இது காறும் பேசிய சகோதர—சகோதரிகளுள் எவரும் பெண்ணினத்தினரின் முன்னேற்றத்தைக் குறித்து ஒரு வார்த்தையும் கூறவில்லை. காதலிகளாக இருந்து காதலர்களின் வீரத்திற்கும் தாய்மாராக இருந்து புதல்வர்களின் வீரத்திற்கும் ஊக்கம் ஊட்டி நேச சேவை மோகத்தை வளர்க்கக் கூடிய பெண்மணிகளின் துணையின்றி, விடுதலைப் போரில் ஆடவர்கள் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. பிள்ளை பெற்றுத் தள்ளிக் கொண்டிருக்கும் இயந்திரங்களாக இருப்பதும் அடுப்பங்கரைக்குள் புகுந்து கொண்டிருக்கும் அபலைகளாக வாழ்வதுமே பெண்களின் கடமையென்று பிரமன் அவர்களது தலையில் எழுதி விட வில்லை. தேச சேவையில் ஆடவர்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை பெண்களுக்கும் உண்டு. அயல் நாட்டு நாகரிகத்திற்கு அடிமைப்படாவண்ணம் மக்களைத் தடுத்துக் காத்து தேசபக்தி ஊட்ட வேண்டிய கடமையில், ஆடவர்களைப் போலவே பெண்களுக்கும் 'சரி—நிகர்—சமான'மான பங்கு உண்டு. வீட்டுச் சிறையை விட்டு வெளிப்படக் கூடாதென்று மாதர்களுக்கு 'பூச்சாண்டி' காட்டி அடக்கி ஆண்டுகொண்டிருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. எத்தகைய கொடிய சோதனைகளிலும் சிறிதளவும் மன உறுதி கலங்காது நிற்கக்கூடிய சீரிய வீரம், பெண்களுக்கே சிறப்பாக உண்டு. ஆடவர்களாகிய யானைகளைத் தமது கண்ணோக்கத்தாலும் அன்பின் வலிமையினாலும் தங்களுக்குக் கட்டுப்படுத்தி அடக்கியாளக் கூடிய சக்தி, பெண்களாகிய சிங்கங்களுக்கே உண்டு. கடுமையான காரியங்களை நிர்வகித்து நடத்தக் கூடிய



வீர சக்தி, ஆடவர்களைக் காட்டிலும் பெண்களுக்கே சிறப்பாக உண்டு. அதை உலகுக்கு அறிவுறுத்துவதற்காகவே, எனது கணவர் மாட்டு வாகனத்தில் ஏறித் திரிந்துகொண்டிருப்பவராக இருந்தும், நான் மட்டும் சிங்கவாகனத்தில் ஏறித் திரிந்துகொண்டிருக்கிறேன். ''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்—திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்''—என்று பாரதி பாடியவாறு, தங்களைத் தாங்களாகவே காத்துக்கொள்ளக் கூடிய வீர சக்தி பெண்களுக்கு உண்டு. ஆதலின், தேச சேவையில் தீவிர உற்சாகத்துடன் ஈடுபடக் கூடிய சந்தர்ப்பம், செந்தமிழ் நாட்டிற் பிறந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்பது என் நெடுநாளைய பேரவா. தேச பக்தி மிகுந்த வீரப் பெண்மணிகளுக்குச் சிறந்த வழிகாட்டியாக இன்றைய தமிழ்நாட்டில் விளங்குபவள், ஸ்ரீமதி—ருக்மணி லட்சுமிபதியே என்பது என் கருத்து; அவ்வீரச் செல்விக்கே ஜனப் பிரதிநிதி சபையின் உபதலைவர் பதவி அளிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில், இங்கு கூடியிருக்கும் அன்பர்களில் எவருக்கும் எத்தகைய ஆட்சேபமும் இராதென்று நம்புகிறேன்.''

முடிவில் எழுந்து நின்ற வங்க வீரக் கவிஞராகிய பங்கிம் சந்திர சட்டர்ஜி, ''இன்றைய பாரத நாட்டில் காணப்படும் தேசீய உணர்ச்சிக்கு முதல் வித்தாக விளங்கியதும் எனது ஹிருதயத்தினின்றும் பொங்கி யெழுந்த தேச பக்திப் பித்தினால் உருக் கொண்டதுமான 'வந்தேமாதர' கீதத்தை, அதன் பிறப்பிடமாகிய வங்கநாட்டில் இன்றிருக்கும் சட்டசபையில் பாட முடியாமலிருப்பதை நினைக்க நினைக்க, என் நெஞ்சினின்றும் பொங்கி யெழும் அவமானத்தை என்னால் சகிக்கவே முடியவில்லை. எனினும், பாரதத்தாயின் வணக்கமாகிய அந்த வீர கீதம், பாரத நாட்டிலேயே தேச பக்திப் பித்தில் இன்று முதன்மை பெற்று விளங்கும் சென்னை மாகாணத்திலுள்ள சட்டசபையில், அதன் கூட்டம் நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும் தீவிர உற்சாகத்துடன் பாடப்பட்டு வருவதைக் கண்டு பரம சந்தோஷமடைகிறேன்''—என்று கூறி, அக்கீதத்தை உற்சாகம் பொங்கித் ததும்பும் உச்சக்குரலில் பாடினார். அச்சமயம், எல்லோரும் எழுந்து நின்றுகொண்டிருந்து, முடிவில் சபாமண்டபம் முழுதும் அதிரும்படி **''ஜய ஜய பாரத!'' ''வந்தே மாதரம்!''**—என்று வீரகோஷம் எழுப்பினர்.

* * * *

உடனே, திடுக்கிட்டு விழித்துக் கொண்டுவிட்ட என் கண்ணெதிரில், பழைய மண்ணுலகமே காட்சி யளித்தது. தலைவர்களின் பெயர்ப் பட்டியைக் கையில் வைத்துத் தவித்துக் கொண்டிருந்த ராஜாஜி கவலை மிகுதியால் தம்மை மறந்து ஸ்ரீ கிருஷ்ண தியானத்தில் ஆழ்ந்திருந்த காலத்திலே, அவரது ஆன்ம நாயகராகிய கண்ணபிரான் அவரைத் தேவலோகத்திற்கு அழைத்துச் சென்று, மறைந்து நின்றிருந்து தேவ சபையின் விசேஷக் கூட்ட நடவடிக்கைகளைக் காட்டித் திரும்பக் கூட்டிக் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போயிருக்க வேண்டுமென்ற நினைவோடு உறங்கிய நான் கண்ட காட்சியை வெளியிட்டு விட்டேன். நேயர்களே! சென்னை மாகாண மந்திரி சபையை பூர்ண திருப்திகரமாக அமைத்ததற்கு உரிய பெருமையெல்லாம் தேவேந்திரனுக்கே சேர வேண்டியதென்னும் இரகசியத்தை, இப்பொழுது உணர்ந்து கொண்டு விட்டீர்களல்லவா?

# பொருள் நூல்

ஸ்ரீகண்ட இராமன், எம். ஏ., எல். டி.,

(*Rights Reserved.*)

(220–வது பக்கத் தொடர்ச்சி.)

முன்பு சொன்ன விஷயங்களில் இருந்தும் கேட்புச் சட்டம் (The Law of Demand) எத்தகைய முக்கியமான விஷயம் என்பதைப் பொருளாதார நூலைப் படிக்கும் நண்பர்கள் செவ்வனே அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேம். ஒரு சாமான் அல்லது சேவை (Service)யின் விலை உயர்ந்தால், அது கேட்பதைக் குறைவு செய்யும். அத்தகைய விஷயம் அதைத் தொடரும். அதேமாதிரி விலை கம்மியானல், கேட்பது (Demand) அதிகமாகும். (A rise in the price of a commodity or service is followed by a reduction in demand and that a fall in price is followed by an increase in demand). மேற்சொன்ன உண்மை ஸ்திரமாக நிற்பதன்று. சில விஷயங்கள் அதை மாற்றுவிக்கலாகும்.

கேட்பது வளையும் (Elasticity of Demand) என்பதை நாம் ஆராய்ச்சி செய்துழி சில சாமான்களின் கேட்பு அதிகமாக மாருது இருப்பதைப் பார்த்தோம். விலை மாறுபட்டாலும் ரொட்டியை வாங்குபவர்கள் விலை யாறுதல்களை அவ்வளவாக கவனிக்கவில்லை. என்? ரொட்டி முக்கிய உணவு பதார்த்தம்.

மற்றும் ஒரு சாமான் அல்லது சேவையைப்பற்றி எழும் கேட்பு மாறுதல்கள் விலை மாறுதல்களைப் பின் பற்ருமல் தாமாகவே உண்டாகும். மாந்தர்களுடைய நாகரீக நடையுடைகள், கால மாறுதல்கள், பழக்க வழக்கங்கள்—இவை கேட்பதில் மாறுதல்களைச் செய்யும். மோட்டார் வண்டிகள் அதிகமாக ஒரு நகரத்தில் இருக்குமானல், அது முன்பு ஓடிக்கொண்டிருந்த குதிரை வண்டிகளின் உபயோகத்தை முக்கால் பாகம் குறைத்து விடுகிறது.—இது, குதிரை வண்டிகளை ஏற்படுத்துவதில் எழும் வாடகைக்கு சம்பந்தமில்லாத வகையில் அன்றே பாதிக்கிறது? குளிர் காலங்களில், அதுவும் குளிர் தேசங்களில், கம்பளித்துணி அதிகமாக கேட்கப்படுகிறது. வெயிற்காலத்தில் பருத்தியினல் ஆன துணிகள் உபயோகத்தில் இருக்கின்றன. இதனல் ஜனங்கள் விலையைமட்டும் கவனித்து கேட்பதை (Demand)ச் செய்கிறர்கள் என்பது இல்லையென்று விளங்குகிறது. விலையை யநுசரிணை செய்யாமல் தானகவே எழும் கேட்பு (Demand) விலை அதிகரித்தால் கேட்டை பாதித்து, வாங்குவதைக் குறைக்கும். அல்லது சில சமயங்களில் அதே கேட்டை கம்மியாகும் விலை அதிகப்படுத்தும். உதாரணமாக மோட்டார் வண்டிகள் அதிகமாகக் கேட்கப்படும் கேட்பு அவற்றின் குறைந்த விலையைப் பின்பற்றி நிற்பதில்லை. முன்பு ஒரு தனவந்தனுக்கு எது முக்கியமான ஆடம்பர வஸ்துவாக இருந்து வந்ததோ அது இப்பொழுது சம்பிரதாய வேண்டும் சாமான் (Conventional necessity) ஆக மத்திய வகுப்பினருக்கு ஆகிவிடுகிறது. வாங்குபவருடைய நோக்கத்தில் மதிப்பு குறைந்துவரும் ஒரு சாமானின் கேட்பு குறைந்துவருவதை அதனுடைய குறையும் விலை சிறிதுநாள் காப்பாற்றிவரும். நூதன முறையில் செய்யப்பட்ட ஒரு பிரிட்டிஷ் மோட்டார் வண்டியில் இருக்கும் மோகம் குறைவதை ஒரு அந்நியநாட்டு மோட்டார் வண்டியின் குறையும்விலை காப்பாற்றி, சிறிதுகாலம் அதே நிலைமையில் வைக்கப் பார்க்கிறது.

இதனல் விலைமட்டும் கேட்பு என்பதை மாற்றிவிடுகிறது என்பது உண்மையல்ல என்று தெளிவாக விளங்குகிறது. விலை மாறுதல்களினல் கேட்புச் சட்டம் மாறினலும் மேல்சொன்ன காரணங்களாலும் விலையைச் சட்டை செய்யாமல் மாறும் காரணம் என்னவென்று வாசகர் கேட்கலாம். ஒரு சாமானின் உபயோகமேதான் வாங்குபவருடைய உள்ளத்தை பொறுத்திருக்கிறது என்றும் கூறலாம். கேட்பில், நீடித்த கால மாறுதல்கள் உண்டாவதை நாம் கவனிக்கும் பொழுது மேல்சொன்ன விஷயங்கள் உபயோகப்படும். மேலும் நாம் சொன்ன கேட்புச்சட்டத்தை, சிறிய காலத்துள், உபயோகமாகும் முக்கிய சாமான்களுக்கு, (இணங்காத அல்லது வளையாத தன்மையைக் கொண்டிருக்கும் கேட்பிற்கு) சுலபமாக அநுசரிக்கலாம். இது விலையில் சிறு மாறுதல்கள் உண்டாவதைத் தழுவமுடியும். இதனல் "டிமாண்டு" சட்டத்தைச் சரியாகப் பின்வருமாறு சொல்லவேண்டும். அப்படிச் சொன்னல் கால அமிசம் நீங்கும். அப்பொழுது கேட்புச்சட்டம் பெரிய உண்மையான சட்டமாகத் திகழும். ஒரு குறித்த காலத்துக்குள், ஒரு சாமானின் அல்லது சேவையின் கேட்பு அப்பொழுது இருக்கும் விலையில் அதிகமாகும். விலை அதிகமாகும் பொழுது அவ்வளவு அதிகமாக இருக்காது. அதேமாதிரி கேட்பு (Demand) அப்பொழுது இருக்கும் விலையில் கம்மியாக இருக்கும். அதற்கும் குறைந்த விலையில் அக்கேட்பு அம்மாதிரி இராது. (At any time, the demand for a commodity or service at the prevailing price is greater than it would be at a higher price and less than it would be at a lower price.)

## பிரதியாக வைக்கும் சட்டம் (The Law of Substitution.)

இதை ஆங்கிலத்தில் சம"மார்ஜினல்" உபயோகச் சட்டம் (The Law of Equi-Marginal Utility) என்றும் சொல்லுவர். ஒரே சாமானை பலவித உபயோகங்களுக்கு வைத்துக் கொள்ளும் தெரிந்து எடுத்தலைக் குறிக்கும்.

இந்த சட்டம் பொருள் நூல் முழுவதும் ஊடுருவிப் பாய்ந்துளது. உபயோகம் (Consumption), உண்டாக்குதல் (Production), பங்கிடுதல் (Distribution) ஆகிய பெரிய பொருள் நூல் பிரிவுகளில் உபயோகமாக இருக்கிறது. இங்கு உபயோகத்தைப் பொறுத்த மட்டில் இந்தச் சட்டத்தைப்பற்றிச் சொல்லுவோம்.

பலவித உபயோகங்களுக்கு ஒரு சாமானை ஒருவன் செய்யக் கூடுமானல், அந்த மனிதன் அதை இந்த உபயோகங்களில் சம மார்ஜினல் உபயோகம் வருமாறு பங்கிட்டுக் கொள்ளுவான் அல்லது செலவிடுவான் என்று இந்தச் சட்டம் சொல்லும். அதாவது அவன் அதை எந்த உபயோகத்திற்கு வைத்தாலும் சம மார்ஜினல் உபயோகம் ஒரேமாதிரியாகவேயிருக்கும். ஏன்? இந்த வழியைக் கைப்பற்றினலொழிய ஒரு மனிதனுக்கு சம மார்ஜினல் உபயோகம் கிடைக்காது. அவன் திருப்தியும் அடைய முடியாது. ஆதலால் ஒவ்வொரு விவேகமுள்ள மனிதனும் சரிசம மார்ஜினல் உபயோகம் வரும் வழியைக் கையாளவேண்டும்.

ஒரு மனிதனிடம் செம்மறியாட்டு ரோமம் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவன் உண்மையில் விவேகியானல், அந்த ரோமத்தைப் பல உபயோகங்களுக்கு வைத்துக்கொள்ளுவான். ஒவ்வொரு உபயோகத்திலும் சரிசம திருப்தியை அவன் அடைவான். சட்டைகள், "சாக்ஸ்" (காலுறை) முதலாயினவற்றை அவனுக்கு எத்தனை வேண்டுமோ அத்தனையும் செய்து கொள்ளுவான். நான்கு சட்டைகளும் ஆறுஜோடி "சாக்ஸ்"களும் தேவையானல் அவற்றைச் செய்தாலொழிய சம மார்ஜினல் உபயோகம் அவனுக்கு கிடைக்காது. ஒவ்வொரு உபயோகத்திலும் அவனுடைய திருப்தி சமமாக இருக்க வேண்டுமானல் அவன் தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். இல்லாவிடில் பலன் இல்லை.

இதேமாதிரி பணத்திற்கும் பிரதிநிதியாக வைக்கும் சட்டம் மேல் சொன்னதைப்போல் ஒருவனிடம் பணம் இருந்தால் அவன் அதை பல உபயோகங்களில் விநியோகிப்பான். ஒவ்வொரு உபயோகமும் மற்ற உபயோகம்போல் சம "மார்ஜினல்" உபயோகத்தைப் பயக்கும். அப்பொழுதுதான் அவனுக்கு மிக்க திருப்தி ஏற்படும்; வேறு வழியில் அதைச் செலவழித்தால் பலன் சரியாக ஏற்படாது. அவனுக்கு நான்கு "பூட்ஸ்"கள் எட்டு கோட்டுகள் ஐந்து தொப்பிகள் வேண்டும் மூன்று கோட்டுகளும், பதினறு தொப்பிகளும் நான்கு பூட்ஸ்களும் அவன் வாங்கினல், ஒவ்வொரு உபயோகத்தின் "மார்ஜினல்" உபயோகம் சமமாக இராது.

இச் சட்டம் தற்காலத்தும் வருங்காலத்தும் நிகழும் உபயோகங்களுக்கும் உபயோகப்படும். (தொடரும்.)

## புதிய ஜீவிய சந்தாதார்

இவ்வருஷம் நமது "ஆனந்த"னுக்கு தஞ்சாவூர் ஜில்லா, மணமேல்குடி ஸ்ரீமதி, ராம. பா. மூனியம்மாள் ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்துள்ள நற்செய்தியைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். நம் "ஆனந்த"னை ஆதரவு செய்யும் நோக்கத்துடன் ஆயுட் சந்தாதாராக முன்வந்த ஷை அம்மையாருக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதலைச் செலுத்துவதோடு, அவர் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறோம். பத்திராதிபர்.

# வாழ்க்கையின் மாண்பு

(T. R. ராஜகோபால்)

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன், இப்புவியின் மீது வேட்டையாடிக் கிடைத்தவைகளைத் தின்று, பள்ளத்தாக்குகளிலும் குகைகளிலும் வசித்து வந்த "அநாகரீகர்" காலத்தில், வல்வழக்குகளும் யுத்தங்களும் இருந்தனவாகத் தெரியவில்லை. வேட்டையாடுதற்கான இடங்கள் விஸ்தாரமாகவும் பிராணிகள் அதிகமாகவும் இருந்தமையாலும், உழைப்பும் கவலையும் அச்சமுமின்றித் தின்பதற்கான காய் கறி கிழங்கு வர்க்கங்கள் தாராளமாகக் கிடைத்ததாலும், ஜனத்தொகை அதிக மில்லாமலிருந்ததாலும் கலகங்களும் வழக்குகளும் நேரிடுதற்கு இடமில்லைபோலும்!

காலஞ் செல்லச் செல்ல வாழ்க்கை அநுபவங்கள் பெருகி விவேகம் சற்று வளரவே, மக்கள் தக்க இடங்களைத் தேடித் தங்கி, பூமியைச் செப்பனிட்டுச் சாகுபடி செய்து வாழ ஆரம்பித்தனர். அந் நாள் முதற்கொண்டுதான் சமூக வாழ்க்கை தலை யெடுத்து வளர்ந்தது. விவசாயத் தொழிலினின்றும், கூட்டுறவு வாழ்க்கையி னின்றும் பெரிய மாறுதல்கள் தோன்றின. அம் மாறுதல்களில் தலையாயது 'தன்னலச் சாதனம்' என்பதாகும். இதினின்று நாளேற நாளேற உலக வாழ்க்கையானது இன்னவிடர்கள் பூரிக்கப்பெற்ற வாழ்க்கையாக மாறவே கலகங்களும் போர்களும் உண்டாயின.

ஆதியில் இயற்கையன்னை அளித்த பொருள்களைச் சில மூர்க்கர்கள் கைப்பற்றித் தம்முடையன வென வீரம் பேசி வழக்காடுதற்கான தனி பொருட்க ளின்மையாலும், வீடுகளும், விளை நிலங்களும், நெய்யப்பட்ட உடுப்புக்களும், உலோகக் சாமான்களும் கையாளப் படாமையினலும், தன்னலப் பொருளும் கக்ஷிகள் அல்லது வகுப்புக்களும் ராஜாங்கமும் இருக்கவில்லை. பாறைக்கல்—எலும்பு—மரக்கட்டைகளால் செய்யப்பட்ட சர்வ சாதாரண வேட்டைக் கருவிகளும், விலங்குகளின் தோலினல் ஆக்கப்பட்ட உடைகளும், தழைகளாலும் வேர்களாலும் பின்னப்பட்ட கூடைகளுமே தான் உபயோகிப்பட்டன. சுருக்கமாகக் கூறினல், அக் காலத்திய வாழ்க்கையானது எளிய இன்ப வாழ்க்கையாக—சமதர்ம வாழ்க்கையாக விளங்கிற்று. மனித சமூகத்தில் தான், தன் உடைமை என்ற உணர்ச்சி யுண்டான பிறகுதான் சமூகப் பிளவுகளும் கக்ஷிகளும் ஜாதிப் பிணக்கமும் உண்டாயின. தனவான்—தரித்திரன், யஜமானன்—அடிமை, மிராசுதார்—பண்ணையாட்கள், மேலோர்—மத்தியர்—கீழோர் என்ற பிரிவுக ளெல்லாம் முளைத்தெழுந்து, செழிப்புடன் வளர்ந்து, நாலா பக்கங்களிலும் தன் விஷப் பற்களையும் கூரிய நகங்களையும் பதிக்கவே, மாந்தரிற் பெரும்பாலோரும் அல்லலுற்றுத் துடிக்க வாரம்பித்தனர்!

பேராவலும் உரிமை—உடைமைகளென்ற பாவனையும் சமூகப் பிளவுகளும் அந் நாட்களில் இல்லாம விருந்தமையால், ஆக்ஞா சட்டங்களும், கொடுங்கோலரசும், ராஜ தந்திரங்களும் தலை யெடுக்க வில்லை. எனினும் சமூகப் பழக்க வழக்கங்களும் கட்டுப் பாடுகளுமே தான் அக் காலத்தினரை ஒருவாறு அடக்கி ஒற்றுமையாகச் சேர்ந்து வாழச் செய்தன.

விவசாய வாழ்க்கையானது பல்வேறு நெருக்கடியான சந்தர்ப்பங்களைச் சமூகத்தினிடையே எழுப்பின ; தொழிற் பிரிவுகளுண்டாயின ; வழக்குகளும் சண்டை சச்சரவுகளும் ஆரம்பித்து அதிகரித்தன ; பின் சமூக வளர்ச்சிக்கும் க்ஷேமத்திற்கும் எண்ணிறந்த விதி விலக்குகளும் கட்டுப்பாடுகளும் ஆக்ஞாபிக்கப்பட்டன. அவ் விதி விலக்குகளை மக்களனைவரும் ஒட்டி ஒழுகச் செய்தற்காக அரசர்களும் தலைவர்களும், கிளம்பினர்கள். படிப்படியாகப் பிரபுக்களும் கொடுங்கோல் மன்னர்களும் மதாசாரியர்களும் பிரபலமாகித் தமக்குள் ஒருவர்க் கொருவர் துணைவராக நின்று மற்ற மக்களைத் துன்புறுத்தினர். இவர்களின் ஆரவாரங்களே தான் ராஜாங்கமும் ராஜ தந்திரங்களு மாயின போலும். அவ் வுன்னத பதவியினர்க்குள்ளும் இதர ஏழை யெளியர்க்குள்ளுமுள்ள சம்பந்தத்தையும் மாறுதல்களையும் வேற்றுமைகளையும் பலதிறப் போக்குகளையும் விரித்துரைப்பதுதான் தேச சரிதங்களாயின என்று கூறின் மிகையாகாது.

ஆதியில் சமத்துவமும் ஒற்றுமையும் கூடி விளங்கிய வாழ்க்கையானது நாளடைவில் சீர்குலைந்து, "நாகரீக வாழ்க்கை," அதாவது, "நீ; நான்" "என்னுடையது ; உன்னுடையது" என்ற கற்பனைகள் சமூகத்துட்புகுந்து, அக் கற்பனைகளின் நிறைவேற்றத்திற்கும் நீடிப்பிற்கும் (அ)நியாயச் சட்டங்களும் (அ)நீதி ஸ்தலங்களும் அரசாட்சிகளும் உக்கிரப் போர் முறைகளும் மும்முரமாயின. அரசர்களும் பிரபுக்களும் மதக் காப்பாளர்களும் சுயநலத்தையும் செல்வாக்கையும் பலத்தையும் உரிமை யுடைமைகளையும் முன்னிட்டு இயங்கி, அவைகளைப் பெற்று அநுபவித்துக் காத்தற்கான உபாயங்களைக் கையாண்டு, இவ் வரும் பெரும் தொழிலுக்கு (!) அநுகூல மானவர்களை உயர்த்தி, ஏனையோர்களைப் பழித்து ஹிம்சித்துத் தண்டித்து அடக்கத் தலைப்பட்டனர் !

வாழ்க்கைக்கு அவசியமான கருவிகளும் குடியிடங்களும் தோலுடைகளும் அக் காலத்தினரால் பொது உடமைகள் என்ற கருத்துடன் செய்து உபயோகிக்கப்பட்டு வந்தன. "தேனீக்கள் ஒவ்வொன்றும் தமக்குப் பொதுவான கூட்டுடன் உள்ள சம்பந்தத்தை மறக்காது பொது நன்மைக்காக ஒத்துழைத்தல் போல், அவ் வாதி மனிதர்கள் தம் வகுப்பு அல்லது குலத்தினருடன் இணங்கி வாழ்ந்தனர்." அத்தகைய கூட்டுறவிற்கும் முதலாளிகளாலும் ராஜாங்கங்களினாலும் தம்முடைய சுபிக்ஷத்திற்காகவே ஆக்கப்பட்ட இப்போதைய சேர்க்கை அல்லது கூட்டங்களுக்கும் உள்ள வித்தியாசங்களும் பலனும் பலவாகும்.

ஆதியில் ஒவ்வொருவனுடைய ஒவ்வொரு உடைமையும் அவ்வவனின் உழைப்பினால் அவ்வவனுடைய உபயோகத்திற்காகவோ, அல்லது சமூகத்தினரின் பொது உபயோகத்திற்காகவோ செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதோவெனில், ஒருவனுடைய தனம்-ஆஸ்தி-அல்லது உடைமைகளெல்லாம் அவனுடைய தேகப் பிரயாசையினால் சேகரிக்கப்பட்டனவு மன்று; அவனுடைய சுயவுபயோகத்திற்காகவு மன்று. மேலும் அவைகளிற் பெரும்பான்மையும் சுயவுபயோகத்திற் கானவையு மன்று.



நாள் செல்லச்செல்ல, விவசாயமும் சில விலங்கினங்களைத் தம் ஊழியராக பழக்கும் முறையும் விருத்தியடையவே, ஜனத்தொகை அதிகரித்தது; புதிய வெவ்வேறு தொழிற்களும் தொழிற் பிரிவுகளும் முறையே ஓங்கின; உணவு பதார்த்தங்களும் இதர பண்டங்களும் சேமித்துக் குவிக்கப்பட்டன; தன்னல ஆஸ்தி வளர்ந்து வலுத்தது; ஏகாதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டது; பற்பல அன்னிய ஜாதிப்போக்குவரத்துக்கள் ஏற்பட்டன. இவைகளுடன் உலோகங்களின் உபயோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நகர வாழ்க்கைக்கும் வியாபாரத்தின் எழுச்சி வளர்ச்சி வியாபகங்களுக்கும் மேற்கூறியவைகளே காரணமாயின போலும். வியாபார விருத்திதான் தொழிற்சாலைகளுக்கும் தொழிற் பிரிவுகளுக்கும் பிறப்பிடமாயது; தன்னல ஆஸ்தி, அல்லது தன்னுடைமைக்கு எருவாகவும் பக்கபலமாகவும் விளங்குவது; சமூகக் கக்ஷிகளுக்கு விளை நிலமாவது; பிணக்குகளுக்கும் போர்களுக்கும் தூண்டுகோலாவது; போர் வீரர்களின் குறியும் அடைக்கல ஸ்தானமுமாவது.

முன் காலத்தில், பண்ட மாற்றங்களினால் வியாபாரம் நடைபெற்று வந்தது. மேன்மேலும வியாபாரம் பெருகிப் பரவியபொழுது, கிளிஞ்சில், ஆடு மாடுகள், பித்தளை, செம்பு, வெள்ளி, பொன் முதலியவைகள் முறையே நாணயப் பொருட்களாக உபயோகிக்கப்பட்டன. நாளுக்குநாள் நாணய ஏற்பாடுகளினாலும், வியாபார அபிவிருத்தியினாலும், உலகினர் போக்குவரத்துக்களினாலும் உண்டான நிகழ்ச்சிகளையும் பலன்களையும் தற்கால நாகரீக உலகப்போக்கின் அல்லோலக் கல்லோல நிலைமையினின்றும் ராஜதந்திரிகளின் பிரசங்கங்களினின்றும் தெளிவாக அறியலாம்.

ஒரு பக்கத்தில், ஜனத்தொகை பெருகி ஜனநெருக்கம் ஏற்படுகின்றது. மறுபக்கத்தில், சில நூற்றுவரின் செல்வாக்கும் தனமும் இவைகளைப் பரிபாலித்துப் பெருக்குதற்குமான முறைகளும் சாதகங்களும் வெளியாகி அதிகரிக்கின்றன. இவைகளெல்லாம் ஒன்றையொன்று பாதித்துத் தாக்குகையில், பொதுஜன சமூகத்தில் பற்பல மாற்றங்கள் சம்பவிக்கின்றன. சுருக்கத்தில், பொருளாதாரத்தின் நிலையினின்று வகுப்புப் பிரிவுகளும், வகுப்புப் பிரிவுகளினின்று பிணக்கமும் பொறாமையும் வழக்குகளும், இவைகளினின்று சமூக கிளர்ச்சியும் மக்கள் எழுச்சியும் உண்டாகிப் போராகப் பரிணமிக்கின்றன; இதினிமித்தம் போர்க்கருவிகளும் கபடோபாயங்களும் பிரபலமாகின்றன. மீண்டும் இவைகள் மூலமாகத் தேசத்தினரின் மனப்பான்மையும் நோக்கங்களும் பற்பல விதங்களில் நூதன மாற்றங்கள் உறுகின்றன.

சீதோஷ்ண ஸ்திதி, நிலத்தின் குணம், வாழ்க்கை யாதரவுகள், சமூக அமைப்பு அல்லது வன்மையாகியவைகளின் வித்தியாசங்களால் பற்பல தேசத்தினரும் சரிசமமான வளர்ச்சியுற முடியாமற் போகின்றது. மூலதனம் அல்லது பொருளாதார வேற்றுமைகளாலும், கைத்தொழிற்களின் தாரதம்மியங்களாலும், இவைகளைப் பிரதிபலிக்கும் குண நடத்தைகளின் வித்

தியாசங்களாலும் மானுட ராசியானது பற்பல ஜாதியாராகவும், ஒவ்வொரு ஜாதியும் அநேக வகுப்புக்களாகவும் விதம்விதமான கக்ஷிகளாகவும் பிரிந்தது. எண்ணற்கரிய வகுப்புக்களும் கக்ஷிகளும் உண்மையில் பொருளுளோர்—பொருளிலார் என்ற இரு பிரிவுகளின் பற்பலக் கிளைகளே போலும். ஞானிகள் முதல் மூடர்கள் ஈறாகவும், அரசர் முதல் கிருஷிகன் வரையிலும், அமைச்சர் முதல் மிராசுதார் ஈறாகவும், சுருக்கத்தில் மக்களனைவரையும் ஒவ்வோர் துறையில் இயக்கி யாட்டுவது பொருளாதார நிலைமையே யாகும். மேற்குறிப்பிட்ட வித்தியாசங்களின் காரணத்தினால் வலியர் எளியரைத் தாக்கி, மூலதனங்களையும் பொதுப் பொருட்களையும் பேராவல் மிக்க சீமான்கள் நயவஞ்சகத்தினாலும் மூர்க்க வழிகளாலும் அபகரித்துத் தம் உடைமைகளாக்கியும், லக்ஷக்கணக்கான பேதைகளை அரைவயிற்றுக் கஞ்சியும் முழுத் துணியு மில்லாது வருந்தி நெட்டுயிர்த்து மாயும் வெறும் உழைப்பாளிகளாக்கியும், ஒரு பொழுதும் எவ்விதத்திலேனும் மேலெழ விடாமல் அடக்கி, அவ்வப்பாவிகளின் உயிர்க் குருதியைக் குடித்து எப்பமிட்டுக் குதூகலித்தும் வருகின்றார்கள்! மேலும், மதப் பிரசாரகர்களையும் புலவர்களையும் தம் பக்கத்தில் சேர்த்துக்கொண்டு, மதக் கொள்கைகளையும் தர்மமார்க்கங்களையும் கற்கும் முறைகளையம் கல்வியின் கருத்துக்களையும் தமக்கானபடி திரித்து மன்பதைகளிற் பெரும்பான்மையரையும் அஞ்ஞானக் காரிருளில் உதைத்துத் தள்ளி வலிவருத்த மேக்கங்களாகிய படுகுழியுள் அழுத்துவதுடன் நிற்காமல், அவர்கள் மேலெழா வண்ணம் பந்தோபஸ்துகளும் செய்து வருகிறார்கள்!

வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பதார்த்தங்கள் வியாபாரப் பண்டங்களாக, அதாவது பெரும்பெரும் லாபமளிக்கும் கருவிகளாக மாற்றப்பட்டது முதற்கொண்டுதான் பலாத்கார அபகரிப்பு, அதாவது தன்னலத்திற்காகப் பிறரை உழைக்கச் செய்து, அவ் வுழைப்பின் பலனை மிகச் சிலரே அநுபவிக்கும் முறை தொடங்கியது போலும்.

கொடிய கபட வழிகளில் சிற்சிலரால் கைப்பற்றி அநுபவிக்கப்பட்டு வரும் சாதனங்களும் சாதகங்களும் பொதுவுடைமைகளாக மாற்றப்படும் வரையிலும் சமூகப் பிளவுகளும் கக்ஷிகளும், இவைகளினின்று ஜனக்கிளர்ச்சிகளும் புரட்சிகளும், குடிகளுக்கும் ராஜாங்கத்தினர்க்கும் பற்பல ராஜாங்கத்தினர்க்குள்ளும் போர்களும் நிகழ்ந்துகொண்டுதா னிருக்கும். அந்நாள் முதல் இந் நாள் வரையிலும் தொடுக்கப்பட்ட போர்களை யெல்லாம் தீர்க்கமாக ஆராய்ந்து பார்ப்போமாயின், மேற்சொல்லிய விஷயங்களின் உண்மை தெளிவாக விளங்கும். தன் தேசத்தி லாகட்டும், அல்லது அந்நிய தேசங்களி லாகட்டும், பிறர் பொருட்களை அபகரித்துத் தம் இனத்தவ ரல்லாதாரை முடியுமாயின் அழித்து, அல்லது, பூண்டோடு அழிக்க முடியாமற் போமாயின் அவர்களைப் பற்பல விதங்களில் பலஹீனர்களாக்கி அடக்கி ஆளுதலே ஒவ்வொரு ராஜாங்கத்தின் தொழிலா யிருந்தது, இன்னமும் இருந்து வருகின்றது! உடைமைப்பற்றே ஆதாரமாகின்றது; பொருளாதார நிலையே பக்கபலமாகின்றது; விஞ்ஞான சாஸ்திரங்களின் ஒருதலை சார்பான பயிற்சியும் தேர்ச்சியும் முடிபுகளுமேதான் வெற்றிக்கருவிகளாகின்றன.

இயந்திர சாலைகளும் இயந்திரத் தொழிற்களும் நாளுக்கு நாள் விருத்தியடைகையில், முதலாளிகளின் செல்வாக்கும் வர்த்தகர்களின் பலமும் பெருகின; அதி விரைவில் எண்ணிறந்த பல்வேறு சாமான்களைத் தயாரிக்கக்கூடிய வழிகளும் நுட்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வரவே இயந்திரசாலைகள் பரவின. நாள் செல்லச் செல்ல முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமுள்ள வேற்றுமை விபரீதங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. மறுபக்கத்தில், தொழிலாளருக்குள் புத்துணர்ச்சி தோன்றி முதலாளிகளின் குரூரச் செயற்களையும் தனம் சேகரிக்கும் தந்திரங்களையம் உணர்ந்தறிந்து, பழைய காலங்களில் இறுமாந்து மனம் போனபடி வாழ்ந்த வீணர்களையும் விடர்களையும், அதாவது அரசர்களையும் சீமான்களையும் மதஸ்தர்களையும் எதிர்த்து முறித்தது போல், தம்மையும் தம்மைப்போன்ற பாமர ஏழையர்களையும் அச்சுறுத்திச் சிறைப்படுத்திச் சுட்டுத் துன்புறுத்தி அடக்கி வரும் தனபதிகளின் ஆதிக்கத்தைத் தகர்த்துத் துகளாக்கத் தொழிலாளிகளனைவரும் முன்வந்துள்ளனர். யதார்த்தத்தில், இக்காலத்திய ராஜாங்கங்களெல்லாம் வர்த்தக ஆக்ஷிகளே போலும். புராதனக் கொடுங்கோலரசுகளைவிட பன்மடங்கு அதிகக் கொடிய ராஜாங்கம் இக்காலத்தியதேயாம்; அதனினுங் கொடிது அன்னியர் ஆக்ஷி.

ஒவ்வொருவருக்கும் வேண்டிய உணவும், உடையும், வீடும், கல்வியறிவும் பெற்று இனிதிருத்தற்கான சாதனங்கள் அபரிமிதமா யிருப்பினும், பல கோடி மன்பதைகள் துடித்தற்குக் காரணமென்னையோ? தொத்துப் பிராணிகளுக்குங் கடையரான—பேராசைப் பேய்களான—ஒரு சில முதலாளிகளின் அக்கிரமங்களேயாம். நாள்தோறும் இடைவிடாது தொழில் செய்தும், பல கோடிப்பேர்கள் கஞ்சியும் கந்தையுமில்லாது தவிப்பதற்குக் காரணமென்னையோ? ஏராளமான விளை பொருட்களையும் தின்பண்டங்களையும் உடுப்புக்களையும் அம் மாநுடத் துரோகிகள் லாபத்தினிமித்தமும், தொழிற்சாலைகள் ஓய்வில்லாமல் சத்தமிட்டுக்கொண்டிருத்தற்கும், அச் சாதனங்கள் பெரும்பான்மையையும் தீக்கிரையாக்கியும், அலை கடலுள் எறிந்தும், வேறு விதங்களில் அழித்தும் வருவதேயாம்!

இதரக் கண்டத்தினர்களை ஐரோப்பிய வணிகர் ஆக்ஷியானது சுயநலம்—சுய லாபம்—சுய மேன்மைகளின் பொருட்டு பற்பல கபடோபாயங்களாலும், தந்திர உடன்படிக்கைகளாலும், அல்லது கொடூரப் போர் முறைகளாலும் வஞ்சித்து, அல்லது அடக்கி வருகையில், அவர்களுக்குள்ளேயே மேற்காட்டிய காரணங்களினால் பொறாமையும் பகைமையும் யுத்தங்களும் உண்டாகி ஒருவரை ஒருவர் வெல்லுதற்கான சூழ்ச்சிகளில் தம் காலத்தைக் கழிக்கின்றனர்!

தான் மாத்திரம் இவ் வுலகசுகங்களைப் பெற்று போகித்திருக்கவேண்டுமென்ற பைத்தியமும், கொடிய ஆவலுமுடைய ஒவ்வொரு புல்லிய ஆக்ஷியையும் சீர்திருத்துவது எவ்வாறோ? அம் மாநிடப் பதர்களின் சண்டைச் சச்சரவுகளுக்கும் பந்தயங்களிலும் உல்லாசப் போக்குகளிலும் உழன்றுரமித்திருத்தற்கும் வேண்டிய வசதியையும் பொருளையும் அளிப்பதற்காக ஏனையோர்கள் பல்வேறு கஷ்ட நிஷ்டூரங்களுக் கிலக்காகி வறுமை—பசி—பிணிகளாகிய பீடங்களில் தம் உயிரைப் பலிகொடுத்து வருகின்றார்கள்! இவ் விபத்துக்கள் எப்பொழுது எவ்வாறு தீருமோ?

சமதர்ம வாழ்க்கை—அபேதவாதம்—உலகெங்கும் பரவி வேரூன்றிய

பின்னேதான் போர்களுக்குக் காரணமாகவும் பக்கபலமாகவும் நின்றவைகளும் நிற்பவைகளும் அற்றுப்போம். வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளைப் பொதுவுடமைகளாக மாற்றவேண்டும். வீணர்களையும் விடர்களையும் தொத்துப் பிராணிகளையும் திருத்தி ஒவ்வொருவரின் உதர நிமித்தமும் பொது நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பாரபக்ஷமில்லாமல் யாவரையும் உழைக்கச் செய்யவேண்டும். இதற்கு உடன் படாதவர்களை நாட்டினின்று அகற்றிவிட வேண்டும். மூட பக்தியையும், பொருளும் பொருத்தமும் அற்ற மதாசாரங்களையும் ஆராதனைகளையும் பயவுணர்ச்சியையும் வேருடன் களைந் தெறியவேண்டும். ஒத்துழைக்கும் குணத்தையும் தியாக சிந்தனையையும் போற்றி வளர்க்கவேண்டும், இவைகள் நிறைவேறி உலகெங்கிலும் பாவி நிலைத்து நிற்பதற்கான முறை யாதோ?

நடு இனத்தவர்களும், "கீழோர்—தொழிலாளிகள்—கூலியாட்கள்" எனப்பட்டவர்களும் ஒன்று சேரவேண்டும். தம் நாட்டின் நிலைமையையும், வர்த்தக இரகசியங்களையும், ராஜ தந்திர நுட்பங்களையும் கசடறக் கற்றறிந்து தடைகளைத் தகர்த்துத் தளைகளைக் கிழித்துதறி முன்வரவேண்டும். வீண் பிரச்னைகளை எழுப்பிக் கலங்கி உழலும் ஞானிகளும் "மேலோர்"களின் இஷ்டப்படிக்குப் பாடி நடித்துவரும் பண்டிதர்களும் விழித்தெழுந்து, பாமர ஜனங்கள் பக்கம் சேர்ந்து, சரீராரோக்கியமும் மனத்தெளிவும் நெஞ்சுத் துணிபும் நரம்புகளுறுதியும் பெற்று உயர்தற்கான நெறிகளைப் போதிக்கவேண்டும்.

தீவிர கிளர்ச்சி செய்து மேற்றொடர்ந்து தம்முடைய கருத்துக்கள் முற்றிலும் நிறைவேறும்வரையிலும் ஒவ்வொருவரும் தியாக சிந்தனை—பொறுமை—ஒத்துழைப்பு—பரஸ்பர விசுவாசம்—இலட்சியக் குறி—தளரா ஊக்கம்—சலிக்காத சிரத்தை—அயற்வுறு வுழைப்பு—வெற்றி நம்பிக்கையாதியவைகளுடன் பாடுபடவேண்டும். இதற்காக உபாயங்களைத் தெரிவித்து, அக் குணுதிசயங்களைப் பலப்படுத்தி நடத்தைகளை ஒழுங்கு படுத்தற்கான சீரிய சங்கங்களை எங்கும் ஸ்தாபிக்க வேண்டும். இச் சங்கத் தலைவர்கள் முன் கூறிய குணுதிசயங்களை வளரச் செய்வதுடன், விஞ்ஞான சாஸ்திரங்களின் அரும்பெரும் பலன்களையும் இயந்திரங்களின் அமைப்பையும் உபயோகத்தையும் தொழிற் சாலைகளின் நிர்வாகத்தையும் பழுதறக் கற்பிக்க வேண்டும். "எச்சாதனமும் தானே வலுவில் நம்மைச் சேராது."

ராஜாங்கம் என்ற பதுமையை ஆட்டிவரும் பிரபுக்களும் முதலாளிகளும் மததர்மிகளும் சீறி எழக்கூடும். எனினும், அதைரியப்படாது அம் மக்களுக்கு உடந்தையான உத்தியோகஸ்தர்களைத் தம் பக்கத்தில் சேர்த்து அத் தேசத் துரோகிகளை எதிர்த்து வீழ்த்தவேண்டும். ராஜாங்கத்தினர்க்கு உதவி புரியும் கருவிகளை யெல்லாம் தம் கைவசப் படுத்திக் கொள்ள வேண்டும். கீழ்ப்பதவிகளுள்ள சர்க்கார் உத்தியோகத்தினர் வேலைக்குச் செல்லாவிடின் சர்க்கார் எனப்படுவது எவ்வாறு நடைபெறும்? தொழிலாளிகளும் கூலி யாட்களும் வேலையை நிறுத்திவிடின் இயந்திர சாலைகள் எவ்வாறு ஓடும்? ராணுவமும் போலீஸும் கீழ்ப் படியாவிடின் அரசரும் அமைச்சரும் சேனாதிபதிகளும் என் செய்வர்? உலக முழுதும் அவ்வபேதவாதக் கொள்கைகள் ஊடுருவிப் பாய்ந்து பரவுமாயின்; சமதர்ம உணர்ச்சி பெருகும் தொழிற்களும் தொழில்களுக்கான சாதகங்களும் சாதனங்களும் யாவர்க்கும் உரியனவாகும்; உணவும், உடுப்பும், இல்லங்களும், கல்விப் பயிற்சியும், கல்லூரிகளும் யாவரும் பெற்று அனுபவிக்கக் கூடியனவாகும்; திரவிய லாபச் சிந்தனையும், பண ஆசையும் தேவையும் இல்லாமற்போம்; பஞ்சம் பஞ்சாகப் பறந்துபோம்; களவு செயற்களும், கயமையும், மௌட்டியமும் கீழடையும்; சமூகக் கக்ஷிகளிரா; ராஜாங்கங்களும் நியாயச் சட்டங்களும் முறிந்துபோம்; போர் புரட்சி சச்சரவுகளும் அற்றுப்போம். மாண்புற்ற வாழ்க்கை என்பது இதுவே யன்றோ?

# குலமகட்குத் தெய்வம்.

(திருவையாறு—கே. வைத்தியநாதன்.)

வத்ஸலா தன் தாய்வீடு சேர்ந்து ஏறக்குறைய பத்து மாதங்களாயின. வந்து சில தினங்கள் வரை குடும்ப அல்லல்களினின்றும், தன் கணவனது கொடுமையினின்றும் விடுபட்டு விட்டதாக அவள் அடிக்கடி யெண்ணி மகிழ்ந்து வந்தாள். ஆனால் எக்காரணம் பற்றியோ சில மாதங்கள் சென்ற பின் அவளுடைய தோற்றத்தில் பெருத்த மாறுதலேற்பட்டது. ஆரம்பத்திலிருந்த குதூகலமெல்லாம் அவளை விட்டுச் சிறிது சிறிதாக மறையலாயின. உற்சாகம் குறையக்குறைய அவள் உள்ளம் சோம்பியது. உடலும் தளர்வுற்றது. அடிக்கடி நோய் வாய்ப்பட்டாள். உடல் மிக மெலியவே பகற்போதிலும் அவள் படுக்கையையே நாடினள்.

இத்தகைய நிலையில், ஒரு நாள் பகல் 3-மணிக்கு அரை நித்திரையிலிருந்தாள் வத்ஸலா. திடீரென அவள் விழித்துக் கொள்ள "இதென்ன தலையெழுத்து? அவளவள் தன்தன் வீட்டோடில்லாமல் இங்கே வந்து கிடந்தால் நான் என்ன செய்யட்டும்? எத்தனை காலந்தான் நான் வைத்துப் பாதுகாக்க முடியும்? அத்துடன் வைத்தியம் வேறு! ஊரில் தலைகாட்டவே முடியவில்லை: 'வாழாமல் வந்துட்டாள்! வாழாமல் வந்துட்டாள்!!' என்ற நிந்தைப் பேச்சு!........." என அவள் தாய் கூறியது அவள் செவிகளில் விழுந்தது.

மறுநாள் வழக்கத்திற்கு மாறாக வத்ஸலா அதிகாலையில் எழுந்தாள். அன்று அவளது உடம்பு கொஞ்சம் திடம் பெற்றிருந்தது. ஆதலால் வீதிக்குச் சாணம் தெளிப்பது முதல் வீடு மெழுகுவது வரையிலுள்ள எல்லா அலுவல்களையும் வெகு சீக்கிரத்தில் அவளே செய்து முடித்தாள். அப்போதுதான் படுக்கையை விட்டெழுந்த அவளுடைய தாய் வத்ஸலையின் சுறுசுறுப்பைக் கண்டு மகிழ்ந்தாள். ஒன்பது மணியான பின்பும் உறக்கத்

திலிருக்கும் நம் வத்ஸலா இன்று இவ்வளவு விரைவாக எல்லா வேலைகளையுஞ் செய்து முடித்தது அவளுடைய தாய்க்கு மிகவும் வியப்பாகவே யிருந்தது. மேலும் அன்று அவளுடைய வதனம் ஒரு நூதன தேஜஸுடன் ஜொலித்தது. உற்சாகமும், களிப்பும் அன்று அவள் உடம்பினூடே மின்சாரம் போல் பாவிக்கொண்டிருந்தன. அவள் உடம்பின் ஒவ்வொரு அங்கத்திலும் ஆனந்த மணம் பரிமளித்துக் கொண்டிருந்தது.

ஆகாரமுண்ட பின் பரந்துகிடந்த தன்னுடைய கரிய கூந்தலைப் பின்னிச் சடை போட்டுக் கொண்டாள். பெட்டியிலிருந்த கொட்டடிப் புடவையை உடுத்திக் கொண்டாள். கூடத்திற்கு வந்தாள். நிலைக்கண்ணாடியின் எதிரே நின்று தன் அழகை ஒரு முறை கவனித்தாள். இளைத்து மெலிந்திருந்த அவள் உடல்கூட இன்று சிறிது மாறிக் காணப்பட்டது. அவளது நுதலின் நடுவே துலங்கிய சாந்து திலகமும் இன்று சுடரொளி பரப்பியது. அவளது மார்பகத்தே கிடந்த மெருகு குலைந்த ஆபரணங்களும் அவளுடைய உடையின் உதவியால் புன்னகை புரிவனபோல் மின்னின.

அன்னை கூடத்தி லிருந்தாள். வத்ஸலா நூதன அலங்காரத்தோடு அவள் எதிரே தோன்றினாள். அவள் தன் புதல்வியின் முழு உருவத்தையும் பார்ப்பதற்குள் வத்ஸலா அவள் அடிபணிந் தெழுந்தாள். தெய்வீக ஒளி பெற்ற கண்ணீர்த் துளிகள் கன்னங்களில் வழிய, "அம்மா ! போய் வருகிறேன்; விடை கொடுங்கள்" எனத் தன் இரு கரங்களையும் கூப்பியபடி மொழிந்தாள்.

தாய் வியப்புடன் "எங்கே குழந்தாய் ?" எனலும், வத்ஸலா "அம்மா ! என் நிரந்தரமான இருப்பிடத்திற்கு" என்றாள்.

"அப்படி யென்றால்............"

"என் கணவர் வீட்டிற்கு !"

"என்ன ? அந்தப் பாபியின் வீட்டிற்கா ? உன்னை அடித்துத் து ..."

"போதும் அம்மா ! அவற்றை யெல்லாம் நான் மறந்து விட்டேன்"

"மறந்து விட்டாயா ?......உன்னால் மறக்க முடிந்ததா ?"

"ஆமாம். மறந்து விட்டேன். அவர் பொல்லாதவர் என்று அவர் மீது குறைகூற என் மனம் இடந்தரவில்லை. உலகத்தில் எதுவும் கால விபரீதத்தாலேயே நேருகிறது."

"நன்றாக யோசித்துப்பார்.........அந்தக் கொடியவன் உறவு வேண்டுமானால் நீ என்னை மறந்துவிட வேண்டியதே. இவ்வீடும் அந்த நிமிஷமுதல் உனக்கு இரவல் தான்."

"நான் ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டபின் இவ்வீடு எனக்குச் சொந்தமில்லாததே—உற்று நோக்கினால் மனிதர்களுக்குச் சொந்தமான பொருள் உலகில் என்னதானிருக்கிறது ?



"மகளே ! இதென்ன புதுமை! இந்த வேதாந்தமெல்லாம் நீ எப்போது கற்றுக் கொண்டாய் ?"

"வேடிக்கையாய்ப் பேச எனக்கு நேரமில்லை. என் கணவன் அல்லது இறைவன் திருவடி இவற்றில் ஒன்றே எனக்கு இனிச் சொந்தமாகப் போவது? வேறு புகலிடம் காண்கிலேன். விரைவில் நான் அங்கு போக வேண்டும். ஆதலால் தாமதியாது ஆசீர்வதித்தனுப்பு."

"வத்ஸலா ! உன் புத்தியை நீ இழந்து விட்டாய் ?"

"சரி எப்படியாகிலும் எண்ணிக்கொள். என் நாயகர் எனக்களித்த தண்டனைக்குப் பதில் தண்டனை நான் திரும்ப அவரை அடைவதே !"

வத்ஸலா அதற்கு மேலும் தாமதிக்கவில்லை. அப்பால் நடந்தாள். அவளது தாய் விடைகூற வகையறியாளாய் அப்படியே அமர்ந்திருந்தாள். பின் "பாவம் ! குழந்தை புத்தி சபலித்து விட்டாள். அவளுக்கு இத்தகைய துன்பம் நேரலாகாது. குறித்த நேரத்தில் சமையலாக வில்லையென்று அடித்துத் துரத்திய அந்த மடையன் அவளுக் கேற்ற கணவனல்லதான். ஆனாலும் "வத்ஸலா வாழாதவள்" என்று நிந்திக்கும் ஊர் வாயை யாரால் மூட முடிகிறது ?" என்று எண்ணமிட்டவாறு வத்ஸலாவின் அறைக்குச் சென்றாள். அங்கு அவளில்லாதது கண்டு திடுக்கிட்டுப் படுக்கையருகிற் சென்று குனிந்து பார்க்கையில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டாள். அதில்,

"குல மகட்குத் தெய்வம் கொழுநனே;
அவனைத் திருத்துதல் அவள்தம் கடனே
ஆதலால்
அவட் குறைவிடம் அவன்திரு வடிநிழலே."

என வரையப்பட் டிருந்ததைக் கவனித்தாள். "ஆ ! இதுவன்றோ என் குழந்தை யறிவைக் குழப்பியிருக்கிறது !" எனத் தனக்குள் சொல்லிக் கொண்டே தெருப்பக்கமாகத் தன் பார்வையைச் செலுத்தினாள். அப்போது கொஞ்ச தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு குதிரை வண்டியைக் கண்டு திடுக்குற்றாள். ஏனெனில் வண்டியினுள் ளிருந்தவர்கள் அவளது மகளும் மருமகனுமே !





சிறு கதை.

# ரிக்ஷா வண்டிக்காரன்

—o—

"வசீகரன்."

மாலை மூன்று மணி. அன்று பள்ளிக்கூட விடுமுறை யாதலால் மதனகோபாலனும், பத்மாவும் வீட்டிலேயே யிருந்தார்கள். மதனகோபாலன் கூடத்தில் சினிமா ஸ்டார்களின் புகைப்படங்களடங்கிய போட்டோ ஆல்பம் ஒன்றைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். தோட்டத்தில் வேலைக்காரியுடன் விளையாடிக் கொண்டிருந்த பத்மா எதையோ நினைத்துக்கொண்டு குடு குடுவென்று கூடத்திற்கு ஓடி வந்தாள். விளையாட்டாக மதனகோபாலனின் கண்களை மூடினாள். போட்டோ ஆல்பத்தையே இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த மதனகோபாலன் தனது செய்கை தடைப்படவே பா பாவென்று ஆத்திரத்தோடு எழுந்தான். பத்மாவின் காத்தை வெடுக்கென்று பற்றி உதறித் தள்ளி அவள் கன்னங்களில் நாலு அறைகள் விட்டான். அந்த அறைகளினால் மூர்ச்சையுற்ற பத்மா அப்படியே தரையில் குப்புற விழுந்து விட்டாள்.

அதேசமயம், வேதாசல முதலியார் மேல்மாடியில் சற்று நேரத்திற்கு முன் தங்கை விஜயசுந்தரியிட மிருந்து வந்த கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

என் ஆருயிரனைய அண்ணா, தங்கை • விஜயசுந்தரியின் நமஸ்காரங்கள். க்ஷேமம். இதுபோன்றே தங்களுடையவும், மதனகோபால னுடையவும், குழந்தை பத்மாவினுடையவும் க்ஷேமங்களையும் அறிய ஆவலுள்ளவளா யிருக்கிறேன்.

அண்ணா, குழந்தை பத்மா தங்கள் இல்லத்துக்கு வந்து சரியாக இரண்டு வருஷமாகி விட்டது. இந்த இரண்டு வருஷங்களையும் நான் இரண்டு யுகங்கள்போல் கழித்து விட்டேன். என்னருமை பத்மாவை மறந்துவிட எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை. இனி என்னால் கண்மணி பத்மாவைப் பிரிந்திருக்க கணமும் முடியாது. அவளுடைய பிரிவால் நானும் என் கணவரும் ஏக்கமுற்று தினே தினே வாடி மெலிந்து



வருகிறோம். ஆதலால் தயவு செய்து எங்கள் செல்வத்தை சில நாட்கள் எங்களிடம் அனுப்பிவையுங்கள். எனது முத்தங்களையும் ஆசீர்வாதத்தையும் மதனனுக்கும் பத்மாவுக்கும் அறிவியுங்கள்.

தங்கள் தங்கை
விஜயசுந்தரி.

இவ்வாறு மேல்மாடியில் முதலியார் கடிதத்தைப் படித்த பின்னர் பற்பல சிந்தித்துக் கொண்டிருந்தபோதுதான், கீழே தடாலென்று பத்மா விழுந்த சப்தம் அவர் காதுகளுக்குக் கேட்டது. அது கேட்ட அவர் அதன் காரணத்தை அறிய விரைந்து கூடத்துக்கு வந்தார். பத்மா கீழே விழுந்து கிடப்பதையும். அவள் கன்னத்தில் மதனகோபாலனின் ஐந்து விரல்களும் அப்படியே பதிந்து கிடப்பதையும் கண்ட அவர் உடனே எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டார். பாய்ந்து சென்று பத்மாவைத் தூக்கினார். அவளுடைய கண்களிலிருந்து வழியும் கண்ணீரைக் கண்டதும் அவர் ஹிருதயமே வெடித்து விடும்போ லிருந்தது. அந்நிலையில் அவளுடைய அன்னை விஜயசுந்தரி அவளைக் காண நேரிடின் அவள் மனம் என்ன பாடுபடும் என்று ஒரு நிமிஷம் சிந்தித்தார். அவ்வளவுதான். அடுத்த நிமிஷம் அவர் ஒரு ருத்திரமூர்த்தி போலாகி விட்டார். பாபாவென்று மதனகோபாலனருகே சென்றார். அவனுடைய கன்னத்தை நோக்கிப் பலமாக நான்கு அறைகள் விட்டார். "அயோக்கியப் பயலே! இதற்காகத்தான் குழந்தையைப் பம்பாயிலிருந்து வாவழைத்து வைத்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டாயோ. உம்......எது கை வா வா ஊறுகிறாப்போ லிருக்கிறது" என்று கடிந்துரைத்தார்.

மதனகோபாலன் முதலியாரிடம் எப்பொழுதும் அந்தமாதிரி அறை வாங்கியவனல்ல. ஆதலால், முதலியாரின் அறைகளினால் அவன் கன்னங்களும் கண்களும் சிவந்துவிட்டன. அவனுடைய உள்ளத்தில் ஆத்திரமும் அழுகையும் பொங்குகிறது. இருப்பினும் சற்று நிதானித்துக்கொண்டு "ஊம். அந்த நாயை யார் சட்டை பண்ணிக்கொண்டு இங்கு அழைத்தார்கள்......" என்று கூறி மேலே ஏதோ கூற வாயெடுத்தான். அடுத்த விநாடி "ராஸ்கல்! என்ன சொன்னாய்?" என்று கூறியவாறே இன்னும் நாலு அறைகள் விழுந்தன. பத்மா அதைத் தடுக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை.

அறைபட்ட மதனகோபாலன் கம்பீரமாக முதலியாரைப் பார்த்தவாறு நின்றான்.

"என்னடா முறைக்கிறாய்?" என்றார் முதலியார்.

"இனிமேல் நீங்கள் என்னை இப்படி அடித்தால் கண் காணாத இடத்திற்கு ஓடிப்போய் விடுவேன்" என்றான் மதனகோபாலன். அவனுடைய வார்த்தைகளில் தான் ஒருவனே முதலியாரின் புதல்வன், தன்னை அவ்வாறு செல்லும்படி அவர் விட்டுவிட மாட்டார் என்ற கர்வம் தொனித்தது.

முதலியார் ஆத்திரத்தோடு மதனனைப் பார்த்தார். கோபச்சிரிப்பு சிரித்தார். "ஹூம்......என்னைப் பயமுறுத்திப் பார்க்கிறாயா, நல்லது.

போடா வெளியே" என்று பற்களைக் கடித்துக்கொண்டு கூச்சல் போட்டார்.

பத்மா நடுநடுங்கினாள். முதலியாரருகே ஓடி அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு "மாமா வேண்டாம் வேண்டாம்! அத்தானைப் போகச் சொல்லாதீர்கள்" என்று கூச்சல் போட்டாள்.

முதலியார் பத்மாவைப் பரிவுடன் அணைத்துக்கொண்டு "நீ பயப்படாதே அம்மா. கழுதை எங்கே போகும்! சாயுங்காலம் வரையில் இங்கும் அங்கும் கொஞ்சநேரம் திரிந்து கொண்டிருந்து விட்டு வீட்டுக்கு வந்து விடும். நீ பயப்படாதே. அடுத்த வீட்டு ராஜத்தை அழைத்துக்கொண்டு வந்து அதனுடன் விளையாடிக் கொண்டிரு" என்றார்.

பத்மாவுக்கு இந்த சமாதானம் பிடிக்கவில்லை. அவள் பரபரவென்று மதனகோபாலனிடம் ஓடினாள். "அத்தான்! நீங்கள் போகவேண்டாம். என்னை உங்களிஷ்டம்போல் அடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கெஞ்சி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

மதனனுக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. "சனியன்!" என்று கூறி அவளை உதறித் தள்ளினான். பத்மா மீண்டும் கீழே விழுந்தாள். மதனன் திரும்பிக் கூடப் பார்க்காமல் விரைவாக வெளியே போய்விட்டான்.

அவன் சென்ற பின்னர் வெகுநேரம் வரையில் பத்மா அழுத வண்ணமாகவே யிருந்தாள். முதலியார் எவ்வளவு தேற்றியும் பயனில்லை. அன்று அவளுக்கு சுரம் வந்துவிட்டது. சுரம் வெகுவேகமாக ஏறிக்கொண்டே வந்து கடைசியில் 104 டிகிரியில் நின்றது. மதனகோபாலன் கோபித்துக்கொண்டு சென்றவன் திரும்பி வரவேயில்லை. "கழுதை இன்னும் சற்று நேரத்தில் திரும்பி வந்துவிடும்" என்று முதலியார் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இரவு ஆயிற்று. ஒரு நாளும் ஆயிற்று; இரண்டுநாளும் ஆயிற்று. அவன் திரும்பி வரவேயில்லை. முதலியார் நடுநடுங்கிப் போய் விட்டார். ஒருபுறம் பத்மாவின் நிலையைப் பார்த்து சோர்ந்து கண்ணீர் விடுகிறார். மற்றொருபுறம் மதனனை எண்ணி ஏங்குகிறார்.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. பத்மா புத்துயிர் பெற்றாள். முதலியார் பத்திரிகைகளில் "பையனைக் காணோம், கண்டு பிடித்துச் சேர்ப்பவர்களுக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு" என்று பிரமாதமாக விளம்பரங்கள் வெளியிட்டார். ஆனால் முடிவு—அவருக்கு மதனனைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

2

ஆண்டுகள் பல கடந்தன. முன்னர் சின்னஞ்சிறுமியாய் இருந்த பத்மா இப்பொழுது பதினாறு ஆண்டுகள் நிறையப்பெற்ற பருவ மங்கையாய் விளங்கினாள். அவளுடைய அழகைக் கண்ட மங்கையரும் அவளை ஆசையுடன் நோக்கி பெருமூச்சு விடுகிறார்கள். அவள் முதலியாருடன் வெளியே உலாவச் செல்லும் வேளைகளில் வாலிபர்கள் அவளை நோக்கி பெருமூச்சு விட்டு ஏங்கி நிற்பார்கள். பத்மா அவர்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. மதனகோபாலனை எண்ணி ஏங்கியவாறே அவள் தரையைப் பார்த்தவண்ணமே செல்லுவாள்.



ஒருநாள் விஜய சுந்தரியிடமிருந்து முதலியாருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் விஜயசுந்தரி தன் கணவருடனும் குழந்தைகளுடனும், புறப்பட்டு அடுத்த மூன்றாம்நாள் ஊருக்கு வருவதாகவும் தன்னைச் சென்னையில் சந்திக்கும்படியும் எழுதி யிருந்தாள்.

தந்தியைக் கண்ட முதலியார் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தார். பத்மாவினிடமும் தந்தியைப் படித்துக் காட்டினார்.

அப்பொழுது முதலியாரின் கேஸ் ஒன்று ஹைக்கோர்ட்டில் நடந்து கொண்டிருந்தது. அது சம்பந்தமாக அவர் சில ரிக்கார்டுகளைக் கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டி யிருந்தது. ஆகவே அவருடைய தங்கை வரும் தினத்திற்கு இரண்டுநாள் முன்னதாகவே சென்னை சென்று தங்கி யிருப்பதென்றும், தங்கை குறிப்பிட்டிருக்கும் தினத்தன்று ரயில் நிலையத்திற்குச் சென்று அவளை வரவேற்பதென்றும் எண்ணி யிருந்தார். ஆதலால் அன்றையதினமே பத்மாவுடன் போட் மெயிலில் சென்னைக்குப் புறப்பட்டார்.

3

முதலியார் சென்னையை அடைந்த மறுதினம் மாலை ஆறு மணியிருக்கும். பத்மா அவளுடைய தோழி வனஜாவுடன் கடற்கரைக்கு உலாவச் சென்றிருந்தாள். கடற்கரையில் பத்மாவும் வனஜாவும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்வாறு வெகு ஸ்வாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று கடற்கரையில் ஒரு கலவரம் உண்டாயிற்று. கடற்கரையில் உலாவுவதற்கு வந்திருந்த மனிதனொருவன் தவறிப்போய் கடலில் விழுந்து விட்டானென்றும் அவனைச் சிலர் காப்பாற்றி கரை சேர்த்திருக்கிறார்களென்றும் அவன் பெயர் பத்மநாபன் என்றும் சிலர் பேசிக்கொண்டார்கள். உடனே சம்பவம் நடந்த இடத்தில் ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. அந்த மனிதனைப் பார்ப்பதற்காக அங்கு உலாவ வந்திருந்த ஆண் பெண் அனைவரும் அந்த கூட்டம் கூடி யிருந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். இவ்வாறு ஓடியவர்களில் வனஜாவும் ஒருத்தி. அவளுடைய கணவன் பெயரும் பத்மநாபன் என்பதே. ஆதலால் தவறிப்போய் கடலில் விழுந்த மனிதன் தன் கணவன் தானோ என்ற பீதி கொண்டவளாய் தன் அருகில் வீற்றிருக்கும் பத்மாவைக் கூடக் கவனிக்காதவளாய் வெறி பிடித்தவள்போல் பரபரவென்று அந்தக் கூட்டத்தில் ஓடி கும்பலில் மறைந்து போய்விட்டாள்.

பத்மா வெகுநேரம் வரையில் வனஜாவைத் தேடினாள். வனஜா காணப்படவில்லை. நேரமாகி விட்டதால் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஒருவர் பின்னொருவராய் போய்விட்டனர். வானம் இருண்டு சிறுதூறல் தூற ஆரம்பித்தது. பத்மா அதைக்கண்டு திகைத்தாள். எவ்வாறு வீடுபோய் சேர்வது என்றெண்ணிப் பயந்தாள். அச்சமயம் ஒரு ரிக்ஷா வண்டிக்காரன் தன் ரிக்ஷா வண்டியுடன் வந்து அவளருகே நின்றான்.

பத்மா அவன் முகத்தைப் பீதியோடும் கவலையோடும் பார்த்தாள்.

"நீங்க எது வரையில் போகணும்? வண்டியில் ஏறுங்கோ" என்றான் ரிக்ஷா வண்டிக்காரன்.

"நான் வெங்கடேச மேஸ்திரிவீதி இருபத்தைந்தாம் நம்பர் வீட்டுக்குப் போகவேண்டும். சத்தம் என்ன கேட்கிறாய்?" என்றாள் பத்மா.

"நீங்க குடுக்கிறதை குடுங்க" என்றான் ரிக்ஷா வாலா.

அவனுடைய பேச்சிலிருந்து அவன் ஒரு நல்லமாதிரியான வண்டிக்காரன் என்று பத்மாவுக்குத் தெரிந்தது. ஆதலால் நிர்ப்பயமாக வண்டியில் ஏறி அமர்ந்தாள். ரிக்ஷாவாலா வண்டியை இழுத்துக்கொண்டே போனான்.

வண்டி பல வீதிகளையும், பல கட்டடங்களையும் கடந்து பல சந்து பொந்துகளின் வழியாகப் போய் கொண்டிருந்தது. பத்மாவின் உடல் மட்டும் ரிக்ஷா வண்டியில் சவாரி செய்து கொண்டிருந்ததே யொழிய அவள் மனம் மட்டும் வேறிடத்திலேயே இருந்தது.

திடீரென்று ரிக்ஷா வண்டி நின்றது. காரணத்தை அறிய பத்மா வெளியே எட்டிப் பார்த்தாள். அப்பொழுதுதான் அவளுக்குத் தான் தவறான பாதையில் கொண்டுவரப்பட்டிருப்பது தெரிந்தது. இதைக் கண்டதும் அவள் முதலில் பயந்தாள். எனினும், பின்னர் தைரியத்தோடு பேசத் தொடங்கி, "இது வெங்கடேச மேஸ்திரி வீதிக்குச் செல்லும் பாதையல்லவே. என்னை எங்கே கொண்டுபோகிறாய்?" என்று கேட்டாள்.

"சும்மா கூச்சல் போடாதே. அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்றான் ரிக்ஷாவாலா.

"இதென்ன மோசடியாய் இருக்கிறது. நான் போகுமிடம் எனக்குத் தெரியும். உனக்குத் தெரியவாவது! வண்டியைத் திருப்பு" என்றாள் பத்மா.

"என்ன ரொம்ப முறைக்கிறே! சும்மா வாயை மூடு"

"அடேய்! உன் மோசக் கருத்து எனக்குத் தெரிகிறது. நான் உன்னை விடப்போகிறதில்லை. இதோ கூச்சல் போடப் போகிறேன். மரியாதையாக என்னை விட்டு விடு" என்று விரைவாக வண்டியை விட்டுக் கீழே குதிக்க முயற்சித்தாள் பத்மா.

அந்த ரிக்ஷாவாலா சட்டென்று பத்மாவின் வாயில் ஒரு துணிப் பந்தை திணித்தான். பின்னர் அவள் மூக்கினருகே ஒரு சீசாவைக் காட்டினான். அவ்வளவுதான். பத்மா அப்படியே சுய நினைவற்று ரிக்ஷாவில் வீழ்ந்துவிட்டாள்.

4

பத்மாவைக் கொண்டு சென்ற ரிக்ஷாவாலா நேரே நாராயண முதலி வீதியை நோக்கிச் சென்றான். ஏதோ அசந்தர்ப்பத்தால் அன்று அந்நேரத்தில் எல்லா மின்சார விளக்குகளும் நின்றுபோய்விட்டன. வானம் கருத்திருண்டிருந்ததால் எங்கும் இருள் மயமாகவே இருந்தது. ஆதலால் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. தெருவி லிருக்கும் வீடுகளெல்லாம் ஓரே விதமாக யிருக்கின்றன. ஒரு வீட்டுக்கும் மற்றொரு வீட்டுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ரிக்ஷாவாலா வண்டியை நேரே அட்வொகேட் அருணாசல முதலியார் வீட்டுக்கு எதிரே கொண்டு வந்து நிறுத்தினான்.

அட்வொகேட் அருணாசலம் ஒரு 'பக்கா' போக்கிரி. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் அவனொரு முரடன்—மொடாக் குடியன்—மகா



காமுகன்—தாசிலோலன்—நயவஞ்சகன் இவ்வளவுதான் சொல்ல முடியும். இவனுடைய கையாள் தான் ரிக்ஷாவாலா கந்தன். கந்தன் கடற்கரையிலும், சினிமா தியேட்டர்களிலும், இன்னும் பெண்கள் தனித்திருக்கக் கூடிய இடங்களிலும் சென்று அங்கிருக்கும் பெண்களை யெல்லாம் நயவஞ்சகமாக அழைத்துக் கொண்டு வந்து அட்வொகேட் அருணாசல முதலியாரிடம் கொண்டுவந்து விடுவது வழக்கம். அட்வொகேட் அதற்காக கந்தனுக்கு ஏதேனும் சன்மானம் செய்துவிட்டு அப் பெண்களைத் தன்னிஷ்டம் போல் பலாத்காரத்தைக் கொண்டு கற்பழியச் செய்து அனுப்புவது வழக்கம்.

கந்தன் வழக்கம்போல் பத்மாவையும் அங்கே தான் கொண்டுவந்து நிறுத்தினான். ஆதலால், உடனே அட்வொகேட்டிடம் இந்த சுபச் செய்தியைச் சொல்ல எண்ணி அவர் வீட்டினுள் பிரவேசித்தான். வீடு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. மெல்ல கதவை யிடித்தான். "யாரங்கே?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தார் முதலியார்.



கந்தனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "இன்னிக்கி ஒரு பஸ்ட்கிளாஸ் (First Class) குட்டி கிடைச்சிருக்குதுங்க...தங்கம்போல இருக்குது. ...ஐயாவுக்கு ஏற்றது...அடடா! அழகுன்னா இந்த மாதிரி அழகை நான் எப்போதும் பார்த்ததில்லேங்க......" என்று மெல்ல கூச்சல் போட்டான்.

அட்வொகேட் உச்சி குளிர்ந்துபோய் விடுவார் என்பது அவன் எண்ணம். ஆனால் அவன் எதிர்ப்பார்த்ததற்கு மாறாக விஷயம் முடிந்தது.

முதலியார் அவன் மயிரைப் பிடித்துக் குலுக்கி அப்படியே தூக்கினார். "அயோக்கியப் பயலே! எத்தனை நாளாக இந்த வேலை? உம்......என்னடா விஷயம்......? சொல்லு சீக்கிரம் உண்மையை" என்று கர்ஜித்தார்.

கந்தன் "எதடா, அட்வொகேட் முதலியார் புது தினுசாகப் பேசுகிறார்" என்றெண்ணியவாறே மெல்ல ஆளைப் பார்த்தான். அப்படியே கடுநடுங்கிப் போய்விட்டான். அவன் நினைத்தது போல் அட்வொகேட் அருணாசல மல்ல. அவர் பக்கத்து வீட்டு டாக்டர் மோகன்பாபு. அவசரத்திலும் இருளிலும் அட்வொகேட் அருணாசலம் வீட்டுக் கதவை இடிப்பதற்குப் பதிலாக தவறுதலாக பக்கத்து வீட்டு டாக்டர் பாபுவின் வீட்டுக் கதவை இடித்துவிட்டது தெரிந்தது. பேசாது உண்மையைக் கக்கி விட்டான்.

பாபு அவனைக் கட்டிப்போட்டு ஒரு அறையில் பூட்டி வைத்து விட்டு பத்மாவைத் தூக்கிச் சென்று அவள் வாயிலிருந்த துணிப் பந்தை எடுத்து விட்டு அவளை மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கும்படிச் செய்து விட்டு போலீசுக்கு உடனே போன் செய்தார்.

5

டாக்டர் மோகன் பாபுவின் வீட்டின் முன்னால் கார் வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டரும், சில ஜவான்களும் கீழிறங்கி உள்ளே சென்றார்கள். இன்ஸ்பெக்டர் எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டு அட்வொகேட் அருணாசலத்தை விலங்கிட்டு தாணாவுக்கு அழைத்து செல்லும்படி உத்தரவிட்டு, ரிக்ஷாவாலா கந்தனையும், பத்மாவையும் விசாரிக்க ஆரம்பித்தார். கந்தன் உள்ளதை ஒப்புக்கொண்டு விட்டான். ஆதலால் இன்ஸ்பெக்டர் பத்மாவை நோககி, "அம்மா! நீங்கள் இப்போது உங்கள் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவேண்டும். இவன் யார்? நீங்கள் யார்? இவனால் நீங்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டீர்கள் என்பதை யெல்லாம் தயவு செய்து சொல்லவேண்டும்" என்று கூறிவிட்டு அவளுடைய வாக்கு மூலத்தைப் பதிவு செய்துகொள்வதற்காகத் தயாராக இருந்தார்.

பத்மா அவருக்கு முன்னாலிருந்த மேஜையின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு கம்பீரமாக நின்றாள். அவளுடைய சந்திர பிம்பம் போன்ற முகத்தில் புன் சிரிப்பு தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது.

பத்மா தனது வரலாறுகளை ஆங்கிலத்தில் சொல்ல ஆரம்பித்தாள் :— "என் பெயர் பத்மாபாய் என்பது. என் பெற்றோர் பம்பாயில் இருக்கிறார்கள். நான் பாப்பன் குளத்தில் எனது மாமா வேதாசல முதலியார் இல்லத்திலேயே வளர்ந்து வருகிறேன். அவர் பாப்பன்குளம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு........" என்றாள் பத்மா.

பத்மா கூறியவைகளைக் குறித்துக் கொண்டே வந்த இன்ஸ்பெக்டர் திடீரென்று எழுதுவதை நிறுத்திவிட்டு பத்மாவின் முகத்தைப் பார்த்தார். அதே சமயம் பத்மாவும் அவர் முகத்தைப் பார்த்தாள்.

"ஆ! என் கண்ணே பத்மா! நீயா!" என்று அன்பும் ஆச்சரியமும் ததும்ப பத்மாவின் கரங்களைப் பற்றினார் இன்ஸ்பெக்டர் மதனகோபாலன்.



"ஹா! அத்தான்! நீங்களா!" என்று கூறிய வண்ணமே மதனகோபாலனின் தோள்மீது சாய்ந்தாள் பத்மா.

பத்மா தன் நினைவு பெற ஐந்து நிமிஷமாயிற்று. பின்னர் இருவரும் மோகன்பாபுவிடம் விடை பெற்றுக்கொண்டு மோட்டாரி லேறினார்கள். இன்ஸ்பெக்டர் மதனகோபாலன் பத்மாவை லேசாகத் தன்னுடன் அணைத்துக்கொண்டு அவளுடைய—முன்னர் அறைபட்ட அந்த—கன்னத்தை லேசாகத் தடவியவாறே "பத்மா! முன்னர் நான் உன்னை இந்தக் கன்னத்தில்தான் அறைந்தேன். இப்போது அதற்கு வட்டியாக இந்த கன்னத்திலேயேதான் முத்தமும் கொடுக்கப்போகிறேன்" என்று கூறி அவள் கன்னங்களில் பல முத்தங்களிட்டான்.

வண்டி எல்லா வீதிகளையும் கடந்து வெங்கடேச மேஸ்திரி வீதியில் பிரவேசித்தபோது. "ஆம். நீங்கள் அந்த ரிக்ஷாவாலாவுக்கு என்ன தண்டனையை விதிக்கப்போகிறீர்கள்?" என்றாள் பத்மா.

"நான் அவனை மன்னித்துவிடப் போகிறேன் வயிற்றின் கொடுமையால் அவன் இத் தீச்செயலுக்கு உடன் பட்டுவிட்டான்......இவன் இல்லாவிட்டால் நீயும் நானும் சந்திப்பதேது?" என்றான் மதனகோபாலன்.

6

"நீங்கள் எவ்வாறு இந்த பதவியைப் பெற்றீர்கள்?" என்று ஒரு நாள் கேட்டாள் பத்மா.

"நான் என் தந்தையிடம் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுச் சென்றேனல்லவா! அப்பொழுது என் கையில் ஐந்து ரூபாய் பணமிருந்தது. அதை எடுத்துக்கொண்டு நேரே சென்னைக்குப் போனேன். சென்னையில் ஒரு பத்திரிகை ஏஜண்டின் சிநேகிதம் எனக்குக் கிடைத்தது. அவரிடம் பத்திரிகைகளை வாங்கி ரயில்வே ஸ்டேஷனிலும், ஜனக் கும்பல்களிருக்கு மிடங்களிலும் சென்று விற்றேன். அதனால் எனக்குத் தினம் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கிடைத்தது. நான் அந்தப் பணத்தில் எட்டு ரூபாயை அந்த ஏஜண்டினிடமே கொடுத்து அவர் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு வந்தேன். அவர் என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும் படியும் பள்ளிக்கூட நேரமில்லாத மற்ற வேளைகளில் பத்திரிகை விற்கலாமென்றும் கூறினார். நானும் அவ்வாறே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்துக்கொண்டும், விடுமுறை நாட்களிலும் ஓய்வு நேரங்களிலும் பத்திரிகை விற்பதும் மற்ற நேரங்களில் படிப்பதுமாக இருந்தேன். இப்படியே மெட்ரிகுலேஷன் வரையில் படித்துவிட்டேன். இந்த சமயத்தில் சில பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தேன். பல பத்திராசிரியர்களின் பேரன்பிற்குப் பாத்திரமானேன். அவர்கள் ஆள் ஒன்றுக்கு தலா பத்து ரூபாய் வீதம் எனக்கு மாதா மாதம் இனாம் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அந்த பணத்தின் துணைகொண்டு அவர்களால் இண்டர் மீடியட் வரையில் படித்தேன். அப்புறம் படிக்க முடியவில்லை. ஏதேனும் உத்தியோக மொன்றை நாடவேண்டி யிருந்தது. இன்ஸபெக்டர் பதவிக்குப் பயிற்சி பெற்றேன். உத்தியோகமும் கிடைத்தது. உனக்கே சொந்தமாகவும் ஆகிவிட்டேன்" என்றான் மதனகோபாலன்.



# இராமலிங்கர் கல்விகற்ற விதம்

(பெ. இராமாநுஜம்.)

உள்ளம் உருக; உவகை பெருகத் தெள்ளத்தெளியப் பாக்களைப் பாடியவர் நமது இராமலிங்க சுவாமிகள். அவர் கல்விகற்ற வரலாறு மிகு அற்புதமானது. அதனை மட்டும் ஒரு சிறிது எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நமது சுவாமிகள் மிகச் சிறுவயதினராயிருந்த பொழுதே பெற்றோரைப் பறி கொடுத்து விட்டமையால் தமது தமையனார் சபாபதிப் பிள்ளையின் ஆதரவில் வளர்ந்து வரலானார். சபாபதிப் பிள்ளை தமிழ்ப் புலமையும், சைவபுராணப் பிரசங்கம் செய்யும் ஆற்றலும் வாய்ந்திருந்தார். அவர் தமது குடும்ப வறுமையைத் தீர்க்க வேண்டி தமது சிற்றூரினீங்கி சென்னையை அடைந்தார். அங்கே வாழ்ந்த சைவப் பிரபுக்களை யடைந்து பரஞ்சோதி முனிவர் "திருவிளையாடற் புராணம்", "பெரிய புராணம்" முதலிய சைவ நூல் பிரசங்கம் செய்து, தமது குடும்பத்தை உயரிய முறையில் நடத்தி வந்தார். அப்பொழுது நமது இராமலிங்க அடிகள் மிக இளைஞர். அவரைத் தமிழில் புலமை பெறச் செய்ய விரும்பி அக் கால முறைக்கேற்றபடி நிகண்டு-திவாகரம்-சதகம் அந்தாதி-முதலிய நூல்களைப் போதித்து வரலானார் சபாபதிப்பிள்ளை. ஆனால் இராமலிங்கத்திற்கோ தமையன் போதனை யொன்றும் மனதில் படவே இல்லை. தனக்கு விருப்பமான பொழுது விருப்பமான ஏதாவதொரு நூலைப் படிப்பார். ஆலயங்களுக்குச் செல்வதிலும், திருவிழா போன்ற கூட்டங்களில் கலந்து கொள்வதிலும் அவருக்குப் பரமதிருப்தி. சில சமயம் தனித்திருந்தும் பரவசம் அடைவார். தான் கற்பித்தவற்றைப் பயிலாமல் மனம் போனபடி திரியும் இராமலிங்கத்தைக் கண்டித்துப் பார்த்தார் சபாபதிப் பிள்ளை. அவர் செயல் ஒரு சிறிதும் மாறவே யில்லை. அதனால் மனம் வருந்திய பிள்ளை தனது தம்பிக்கு முன்னாலேயே தன் அருமை மனைவியை அழைத்து "இனிமேல் இராமலிங்கத்துக்கு நீ உணவளிக்கக் கூடாது. அப்படிச் செய்வாயானால் நீயும் வீட்டினின்று வெளியேற வேண்டியது தான்" என்று ஆணையிட்டார். அண்ணன் உத்தரவுக்கு அஞ்சிய இராமலிங்கம் ஒரு நாள் முழுவதும் வீட்டிற்கு வரவில்லை. ஆனால் பசிக் கொடுமையை எத்தனை நாட்கள் பொறுக்க முடியும்? மறு நாள் பிற்பகல் அண்ணன் இல்லாத சமயம் பார்த்து புறக்கடை வழியாய் வீட்டிற்குள் நுழைந்தார். அவர் அண்ணி



யார் உயர்குலத்துப் பிறந்த உத்தமி. அன்பு நிறைந்த ஆயிழை—கற்பிற் சிறந்த காரிகை. அவள் தனது கணவனிட்ட கட்டளையின் உட்கருத்தையோர்ந்து, தனது மைத்துனரின் நிலைமைக்கு வருந்தி, முதல் நாள் முழுவதும் பசியோடு இருந்ததற்கு ஆற்றாது இரங்கி உணவளித்தாள். அவர் பசியாறியதும் வீட்டினின்று வெளியேறிவிட்டார். இவ்வாறு நாட்கள் பல கழிந்தன. இதனை சபாபதிப் பிள்ளை அறிந்தும் அறியாதவர் போல இருந்தார். தம்பியை முற்றிலும் மறந்தார்.

ஒரு நாள் சபாபதிப் பிள்ளையின் தாயார்க்குத் திதி. சாஸ்திரரீதியாகவும், விசேஷப் பிராமண சந்தர்ப்பணையோடும் மிகச் சிறப்பாக சிரார்த்தம் முடிவு பெற்றது. பின்பு நண்பரும் விருந்தினருமாகக் கூடி அறுசுவையுண்டி அயின்று, மேல் மாடிக்குச் சென்று சந்தனம் பூசி தாம்பூலம் தரித்து இன்னுரையாடிக் கொண்டிருந்தனர். சபாபதிப் பிள்ளையின் மனைவியார் உணவருந்தவில்லை. அவர் மனம அளவற்ற துன்ப மடைந்தது. பிள்ளைக்கும் தனது தம்பியைப் பற்றிய நினைவு இல்லாமலில்லை. "இந்த விசேஷ நாளிலாவது தன்னுடைய ஒரே பிறப்பு உடனிருந்து உண்பதற்கும் பாக்கியமில்லை!— எப்படியும் அண்ணியால் உண்பிக்கப்படுவான். அனைத்தும் ஆண்டவன் செயல்" என்று மனம் தேறினார். எனினும் அவர் மனம் அன்று அமைதி பெறவில்லை.

மாலை மணி மூன்று இருக்கும். தனது அண்ணன் உண்டு உறங்கும் நேரமாகிய இதுதான் தகுந்த சமயமென்று நினைத்து மிக விரைவாக வீட்டிற்குள் வந்தார் இராமலிங்கம். அவர் வரவை வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர் அருமை அண்ணியார் இலை விரித்து உணவு பரிமாறினார். "ஐயோ, எத்தனையோ பேர் வந்து மகிழ்வோடு உண்டு களித்திருக்கையில் இவர் இப்படி வேளை தப்பி வந்து பதனழிந்த உணவை உட்கொள்ள நேர்ந்ததே! இது இறைவனுக்குத் திருவுளச் சம்மதமா?" என்று மனம் கசியலானார். அவ்வளவில் அவ் வம்மையின் கருநீல விழிகளினின்று நீர்த்துளிகள் பெருக ஆரம்பித்தன. "பசி ருசியறியாது" என்பதற்கிணங்கவும், எங்கே தனது அண்ணன் வந்து விடுவாரோ என்ற அச்சத்தாலும் மிகவும் விரைவாக உண்டு கொண்டிருந்த இராமலிங்கம் தற்செயலாகத் தனது அண்ணியின் திருமுகத்தை பார்க்கலானார். அவர் திருமுகம் சோபை யிழந்து, கண்ணீரால் கன்னங்கள் நனைந்திருந்தன. அதைக்கண்ட இராமலிங்கம் "திடுக்கிட்"டார் உண்ண மனம் இசையவில்லை. "அண்ணியம்மா! என் வருந்துகின்றீர்கள்?" என வினவினார். அவர் அதற்கு ஒன்றும் கூறாமலே விழி நீர் பெருக்கினார். இராமலிங்கம் மேலும் மேலும் வினவினார்.

"நீ இப்படி எத்தனை நாளைக்குத் திருடனைப் போல வந்து போவது? ஐயோ! எனக்குப் பின்னால் உன் கதி யென்னவாகும்?" என்று தேம்பிய வண்ணமே கூறினார் அவ் வம்மையார். "அண்ணியம்மா! அதற்காக நான் என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள். தட்டின்றிச் செய்து முடிக்கிறேன்" என்றார் இராமலிங்கம். "நான் என்ன சொல்லப்போகிறேன்? உனது அண்ணன் விருப்பப்படி நீ கல்விகற்க வேண்டியது தான்" என அம்மையார் கூறினார்.

இராமலிங்கத்திற்கு உணர்ச்சி ஓங்கியது. அறிவு தெளிவடைந்தது. அன்னையினும் ஆயிரமடங்கு அதிகமாக அன்பு காட்டிவந்த தனது அண்ணியாரின் விருப்பை மறுக்க முடியவில்லை.

"உங்கள் உத்தரவுப்படியே படிக்கிறேன்: ஆனால் எனக்கு மேல் மாடியில் ஒரு அறையும், ஒரு கண்ணாடியும், சில பூசைக்குரிய பொருட்களும் வேண்டும்" என்று தனது அண்ணியாரிடத்தில் பெற்றுக்கொண்டு, மறுநாள் முதல் அவ் வறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு தனியே இருந்து படித்து வரலானார். ஆனால் அவர் என்ன புஸ்தகம் படிக்கிறார் என்பது இறைவனுக்குத் தான் வெளிச்சம். "தனது தம்பி வீட்டிலேயே தங்கித் தரித்திருக்கிறான்" என்பதே சபாபதிப் பிள்ளைக்கு ஒரு பெரிய ஆறுதலா யிருந்தது. சபாபதிப்பிள்ளை புராணப் பிரசங்கம் செய்யும் பொழுது கையேடு வாசிப்பவர் ஒரு பெண்மணி. ஒரு நாள் அப் பெண் சுர நோயால் வருந்தினமையால் "கையேடு வாசிப்பதற்கு ஆள் இல்லாமல் எப்படி புராணப் பிரசங்கம் செய்வது?" என்று மனம் வருந்தினார் சபாபதிப்பிள்ளை. இதை யறிந்த அவரது மனைவியார் "கொஞ்சம் பொறுங்கள்; வருகிறேன்" என்று கூறி "சர சர" வென மேல் மாடிக்குச் சென்றார். "தம்பி! இராமலிங்கம்! கையேடு வாசிப்பவள் இன்று சுரத்தால் வருந்துகின்றாள். கையேடு வாசிப்பவர் இல்லாமல் புராணப பிரசங்கம் செய்வது அவ்வளவு நன்றாயிராது. இதனால் உனது அண்ணன் என்ன செய்வதென்று அறியாமல் வருந்துகிறார். நீ வாசிப்பாயா? தைரியமாகச் சொல். வாசிப்பதா யிருந்தால் இன்று பிரசங்கம் நிறுத்த வேண்டி யிராது" என்று கேட்டார் அம்மையார். இராமலிங்கம் மறுதளிக்காமல் உடனே ஒப்புக் கொண்டார். அம்மையார்க்கு உண்டான மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா? விரைந்து வந்து கணவனிடம் சொன்னார். அவரும் அரைமனதாக ஒப்புக் கொண்டார். "இராமலிங்கம் எவ்வாறு படிப்பானோ" என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது.

அன்று இரவு புராணப் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. இராமலிங்கம் "கையேடு" படிக்கலானார். அவர் எடுத்த எடுப்பே இன்பந் தருவதா யிருந்தது. குயிலோசையைப் போல் குரலும் கூடிக் கொண்டது. பதங்களைப் பிரித்துப் பிரித்து மிகப் தெளிவாகப் படித்தார். கேட்கவா வேண்டும்? சபையில் தேவாமிர்தம் கொழித்தது! சபாபதிப்பிள்ளை அளவிறந்த குதூகலம் அடைந்தார். வீட்டிற்கு வந்ததும் மனைவியிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தார். "ஏதோ கடவுள் கண் திறந்தது" என்று கூறி உள்ளூர மட்டற்ற மகிழ்வு கொண்டார். மறுநாள் இராமலிங்கத்திற்குக் "கண்ணேறு" கழித்தார்.

மற்றொரு நாள் முத்தியாலுப்பேட்டையில் ஒரு சைவப் பிரபுவின் வீட்டில் பிரசங்கம் நடைபெற இருந்தது. அன்று மாலை சபாபதிப் பிள்ளைக்குத் தாங்க முடியாத தலைவலி. இராமலிங்கமோ இன்னும் தனது அண்ணன் எதிரே வந்து நிற்பதில்லை. அதனால் அவர் தமது மனைவியிடத்தில் "இன்று பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்திருக்கும் செட்டியாரிடத்தில் சென்று எனது உடல் நிலையைத் தெரிவித்து வரும்படி தம்பியை அனுப்பிவை" என்றார். இராமலிங்கமும் செட்டியார் வீட்டிற்குச் சென்றார்.



அங்கே பிரசங்கத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மிக ஆடம்பரமாகச் செய்யப்பட்டிருந்தன. ஜனங்களும் ஏராளமாகக் கூடி யிருந்தனர். இந்த நிலைமையில் செட்டியாரிடத்தில் செய்தியைத் தெரிவித்தார். அவருக்கு எப்படி இருக்கும்? "இன்று எனது வீட்டில் பிரசங்கம் என்று எல்லோருக்கும் அறிவித்திருந்தேன். அவ்வாறே அவர்கள் அனைவரும் கூடி விட்டார்கள். 'பிரசங்கம் இன்று நடைபெறாது' என்று எப்படி அவர்களிடத்தில் சொல்வேன்?" என்று மனம் வருந்தினார். அவருக்கு அருகில் இருந்தவர்கள் "இராமலிங்கமும் நன்றாகப் பிரசங்கம் செய்வார். அவரைக் கொண்டு இன்று நடத்தி விடுவோம்" என்றனர். இராமலிங்கமோ தனக்கு ஒன்றுமே தெரியாதெனச் சொல்லிப் பார்த்தார். அவர்கள் வற்புறுத்தலை மீற முடியவில்லை. கடைசியாக இராமலிங்கம் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். கையேடு படிப்பவருமில்லை. காலேடு படிப்பவருமில்லை. கேட்போர் தம்மை மறந்து பரவசம் அடையும்படி விடிய விடியப் பிரசங்கித்தார். ஜனங்கள் அசைவற்று ஆனந்தவாரியில் மூழ்கி யிருந்தனர்.

"இனிமேல் இராமலிங்கமே பிரசங்கித்தால் போதும்" என்று சபாபதி பிள்ளைக்குச் செட்டியார் அறிவித்தார். அவரோ "தமது தம்பி சாதாரண மனிதனல்ல; தேவபிண்டம்" என மதித்து வரலானார்.

இவ்வாறு ஓதாதுணர்ந்த பெரியாராகிய இராமலிங்க அடிகள் "மக்கள் அனைவரும் சகோதரர்கள். இறைவனால் படைக்கப்பட்ட சகல ஜீவ ராசிகளிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும்" என்ற சிறந்த கொள்கையைத் தமது வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழுகி, அதனை யெங்கும் பரப்ப "சமரச சன்மார்க்க சங்கம்" என ஒன்று நிறுவினார். அது இன்றும் நடைபெற்று வருகிறது.

"அருளுடையோர் எல்லோரும் சமரச சன்மார்க்கம்
அடைந்தவரே யாதலினால் அவருடனே கூடி
தெருளுடைய அருள்நெறியால் களித்து விளையாடிச்
செழித்திடுவோம் வாழ்ந்திடுவோம் செகத்தீரே! வாரீர்!"






# ஒளவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

"ஒன்னாரைத் தேறேல்" என்பதற்கு, பகைவரை ஒருபோதும் நலம் செய்வார்களென்று நம்பி நீ மோசம் போகாதே என்று பொருள். பகையுடையோர் நம்பால் உறவுடையோர்போல நடிப்பதுண்டு. அந் நடிப்பு அவர்கள் சமயம் பார்த்து தாம் வெற்றி பெறுதற்கேயென்பது தெளிவு. இந்நீதி பெரிதும் உலகாளும் வேந்தற்கே பொருந்தும். வள்ளுவனாரும் இதனை அரசியல் அதிகாரங்களிலேயே வைத்துப் பேசினார். இதனை,

"வாள்போற்;பகைவரை யஞ்சற்க அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு."

என்ற குறட்பாவினால் நன்கு விளக்கினர். மறைவின்றி எதிர்த்து நிற்கும் கூரிய வாள் போன்ற பகைவரைக்கண்டு அச்சப்பட வேண்டியதில்லை. ஆனால் உற்றாரைப்போல வஞ்சமாக நடித்து நமக்குத் தீங்கு விளைவிக்கும் பகைவருக்கே அஞ்சுதல் வேண்டும் என்பது இதன் பொருள். இதனால் விளையும் கேடு பல. உதாரணமாக போரில் வெல்ல முடியாத தவப்பயனுடைய அசுரவேந்தனாகிய மகாபலியை மகாவிஷ்ணுவாகிய காத்தற்கடவுள் வேதமோதும் சிறிய அந்தணகுலச் சிறுவனாக யாகசாலையிற் சென்று மூன்றடி மண் தானம்கேட்டு அதற்கவன் இசைந்த காரணத்தினால் அழிந்துபட்டதே சாலும். குலகுரு தடுத்தும் அவனது ஈகைக்குணத்தின் உறுதியால் கேளா தொழிந்தான். அந்த அளவில் அவன் புகழ் ஒப்பற்றதே. ஈண்டு வாமனமூர்த்தி பகையை அழிக்கக் கைக்கொண்ட உபாயம் வேதமோதும் விப்பிரச் சிறுவனாகிய பொய்வேடமே யாதலின், இது அஞ்சத்தக்க பேராபத்தாக முடிந்தது. இதனால் கெட்டவன்—மீண்டும் எழ முடியாதாதலினால் இதற்கே பெரிதும் அஞ்சுதல் வேண்டுமென்றார். சாமானியர் விஷயத்திலும் இவ்வித எச்சரிக்கை-இன்றியமையாததே. ஒருதரம் பகைத்தவர்கள் எக்காரணம் பற்றியும் நெருங்கி நேசிப்பதை அறிஞர் ஒருபோதும் விழைவதில்லை. இதற்கு''நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும், நோக்கினவர் பெருமை நொய்தாகும்—பூக்குழலாய், நெல்லின் உமி சிறிது நீங்கிப்



பழமைபோல், புல்லினும் திண்மை நிலைபோம்'' என்ற வெண்பாவே உதாரணமாகும். நமது தமிழ்நாட்டில் 'சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாது. சுடுகாடு போன பிணம் திரும்பாது' என்ற பழமொழியை எழுத்தறியாத பேதையர்களும் வழங்குதல் விளக்கம். ஆதலின் எக்காரணம் பற்றியும் ஒருகாற் பகைத்தவர்களை அவர்கள் மொழியைக்கொண்டு நம்புதல் கூடாதென்னதை உணர்தல் வேண்டும்.

"ஓரஞ்சொல்லேல்" என்பது அடுத்த நீதி இதற்கு பக்ஷபாதமாக யாதொரு வழக்கிலும் பேசக் கூடாதென்பதே பொருள். ஒருதலையாகத் தங்களுக்கு வேண்டியவர்கள் குற்றத்தை மறைத்துப் பேசும் விஷயத்தில் முன்வருவதே இதற்குக் காரணம். நியாயம் வழங்கும் பதவியில் இருப்போர் சிலரும் இந்தக் கோரமான தீங்கைச் செய்யத் துணிகின்றனர். இவ்வாறு செய்தற்கு அவர்கள் பொருளாசையாற் கட்டுப்படுவதே காரணம். சில சமயம் இனத்தின் அபிமானமும் உறவின்முறை யபிமானமும் கூட இதில் இடம் பெறுவதுண்டு. ஆகவே நியாயம் வழங்குவதென்பதே ஒரு வியாபாரமாக முடிகிறது. இந்நிலை வெகு விரைவில் எத்துணை உயரிய பதவியையும் அழித்து மீளா நரகிலும் ஆழ்த்தும். இதனை வலியுறுததவே கம்பநாடர்—"பொய்யிலா நிற்பினின்றன நீதி" என்று கூறி வைத்தார்.

சங்கர விஜயத்தில் சங்கரருக்கும் மண்டன மிசிரருக்கும் வாதப் போர் நடந்தபோது, அந்த அவைக்குத் தலைவியாக அமர்ந்தவர் உபயபாரதியேயாவர். தன் பதியான மண்டன மிசிரர் தோற்றால் சம்சாரத்தை விடுத்து சன்யாசியாக வேண்டுமென்பது ஒப்பந்தம். இந்த உடன்படிக்கையின் பயனாகத் தான் கணவனை யிழக்க வேண்டியது நேரும். பயங்கரமான இந்த உடன்படிக்கையை உணர்ந்தே உபயபாரதியார் சபையோர் வேண்டுகோளின்படி அவைத்தலைமை யேற்றார்.

தன் கணவன் இறுதியில் தோல்வியுற்றபோது அதனை வெளியிடத் தயங்காமல் யதிகளே பிக்ஷைக் கெழுந்தருள்வீர்களாக என்றழைத்தனராம். தோல்வியும் வெற்றியும் ஏற்படாதிருந்த நாட்களில் தனது பதியை கிருஹஸ்த தர்மப்படி போஜனத்திற் கெழுமின் என்றும் சங்கரரை சன்யாசி தருமப்படி பிக்ஷைக் கெழுந்தருள்க எனவும் முடிவில் அழைத்து வந்தனராம். இந்த அழைப்பின் வாசகமே அவ்விருவரில் வெற்றி தோல்வி ஏற்படவில்லை யென்பதைக் குறிப்பால் உணர்த்தியது. தன் பதி இறுதியில் தோல்வி யுற்றது கண்டு நீர் தோற்றீர் என்று மனைவியாகிய தான் கூறுவது மரபன்றென வெண்ணி உடன்படிக்கைப்படி தோற்ற நீரும் யதியாக மாறிவிட வேண்டியவர் என்பது தோன்ற, சுவாமிகளே பிக்ஷைக் கெழுந்தருள்வீர்களாக என்றழைத்து அதனால் தனது தீர்ப்பை சபையோர்க்கு விளக்கியதாகத் தெரிகிறது. ஓரம் சொல்ல ஒருப்படாது தமது வாழ்வையே தியாகம் செய்ய உபயபாரதியை நாம் என்னவென்று துதிப்பது? பொதுவாக ஓரம் சொல்லாத குணம் மக்கள் உள்ளத்தில் வளர்ச்சி பெறுமேல் கோடி கோடி குற்றங்கள் மறைந்து படும். பொய்க்கரி கூறுவோர் இல்லா தொழியின் எத்தனை வழக்குகள் இறந்துபடும். மனச்சாட்சிக்கு மாறாக ஒரு போதும் நடவாமல் நீதி வழங்குவோர் நெறி நிற்ப ரெனில் அது முதல் யுகமாக வன்றோ பொலி வெய்தும். இது குறித்தே பாண்டு மன்னவரின் பட்டத்தரசியும் பாண்டவரின் தாயுமான

குந்தி தேவியார் கண்ணனை நோக்கி 'யுகத்தை உண்டு பண்ணுபவன் அரசனே யாகும். யுகம் ஒருபோதும் அரசனை யுண்டு பண்ணுவதில்லை' யெனப் புகன்றதாக வியாஸ பாரதம் கூறுகிறது.

பகைவர், நண்பர், அயலார் எனப்படும் மூவகையினரிடமும் நடுநிலைமை வகிப்பவர்களே ஓரம் சொல்லாத உத்தமராவர்.

மநு நீதி கண்ட சோழன் தன் அரசிளங்குமரன் புத்தி பூர்வமாகப் பசுவின் கன்றை விபத்திற் குட்படுத்தா திருந்தும் தாய்ப் பசு பட்ட சோகத்தையும் தன் பால் பரிகாரம் பெற விரும்பிக் கையாண்ட முறையினையும் உளங்கொண்ய அன்றோ,

> "ஒருமைந்தன் தன்குலத்திற் குள்ளான்என்பது முணரான்
> தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
> மருமந்தன் தேராழியுற வூர்ந்தான் மநுவேந்தன்
> அருமந்த வரசாட்சி யரிதோ மற்றெளிதோ ?"

என்றார் சேக்கிழார் பெருமான். ஓரம் சொல்வது சாதாரணமாக நோக்குமிடத்து எளிய காரியமாகப்படும். ஆனால் அதனால் வரும் கேடு மலைகளினும் பெரிது.

> "நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
> யன்றே யொழிய விடல்"

என்றருளினர் திருக்குறளாரும். ஓரம் சொல்வோன் முதலில் தன் மனச்சாட்சியைக் கொலை செய்கின்றான். பிறகு எவனுக்காகப் பொய் புகல்கின்றானோ அவனுடைய நேர்மையையும் அழிக்கின்றான். கடவுள் முன்னிலையில் தரும நீதிக்கும் துரோகம் செய்கின்றான். இதுவன்றிப் பொருளாசையால் நீதிக்கு துரோகம் செய்பவர் எவரும் 'தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச்சுடும்' என்ற பொய்யா மொழிக்கிணங்க தமக்குள் மனவமைதி குன்றித் துயருழக்கவே நேரும். ஒரு தீங்கு வரினும் தான் செய்த பாவத்தின் பயனே யென்று எண்ணி வருந்துவர். விரிக்கிற் பெருகும்.

தமிழரசியாராகிய நம் மூதாட்டியார் அருளிச் செய்த ஆத்தி சூடி யென்னும் பெயருடைய நீதிக் கோவை நூற்றெட்டு வரிகளுடன் முற்றுப் பெறுகிறது. இதற்கு ஆதி அறம் செய்ய விரும்பு என்பது. இறுதி ஓரம் சொல்லேல் என்பது. ஊன்றி நோக்குங்கால் இரண்டிற்கும் தொடர்பிருப்பது புலனாகும். அறம் செய்ய விரும்பு என்பதிலேயே அனைத்தும் அடங்கு யிருக்கின்றது உண்மை. எனினும் அறம் என்பது என்ன? அதனை என்னென்ன வகையால் உணரலாம்? உணர்ந்த பின் அறத்தைக் கொள்ள வேண்டிய உபாயங்கள், ஒழுங்குகள், உறுதிப் பாடுகள், அறத்தைச் செய்ய விரும்புவதற்கு முடிவான பயன் இது வென்பது. ஆகிய அனைத்தையும் விளக்கிக் காட்டுவதே பிந்திய நீதிகளின் கருத்தாகவும் கொள்ளலாம். இறுதியில் கூறிய ஓரம் சொல்லேல் என்பது ஆதியிற் கூறிய அறத்தைக் கடைப்பிடிக்கும் நேர்மையான வழியாகும். நடுநிலையில் உன் மனதை நிறுத் தென்பதே அதன் பொருள் என்பதை மேலே சுட்டினோம். உற்றார் பகைவர் என்னும் பேத வுணர்ச்சி மறைந்திடுமேல் அதுவே சன்



மார்க்கம் என்று மறு பெயர் பெறுகின்றது. அந்த சன்மார்க்கமே அழியா மார்க்கம். அழியா மார்க்கம் என்பதே பகுத்தறிவுள்ள மனிதன் முயன்று பெற வேண்டிய முடிவிடம். திருவருட் பிரகாச வள்ளலாரும் சன்மார்க்கம் என்னும் வட மொழிப் பெயரைத் தமிழ் மொழியில் நடுநிலை எனக் கூறியுள்ளார். இம்மையில் தவறிழைக்காமல் சொல்லாலும், செயலாலும் எண்ணத்தாலும் எவன் நடந்து கொள்ளத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் திறமை யுள்ளவனோ, அவனே மறுமையையும் பெற ஏற்றவனாகின்றான். தன்னை ஆன்றோர் உணர்த்திய ஒழுங்குகளுக்கு உட்படுத்திக் கொள்ள முடியாதவன் ஆரம்பத்திலேயே கண் மூடி மௌனியாகிப் புலனடக்கம் செய்கின்றேன் என சங்கற்பம் செய்து கொள்வதில் சிறிதும் உண்மையில்லை. வாய் வழி மென்று உண்ணப்படாத உணவு வயிற்றை நிரப்பிப் பசியாற்றுவதற்கில்லை. அது பற்றியே அன்னையார், ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல் எனத் தொடர்ந்து கூறியுள்ள நூறு வரிகளும் இம்மையின் இலக்கணங்களையே கூறி நூற்றி ஓராவதான நீதியில் வீடு பெற நில் என்ற பேரின்பத்தை நாடும்படி போதித்தருளினர். அத்தகைய அழியாத இன்பத்தை அடைவது சன்மார்க்கத் திறவு கோலாலன்றி வேறு எம் மார்க்கத்தாலும் இயல்வதன் றென்பது எவரும் உணர்ந்ததே அத்தகைய சன்மார்க்கமாகிய நடு நிலைமை வளர்ப்பதற்கு ஓரம் சொல்லாமல் நேர்மையாக ஒழுகுவது சுருக்கமான வழி. ஓரம் சொல்லாதவன் சுயநலத்தியாகி யென்பது வெளிப்படை. சுயநலத் தியாகம் செய்யும் மனம் வாய்க்கு மேல் அதற்கு மேல் எய்த வேண்டிய மேன்மையு முண்டோ? அத்தகைய மேன்மையை இளமையிலிருந்தே படிப்படியாக வளர்த்துவர வேண்டியது மக்களின் கடன். தோன்றிய உயிர்கள் அனைத்தும் விட்ட தளிர் இலையாகிப் பழுப்பாகிக் காம்பற்று உதிர்வதுபோல சன்மார்க்க முதிர்ச்சியால் மேல்நிலை யெய்திப் பற்றற்று நிவர்த்திபெறவேண்டு மென்பதே ஔவையாரின் பெருமித எண்ணம். பொதுவாக நோக்குங்கால் ஆத்திசூடி ஆரம்பப் பள்ளிச் சிறார்களுக்காக வகுக்கப்பட்டதெனக் கருதி வயது முதிர்ந்த தமக்கது வேண்டற்பாலதென அசட்டை செய்வோர் சிலர் இருப்பரேல் அவர் நிலை இரங்கற்பாலதேயாகும். ஆத்திசூடியின் அமைப்பு அரிச்சுவடியை சிறுவர்களுக்கு நினைப்பூட்டும் நோக்கத்தை எடுப்பிற்கொண்டிருப்பது உண்மை. அவ்வாறே எழுத்தின் வரி வடிவங்களை அறியும் ஆரம்பப் பயிற்சியாளர்க்கு ஏற்றபடி இருமொழிகட்கு மேற்படாத இணைப்புத் தொடர்களாகவே எளிதிற் கற்குமாறும் வகுக்கப்பட்டுள்ளது. உண்மையாக உள்ளுறையான நீதிகள் யாவும் சிறுவர், யுவர்கள், முதியர், பெண்கள், நீதிவழங்குவோர், ஞானிகள் முதலிய அனைவர்க்கும் வேண்டற் பாலதாகவே விரிந்து நிற்கின்றன. பின்னால் யுவர்களாகவும், முதியராகவும், தலைவராகவும், துறவோராகவும், சன்மார்க்கர்களாகவும் வளர்ந்து பொலிய வேண்டியவர்கள் இளைஞர்களே யாதலின், அவர்கள் உள்ளத்தில் மறக்க முடியாது எல்லா நீதிகளையும் கல்வெட்டுப்போல் அழியாவண்ணம் பொறிக்கவேண்டு மென்பதே அன்னையாரின் பெருங்கருணை என்பதை உய்த்துணர்தல் வேண்டும். யோகத்தினாலும் மெய்யுணர்வினாலும் சிறந்து நின்ற பெருமாட்டியார் இளைஞர் பக்குவத்திற்கேற்றபடி இலேசாக அமைத்தருளினர் என்பது தெளிவு.

இவ்வண்ணம் இலேசாக இருமொழி யிணைப்புத்தொடர்களாக ஆத்தி

குடியை வகுத்து அருளிய ஒளவையார் இம்மட்டோடு அமையாமல் தொடர்ந்து நான்கு மொழிகளால் அமைத்த முன்னையதிலும் சற்று நீண்ட மொழித் தொடர்களாகக் கொன்றைவேந்தனை இயற்றியருளினர். இதன் அமைப்புமுறை படிப்போர்க்கு செய்யுள் இன்பத்தை ஊட்டுவதுமாகும். செய்யுளிலக்கணத்தில் பொருள் அறியாதாரும் ஓசையால் இன்புறச் செய்யும் உபாயங்கள் எதுகையும் மோனையும் என்பது செய்யுளில் சிறு ஆராய்ச்சியுடையோர்க்கும் தெரியும். 'மாடக்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும், ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்' பின்னும் அழகு செய்தல் போலத் தமிழ் மொழியாகிய அணங்கினை அழகுபடுத்துவது செய்யுள் இலக்கணமாகும். செய்யுளில் சொல்லின்பம் பொருளின்பம் ஓசையின்பம் ஆகிய மூவகையின்பமும் நிரம்பியிருந்தாலன்றி கேட்போர் உள்ளம் உவகையுறாது. பாஷையுணராதாரும் ஓசையின்பத்தாற் பரவசப்படச் செய்வது செய்யுளிலக்கண அமைப்பேயாகும்.

பிறந்தபொழுதே தனது தாயைத் தேற்றக் கவிபாடிய ஒளவையார் நீதிப்பாலோடு செய்யுட் சுவையாகிய சர்க்கரையையும் கூட்டியே சிறுவர்கட்குப் புகட்டுகின்றார் என்பது கொன்றைவேந்தன் தொடர்களால் இனிது தெரிய வருகின்றது. தவிர வசனத்தை மனப்பாடம் பண்ணல், கூர்த்த அறிவுள்ள மாணாக்கர்களுக்கும் இலேசன்று. செய்யுளமைப்பாயின் மந்தமதியுடைய மாணாக்கரும் நெட்டுருப்போட முடியும். இப்பயன் கருதியும் நமது அருட்பெருங் கிழவியார் தாம் கூறிய எல்லா நீதிகளையும் எவரும் இலேசாகக் கற்பதற்கேற்ப சுருக்கமாகவும் என்று மறவாதிருக்க செய்யுளமைப்பைத் தழுவியும் வரைந்துள்ளார். கொன்றை வேந்தனிலும் அகர வருக்க வரிசையை அணிபெறவமைப்பதைக் கைவிடவில்லை. பட்டதாரிகளிற் சிலர் அரிச்சுவடியிலுள்ள சில உயிர்மெய் எழுத்துக்களை அறவே மறந்திருப்பது இக்கால அநுபவம். ஆதியிற் படிப்பிக்கும் முறையின் பயனே அதற்குக் காரணம் என்பது தெரிந்ததே. ஆதிகாலத்தில் எழுத்துக்களை வரிசைக் கிரமப்படி தலையிலிருந்து இறுதிவரையிலும் இறுதியிலிருந்து தலைவரையிலும் மனப்பாடமாக ஒப்புவிக்கச் செய்வது போதனா முறையாக விருந்தது. கணிதமும் அவ்வாறே கற்பிக்கப்பட்டு வந்தது. பழங்காலப் போதனாமுறையிற் பயின்றவர்களுக்கு மறதியென்பதே மறந்திருந்தது. நிகண்டு திவாகரம் என்னும் நூல்களின் உள்ளுறை என்ன வென்பதே சமீபகால மாணவர்கள் அறியமாட்டார்கள். அகராதி ஏற்பட்ட பின்னர் அரும்பொருள் விளக்கம் அனாவசியமாகிவிட்டது. அக்காலப் படிப்பாளிகளுக்கு அறிவே நிகண்டென்னும் அகராதி. அவர்களை வீண் வேலைக்காரர்களாக நாகரிக நிலையில் எண்ணத் தலைப்பட்டனர். சட்ட ஞானம் சரித்திர ஞானம் ஆகிய எல்லாக்கலைகளிலும் தற்கால விற்பன்னர்கள் சந்தேகம் நேர்ந்துழி புத்தகங்களைப் புரட்டவேண்டியதே இன்றியமையாததாகி விட்டது. இலகுவான சாதனங்கள் பெருகப்பெருக நினைவாற்றல் தேய்ந்து மேடிட்டது. ஆரம்பப் படிப்பை உரம்பெற உணர்த்துவதில் சோம்பலற்ற ஆசிரியர்களை நோக்கியே 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற முதுமொழியும் எழுந்ததுபோலும். எனவே பிராட்டியார் பாலர்க்குத் தனித்த முறையில் போதிக்க முற்பட்டார் என்பதோடு ஆசிரியர் கடமையையும் எளிதாக்கப் பேருதவி புரிந்தார் என்பது சிந்திக்கத்தக்கது.

---

# 'குற்றவாளி யார்?'

(தே. வி. ராமமூர்த்தி.)

சம்சார பந்தத்தினின்றும் விடுபட்டு துறவு பூண்டு செல்லும் ஒரு ஞானி யோகியின் உல்லாச நடையைப் போன்று பெருத்த ஆரவாரத்துடன் கோஷிக்கும் சமுத்திரத்தினூடே அலக்ஷியமாகவும் நிதானமாகவும் தவழ்ந்து செல்லும் ஒரு படகு கரையிலிருந்து பார்ப்பவர்களுக்கு எவ்வளவு ரமணியமாகத் தோன்றினும் அலைகள் வந்து மோதும் அந்தப் படகு என்ன ஆட்டம் கொடுக்கின்றதோ அதைப் போல ஒருவனது பெருமித வெளி வாழ்க்கையைக் கண்டு சுற்றிலுமுள்ளோர் பொறாமை கொள்ளினும் உள்ளூர அவனது வாழ்க்கை என்னும் பெருங்கடலில் வந்து மோதும் அலைகளைப்பற்றி அவர்கள் சாதாரணமாக அறிவதில்லை.

தபால் வாஞ்சிநாத அய்யரின் ஏகபுதல்வன் ராமச்சந்திரன் எவ்வளவோ சுக போக்கியங்களிடையே வளர்க்கப்பட்டு வந்தும் அவனுக்கு வாழ்க்கையில் உண்மையில் சந்தோஷமில்லை. அவன் தன் மாமன் மகள் கோமதியை மணம் செய்துகொள்ள விரும்பினான். ஆனால் வாஞ்சிநாதய்யர் அதற்கு ஒப்பவில்லை.

"உனக்கு சொக்கனூர் மிட்டாதார் விஸ்வநாதய்யர் பெண் ராஜத்தை நிச்சயம் செய்யலாம் என்றிருக்கிறேன். அவர்களும் நம் சம்பந்தத்தை பெரிதாய் கருதி அடிக்கடி கடிதம் எழுதுகின்றார்கள்" என்றார் வாஞ்சிநாதய்யர்.

"எனக்கு விவாகம் செய்துகொள்ள இப்பொழுது அவசரமில்லை. படிப்பு பூர்த்தியான பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று தட்டிக் கழித்தான் ராமச்சந்திரன்.

"நீ இப்படியே சொல்லிக் கொண்டிரு. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளாமல் பிறகு நாமாக வலுவில் போனால் கிராக்கி செய்கிறார்கள். சீர் இவ்வளவு செய்ய வேண்டும்? நகை இவ்வளவு பவுனில் போட வேண்டும்? என்று அவர்கள் இல்லாதது எல்லாம் சொல்ல மாட்டார்களா? எல்லாம் நம் ப்ராப்தம் போல் தானே நடைபெறும். நான் முட்டிக் கொண்டாலும் அது நிறைவேறுமா?" என்று கோபமாய் கூறிக் கொண்டே வாஞ்சிநாதய்யர் வெளியில் சென்றார்.

சட்ட கலாசாலைப் படிப்பும் முடிந்து அவனும் அட்வகேட்டாக பதிவு செய்து கொள்ளப்பட்டான். தபால் வாஞ்சிநாதய்யர் தனது கோரிக்கை ஈடேறுமலேயே பரகதி அடைந்து விட்டார். அவருடைய ஆயுட் காலத்தில் அவருக்கிருந்த விசேஷ செல்வாக்கினால் ராமச்சந்திரன் தன் தொழிலில் பிரகாசிக்கலானான்.

* * * *

செவ்வானத்தில் கதிரவன் தன் பொன்னிற கிரணங்களை அள்ளி

யிரைத்துக் கொண்டு கீழ்த்திசையில் எழுந்தான். சூரியனுடைய இளம் வெய்யில் ஜன்னல் வழியாக உட்புகுந்து இவன் முகத்தில் தாக்கவும் ராமச்சந்திரன் கையை உதறிக் கொண்டே எழுந்திருந்தான். தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய காட்சி ஒன்றில் தனது மனதை பறிகொடுத்து அந்த சிந்தனையிலேயே மூழ்கியிருந்த அவன் முகத்தில் புன்னகை அரும்பிற்று. தான் கண்டது கனவா அன்றி நனவா என்று நிச்சயம் செய்துகொள்ள தன்னைச் சுற்றி பார்த்துக் கொண்டான். "படுக்கையில் சிரிக்காதே!" என்று யாரோ சொல்வது போல் அவனுக்கு பிரமை உண்டாகவே அவன் திடுக்கிட்டான். ஆனால் அடுத்த நிமிஷம் அவன் அந்த சப்தம் வந்த திக்கை உற்று கவனிக்கவும் அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. இவ்வளவு அதிகாலையில் அவனைத் தேடிக்கொண்டு வேறு யார் வரப் போகிறார்கள்! கோபாலன் தான்! ராமச்சந்திரன் கோமதி விஷயமாக சிரத்தை எடுத்துக் கொள்ள ஆரம்பித்ததிலிருந்து கோபாலனுக்கு ராமச்சந்திரன் வீட்டில் ஏதாவது வேலை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது! அவனுக்கு எந்த விஷயத்தில் என்ன சந்தேகம் ஏற்பட்ட போதிலும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவன் ராமச்சந்திரன் ஒருவனே என்று அவன் கருதுவது போலிருந்தது! சில்லரை கை மாற்றுகளுக்கோ அல்லது ஜாமீன் கையெழுத்துகளுக்கோ ராமச்சந்திரன் ஒருவனே தக்க சமயத்தில் உதவும் ஆப்த நண்பனானான். சில்லரை சமாசாரமாயிருந்தால் அதைக் கொடுப்பதற்கு ராமச்சந்திரன் ஆட்சேபம் எழுப்புவதில்லை. கோபாலனுக்கு உதவி செய்வது அவனது பொழுது போக்காய் அமைந்தது. இன்னும் உண்மையைக் கூறப் புகில், கோமதி தலை அசைத்தால் அவளுடன் தன்னந்தனியாக உலகத்தின் மறு கோடிக்கும் அவன் புறப்பட தன்னை ஆயத்தம் செய்துகொண்டிருந்தான். கோமதியின் எண்ணம் அவன் மனதில் அவ்வளவு வேர் ஊன்றியிருந்தது. எனவே அவள் சகோதரன் கோபாலனுக்காக அவன் அவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதில் என்ன ஆச்சர்யம்!

ஆனால் கோபாலன் இப்பொழுது ஒண்டியாக வரவில்லை. அவனுடன் கூட கோமதியும் வந்திருந்தாள். கோமதி என்றுமில்லாமல் அவனை தேடிக் கொண்டு வந்திருப்பதிலிருந்து ஏதோ விசேஷம் நேரிட்டிருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்ட ராமச்சந்திரன் சரேலென்று படுக்கையை விட்டு எழுந்திருந்தான். அவன் கோமதியை எவ்வளவோ முறை வீட்டிற் போய் கண்டிருப்பினும் அவள் என்றும் இவ்வளவு வசீகரமாய் தோன்றியதில்லை. அவள் வெளுத்த முகம் அவளுக்கு ஒரு தனி அழகைக் கொடுத்தது.

"என்ன கோமதி, உனக்கேன் இவ்வளவு? சிரமம். கோபாலனிடம் சொல்லி அனுப்பினால் நான் வரமாட்டேனா" ராமச்சந்திரன் இதை உபசாரமாகச் சொல்லவில்லை. மனப் பூர்வமாய்த் தான் கூறினான்.

கோமதியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. ஆனால் அவள் அதை மறைத்துக் கொண்டு, "அதற் கென்ன இப்பொழுது! கோபாலன் விஷயமாகத் தான் இப்பொழுது நான் இங்கு வர நேரிட்டது" என்றாள்.

கோபாலன் உதட்டைக் கடித்துக் கொண்டான். கோமதி ராமச்சந்திரன் பதிலை எதிர் பாராமலே மறுபடியும் "எங்களுக்கு ஆதரவாயிருந்த எங்கள் தாய் இறந்த பிறகு நாங்கள் எங்கள் மாமாவின் உதவியினால் தான் ஜீவனம் செய்கிறோம் என்று உங்களுக்கு தெரியும்" என்று கூறி ராமச்சந்திரன் முகத்தைப் பார்த்தாள்.



"ஆமாம். அதுதான் தெரிந்த சங்கதியாயிற்றே!"

"கோபாலன் அறியாமையினால் சில அனாவசிய சங்கடங்களை உண்டு பண்ணி விட்டான்."

"அவன் சுத்த ஊதாரி என்று எனக்குத் தெரியுமே! பண விஷயமாகத் தானே நீ சொல்கின்றாய்?" என்று ராமச்சந்திரன் கேட்டான்.

கோமதியின் முகம் சட்டென்று வாட்டமடைந்தது. பேதைப் பெண் பாவம்! எதையும் பொறுப்பாள்; தன் சகோதரனைப் பற்றி பிறர் தூஷணையாய் கூறுவது மட்டும் அவளால் சகிக்க முடியாது. இதை ஒரு நொடியில் உணர்ந்து கொண்ட ராமச்சந்திரன் "அவன் நீ நினைப்பது போல் ஊதாரி இல்லை என்றே பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். பணக் கஷ்டம் என்ன என்பது மட்டும் அவனுக்க தெரிவதில்லை என்பதையாவது நீ ஒப்புக் கொள்கின்றாயா?" என்றான். கோமதி உடனே "அதைத் தான் நானும் சொல்ல வந்தேன் இப்பொழுது! அவன் மாமா கொடுத்து விடுவார் என்ற தைரியத்தினால் சில இடங்களில் பெருத்த தொகைகள் கடன் வாங்கி விட்டான். இப்பொழுது கடன் கொடுத்தவர்கள் வந்து பணத்திற்காக நெறிக்கும் பொழுது தான் சிரமம் தெரிகின்றது" என்றாள்.

"அதற்கு மாமா என்ன சொல்கின்றார்" என ராமச்சந்திரன் வினவினான்.

"ஒரு பைசா கூட தன்னால் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்."

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகின்றாய்" என்றான் கவலை நிறைந்த தொனியில்.

"நீங்கள் வழக்கறிஞர் ஆயிற்றே! எங்காவது பணம் வாங்கித் தர முடியுமா என்று கேட்க வந்தேன்" என்றாள் நிதானமாக.

ராமச்சந்திரன் நெற்றியை கையில் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் யோசித்தான். பிறகு "தொகை எவ்வளவு?" என்று கேட்டான்

"இரண்டாயிரத்து ஐந்நூறு!"

"அடேயப்பா! அவ்வளவு தொகைக்கு எங்கு போவது? அதற்கு தகுந்த ஈடுகாட்ட வேண்டாமா?"

உடனே கோமதி "மாமா எங்கள் பேரில்தானே உயில் எழுதியிருக்கின்றார். அவருக்கு எங்களைத் தவிர வேறு வார்சு இல்லை என்பதுஉங்களுக்கு தெரியாதா?" என்றாள்.

"உயில் இருந்தால்..............................?"

"ஏன் அதை ஆதாரமாகக்கொண்டு பணம் வாங்க முடியாதா?" என்று கவலையோடு கேட்டாள் கோமதி. ராமச்சந்திரன் தலை அசைத்தான்.

"ஊஹூம்! உயிலை ஆதாரமாகக் கொண்டு எவன் பணம் கொடுக்க காத்திருக்கின்றான்"

கோமதி இதைக் கேட்டவுடன் கவலையும் பயமும் கலந்த குரலில் "கடைசி தடவையாக சொல்லி விடுங்கள். உங்களால் இது முடியாதா?" என்றாள்.

ராமச்சந்திரன் கோமதிக்காக வருந்தினான். பிறகு "சரி நாளைக்கு உங்கள் வீட்டிற்கு வருகின்றேன். எப்படியாவது சரிப்படுத்த என்னால் முடிந்த வரை முயல்கின்றேன்" என்று கூறினான்.

கோமதியின் கண்களில் ஒரு அபூர்வ ஒளி ஜ்வலித்தது. ராமச்சந்திரனின் மனதை ஊடுருவி பார்ப்பது போன்று ஒரு முறை நோக்கிவிட்டு கோபாலனுடன் அவ்விடத்தை விட்டுக் கிளம்பினாள்.

* * * *

அன்று சாயந்திரம் ராமச்சந்திரன் ஒரு கேஸ் விஷயமாக வெளியே போய் திரும்பிவர இருட்டி விட்டது. வீட்டிற்குள் அவன் நுழைந்ததும் கோபாலன் சற்றுமுன் அங்கு வந்து சிறிது நேரம் இருந்து விட்டு போய் விட்டதாக வேலைக்காரன் கூறினான். உடனே கோமதியின் நினைவு அவனுக்கு வந்தது. அவளுக்கு என்ன பதில் கூறுவது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை அவன் படுக்கையை விட்டு எழுந்திருந்ததும் அவன் தன் ஆபீஸ் அறைக்கு சென்றான். உலகம் தலை கீழாக சுழல்வது போல் தோன்றியது! என்ன ஆச்சர்யம்! அறை முழுவதும் அலங்கோலமாக கிடந்தது. இரும்பு பெட்டி உடைக்கப் பட்டிருந்தது! நோட்டுகள் வைத்திருந்த இன்ஷியூர் கவர் மாயமாய் மறைந்து விட்டது! அவன் உடலில் இருந்து உயிர் பிரிந்து விட்டதைப் போல் ஓர் உணர்ச்சியை அவன் அனுபவித்தான் என்றால் அது மிகையாகாது. தன் கட்சிக்காரனுக்கு என்ன பதில் சொல்வதென்று அவனுக்கு தோன்றவில்லை. அவன் மூளை குழம்பியிருந்தது. வருத்தத்தோடு சாய்மான நாற்காலியில் சாய்ந்தான்!

ஐயாயிரம் ரூபாய்கள்! இரண்டு நாட்களுக்கு முன்புதான் தன் கட்சிக்காரன் சார்பாக இம்பீரியல் பாங்கியில் இருந்து பெற்றுக் கொண்ட ரூபாய் ஐயாயிரமும் திடீர் என்று களவு போவதென்றால்..........யார்தான் சஞ்சலமடைய மாட்டார்கள்? போலீஸார் சாமர்த்தியத்தில் அவனுக்கு துளிக்கூட நம்பிக்கையில்லை. ஆயினும் வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் எந்த வழியை பின்பற்ற முடியும்! போலீஸாரும் இந்த மர்மமான திருட்டை கண்டு பிடிக்க வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினார்கள்.

அன்று மாலை கோமதி வந்தாள். ஆனால் இந்த தடவை கோபாலன் கூடவரவில்லை. ராமச்சந்திரன் தன்னுடைய கஷ்டத்தைப்பற்றி ஒன்றும் கூறாது மௌனமாகவே இருந்தான். கோமதி மறைத்துப் பேச விரும்பவில்லை. வந்த உடன் காலிலேயே "நீங்கள் கஷ்டமடைந்த தொகை எவ்வளவு?" என்றாள்.

ராமச்சந்திரன் திடுக்கிட்டான். "உனக்கு யார் அதைப்பற்றி சொன்னது?"

ஆனால் கோமதியினிடமிருந்து எதிர்பார்த்த பதில் வரவில்லை. "நீங்கள் என்னை தயவுசெய்து மன்னிக்க வேண்டும்" என்றாள் கெஞ்சுதலாக.

ராமச்சந்திரன் ஒன்றும் அறியாது விழித்தான். அவனால் பேசவும் முடியவில்லை. அவன் பேசவும் விரும்பவில்லை. "ஆம்.........காயலாவாக கிடந்த மாமா இன்று காலை எங்களை அழைத்து கோபாலனுடைய கடன்களை எல்லாம் கொடுத்து தீர்த்து விட்டதாகவும் மற்றைய ரொக்கம் ஆஸ்தி



எல்லாம் எங்கள் பேருக்கு மாற்றி விட்டதாகவும் கூறினார்" என்றாள் கோமதி மறுபடியும்.

உடனே ராமச்சந்திரன் "அதற்கும் நீ சொல்வதற்கும் என்ன சம்பந்தம்" என்று கேட்டான்.

கோமதி விஷயத்தை சொல்ல கொஞ்சம் தயங்கினாள். கடைசியாக ஏதோ தீர்மானத்திற்கு வந்தவளாய் "ஆமாம்........மறைப்பதில் பிரயோசனமென்ன? சொல்லி விடுகிறேன். கோபாலன் நீங்கள் வெளியில் சென்ற பிறகு இங்கு வந்தான். அவன் புத்தி தடுமாற்றமடைந்திருந்தது. இருந்தாலும் அவன் செய்தது என்னமோ தப்புதான்! இரும்பு பெட்டியின் மறுசாவி இருக்குமிடம் அவனுக்கு தெரியும். ஐயோ!..............என் அப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறீர்கள்.........ஆம்.........நீங்கள் ஒரு கவரில் வைத்திருந்த ரொக்கத்தை அப்படியே எடுத்துக் கொண்டு அதைப் போல் மற்றொரு கவரை அங்கே வைத்து விட்டான்........" என்றாள்.

"என்ன! நீ சொல்வது உண்மையா?"

"நீங்கள் என் சந்தேகப் படவேண்டும். இந்தாருங்கள் ரூபாய் நோட்டுகள் கொண்ட கவர்!" என்று கோமதி அந்த இன்ஷியூர் கவரை அவனிடம் நீட்டினாள். ராமச்சந்திரன் அந்த கவரை பிரித்துப் பார்த்தான்! தான் வைத்தது வைத்தபடியே இருந்தது! பின் இரும்பு பெட்டியை உடைத்தது யார்? அதே இரவில் உண்மையாக திருட்டுப் போனது என்ன? கோபாலன் வைத்துவிட்டுப் போன அந்த போலி கவரா!

ராமச்சந்திரன் பிறகு விஷயத்தை அறிந்து கொண்டான். அவனுடைய பழைய உற்சாகம் மீண்டும் திரும்பி விட்டது.

"கோமதி......" கோமதி சட்டென்று திரும்பினாள். "என்ன இருந்தாலும் கோபாலன் செய்தது குற்றம் தானே" என்றான் ராமச்சந்திரன்.

கோமதி "ஆம்" என்ற பாவனையாய் தலை அசைத்தாள். "அப்படியாயின் அவன் செய்த குற்றத்திற்கு தகுந்த தண்டனை என்ன?" என்று கேலியாக கேட்டான்.

"தண்டனையா? கோபாலன் செய்த குற்றத்திற்காக அதற்கு பரிகாரம் என்ன வேண்டுமானாலும் நான் செய்யத் தயார்"

"எனக்கு வேண்டியதெல்லாம் நீ ஒருத்திதான்" என்று ராமச்சந்திரன் ஆர்வத்தோடு கூறினான்."

ராமச்சந்திரன் ஆலிங்கனத்திற்கு கோமதி இணங்கினாள். மாமாவும் தன் மனப் பூர்வமான சம்மதத்தைத் தந்து அவர்களை ஆசீர்வதித்தார். அதே சமயத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் துரைராஜ் பழைய குற்றவாளி ஆறுமுகத்தைக் கைது செய்தார். அவன் கையில் அந்தக் கவர் இருந்தது.

ஆறுமுகம் திடுக்கிடவில்லை. "வாருங்கள்; உங்களை எதிர்பார்த்தே இருக்கிறேன்" என்றான்.

"உன்னைக் கைது செய்யப் போகிறேன்" என்று இன்ஸ்பெக்டர் கர்வத்தோடு கூறினார்.

"எதற்காக கைது செய்யப் போகிறீர்கள்" என்று ஆறுமுகம் சாவதானமாகக் கேட்டான்.

"அட்வகேட் ராமச்சந்திரன் வீட்டிலிருந்து ஐயாயிரம் ரூபாய் நோட்டுகள் அடங்கிய இன்ஷியூர் கவர் ஒன்றை களவு செய்ததின் சம்பந்தமாக உன்னை 'அரெஸ்டு' செய்யப் போகிறேன்"

"அதற்கு ஆதாரங்கள்"

"உன் கையிலிருக்கும் இந்த இன்ஷ்யூர் கவர் ஒன்றே போதாதா?"

ஆறுமுகம் வெறுப்போடு அந்தக் கவரை தூக்கி எறிந்தான். வெறும் கடுதாசிகள் தான் அதில் இருந்தன!

இன்ஸ்பெக்டர் துரைராஜ் ஆறுமுகத்தை நோக்கினார். "உன்னை முந்தா நாள் தானே விடுதலை செய்தார்கள். அதற்குள் அட்வகேட் வீட்டில் பணம் இருப்பது உனக்கு எப்படித் தெரியும்" என்றார்.

"ஏன்! அந்த வாலிபன்—என்னவோ கோபாலனாம் அவன் பெயர் கூட—அவன் தான் ஒரு ஹோட்டலில் தன் நண்பர்களுடன் சொல்லிக் கொண்டிருந்தான். அதை நம்பி ஒரு பிச்சைக்கார வக்கீலின் இரும்பு பெட்டியை உடைத்தது தான் மிச்சம்" என்று அலட்சியமாய் கூறினான். இன்ஸ்பெக்டர் துரைராஜ் அவனுடன் ஸ்டேஷனுக்குச் சென்றான்.

*　　*　　*　　*

கோமதியும் ராமச்சந்திரனும் இல்லற வாழ்க்கையை இன்புற நடத்த ஆரம்பித்து ஒருவருடம் சென்று மறைந்தது. கோபாலன் இப்பொழுது முற்றிலும் திருந்தி விட்டான். ஒரு நாள் மூவரும் சாயந்திரம் காப்பி சாப்பிட்டு விட்டு சாவகாசமாய் மொட்டை மாடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

ராமச்சந்திரன் கோபாலனைப் பார்த்து "அது எல்லாம் சரிதான் உனக்கு எப்படி ஆறுமுகத்தின் எதிரில் என் பணத்தைப்பற்றி பிரஸ்தாபிக்க வேண்டும் என்று தோன்றியது" என்றான்.

"ஓ! அதுவா! ஆறுமுகத்தை ஒரு ஹோட்டலில் கண்டேன். அவனை சில போலீஸார் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். அவன் யார் என்று விசாரித்ததற்கு அவன் ஒரு பழைய குற்றவாளி என்று சொன்னார்கள். உடனே சட்டென்று என் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. அவன் காதில் விழும்படி இந்த பணத்தைப்பற்றி பிரஸ்தாபித்தால் அவன் நிச்சயம் அதை கொள்ளையிட முயற்சி செய்வான் என்று எனக்கு தோன்றியது. என் பேரிலும் சந்தேகமிருக்காது. என் மாமா எனக்கு பணம் கொடுத்ததும் அதை உங்களிடம் கொடுத்து விட்டு பிறகு இதைச் சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நிலைமை ஒரே இரவில் முற்றிலும் மாறிவிட்டது" என்றான் கோபாலன்.

"இல்லாமல் போனால் இவ்வளவு சீக்கிரமாக இந்த கிளியை கூண்டில் அடைக்க முடியுமா?" என்று ராமச்சந்திரன் கூறிக்கொண்டே கோமதியைப் பார்த்தான். கோமதி புன்னகை புரிந்தாள்.

---

# பாரதியின் பாட்டோவியம்

(தே. ப. பெருமாள்.)

(176-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிப் பாட்டியற்றும் பாவலர் உள்ளத்தில் கலைமகள் இருப்பதாக கவி கூறுகின்றார். பாட்டியற்றும் பாவலர் உள்ளம் மாசுமறுவற்றது. மிகத் தூய்மையுடையது. அவரது உள்ளம் எஞ்ஞான்றும் நற்செய்கை செய்தலில் வேட்கைகொண்டு விளங்கும். அவரது மனதில் காழ்ப்பு, அவா, வெகுளியாதிய தீக்குணங்கள் எழுதல் அரிது. அன்றாது உள்ளம் என்றும் அன்பு, பொறை யாதிய நற்குணங்களால் நிறைவுற்று விளங்கும். அறிஞர் நல்லுள்ளத்திற்கு புலவருள்ளத்தையே சான்று கூறுவர். இத்தகைய பெருமை சான்ற புலவருள்ளம் இவ்வையகத்தே தோன்றும் இயற்கை எழிலில் ஈடுபட்டதாய் அதை யாக்கிய இறைவனிடம் பேரன்புடையதாய் விளங்கும். அத்தகைய தூய உள்ளத்தில் கலைமகள் உறைதல் இயற்கையே. இதையே நமது பாரதியார் 'கொள்ளையின்பங் குலவு கவிதை கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்' என்று கூறினார். நற்கவிதை இன்பத்தைக் கொள்ளை கொண்டு மலையென அள்ளிச் சொரியுந் தன்மையவாதலின் 'கொள்ளையின்பங் குலவு கவிதை' என்றார்.

இனி வேதத்துள் கலைமகள் விளங்குவதாய்க் கூறுகிறார். வேதம் மக்களை இறைவனண்மையிற் சேர்ப்பதாதலின், அவற்றுள் கலைமகள் உறைதல் இயல்பே. கள்ளமற்ற முனிவர் மொழியின் உட்பொருள் கலைமகள் என்று கவிஞர் கூறுகின்றார். பாசம் அற்று இன்பவடிவினாய இறைவனடி சேர்தற்கு ஒல்லும் வகையான் அல்லும் பகலும் அருந்தொண்டாற்றும் முனிவர் தம்மொழியும் அவ்வாண்டகையை அடைதற்குரிய உயரிய வழியேயாம். ஆதலின் அம்மொழியில் செல்வி கலைமகள் உறைதல் உண்மையே. இதையே கவிஞர் 'கள்ளமற்ற முனிவர் கூறும் கருணை வாசகத்துட் பொருளாவாள்' என்று கூறினார். கள்ளமற்ற முனிவரின் தெள்ளிய மொழி மக்களை மாண்புடை உலகிற்கு அனுப்ப ஏதுவாயிருத்தலின் அன்னார் தம்மொழியை கருணை என்ற அடை மொழியுடன் 'கருணைவாசகம்' என்று கூறினார். என்னே பாரதியார் பாட்டோவியத் திறன்! ஒவ்வொரு வாக்கிலும் எத்தகைய உயரிய பொருள் நிரம்பியிருக்கின்றன!

பாரதியாரின் பாட்டுச் சித்திரத்தில் காலைக் கவினைப்பற்றிய ஓவியம் மிக அழகாக அமைந்து தனிக் கீர்த்தியோடு விளங்குகின்றது. அவ்வோவியத்தினை நோக்கியதும் நாம் அப்பாட்டில் ஈடுபட்டு அடையும் இன்பத்தினும் பன்மடங்கு நமது உள்ளம் களிப்பு கொள்ளுகின்றது. அத்தகைய உயரிய ஓவியத்தினை அடியில் தீட்டுகின்றோம்.

"கடலின் மிசை கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி யையா

படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்
உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ்வோர் நுண் டுளியும் விழியாகச்
சுடரு கின்றன் வடிவை யுட்கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே "—என்பதாகும்.

இது காலையில் கடற்கரையில் தோன்றும் கவினாகும். ஞாயிற்றின் உதயம் தொடங்குகின்றது. இருட் படலங்கள் யாண்டோ ஒளித்தன. ஆதித்தனும் மெல்ல மெல்ல மேலேறுகின்றனன். அவனது இன்ப இளவெயிலைக்கண்ட பறவைக் கூட்டங்கள் இனிய குரலைக் கிளப்பிக் கொண்டே கூட்டை விட்டு வெளிப்போந்து வான்மிசை பறக்கின்றன. கடலெல்லாம் அவ்வாதிதன் ஒளி! அவ்வொளியினைப் பெற்ற அக்கருங் கனைகடல் காட்டும் கவினென்ன! பொன்னை உருக்கிவிட்டதை யொப்ப அவ்வெள்ளம் எழிற் பொலிவுபெற்று விளங்குகின்றது. இஃதையே பாரதியார் தம் பாட்டின் கண் கூறுகின்றார்.

ஆதித்தன் பொன்னொளியில் மின்னுங் கடலினைக் கண்ட கவிஞர், அவ்வாதித்தனை நோக்கி 'எண்ணற்ற துளிக் கண்களையுடைய கண்ணகல் கருங்கடல், உன் பொன்னொளியை அக்கண்களால் பருகி களிப்புகொண்டு நின்னைப் புகழ்ந்து சுருதி பாடுகின்றது' என்று கூறுகின்றார். இது எத்துணை உயரிய நயஞ்சான்று விளங்குகின்றன. இககருத்தினை இவர்,

"உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ்வோர் நுண் டுளியும் விழியாகச்
சுடரு கின்றன் வடிவை யுட்கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே"

என்னும் பொருட் பொதிந்த சிற்றடிகளால் கூறுகின்றார். இச்சித்திரத்தினைக் கண்ட எந்தத் தமிழறிஞனும் இன்பம் அடையாதிரான்.

அந்திமாலைக் கவினையும் பாரதியார் அழகுற கூறுகின்றார். அந்திமாலையில் ஆதித்தன் மிக வேகத்துடன் சுழன்று மேற்றிசை சாய்தலை இவர் பொன்னடிகளால் பொறித்துள்ளார். அவ்வடிகள் பொன்னில் மின்னும் வைரத்தினையும் வைத்துச் சமைத்த கோதைபோல் ஒளிருகின்றது. ஒளியோடு வீறிட்டு விளங்கும் அவ்வடிகள் பாரதி இயற்றிய பாஞ்சாலி சபதம் எனும் நூற்கண் காணப்படுகின்றன. 'அந்நூலகத்தே இவ்வழகு ஒளிரும் ஓவியம் பொறித்த பக்கத்தினை திருப்பியதும் நமது விழிகள் அவ்வோவியத்தினைக் கண்ட வண்ணம் தமது ஆழ்ந்த நோக்கை அதனுட் செலுத்துகின்றன. பின் அவ்விழிகள் தாம் கண்ட அவ்வின்பப் பொன்னெழிலோவியத்தை தங்கள் உயிர்த்தோழனாகிய உளத்திற்கு அறிவிக்கின்றன. அஃதறிந்த அவ்வுள்ளம் பெரு மகிழ்வு கொண்டு இன்பப் பெருக்கால் தனது கவலை அனைத்தையும் காற்றில் பறக்கவிடுகின்றது.

பாஞ்சாலி சபதத்தின் கண் காணும் அச்செந்தமிழ் சித்திர ஓவியத்தை பாரதியார் அருச்சுனன் வாக்காகக் கூறிக் காட்டுகின்றார். கௌரவர் நக



ரேகும் அறத்தலைவன் கூட்டம் வழியிடை ஓர் பூம்பொழிலின் கண் தங்க நேர்ந்தது. அது போழ்து காண்டீபன் தங்காதற் செல்வம் பாஞ்சாலியினை அழைத்துக் கொண்டு தனியிடமாகிய ஒரு பைம்புல் மேட்டுநிலத்தில் அமர்ந்தனன். அவ்வமயம் அந்திப் பொழுதாதலின் பார்த்தனுக்கும் பாஞ்சாலிக்கும் பரிதியின் மேற்றிசை சாய்வு தோன்றியது. அஃது கண்டு களித்த காதற்றலைவன் தன் மிசை சாய்ந்த காரிகையை நோக்கி அவ் வெழிலினை விளக்கிக் கூறுகின்றான்.

"அடிவானத்தே யங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளி மின்னல் பத்துக்கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி யாங்கே
மொய்குழலாய் சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவானத் தொன்றாக தகடிரண்டு
வட்ட முறச் சுழலுவதை வளைந்து காண்பாய்
..............................................
அடிபார்! சுடர்ப்பரிதியை சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடி யிந்த வன்னத் தியல்புகள்
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்!—செழும்பொன் காய்ச்சி
விட்ட வோடைகள்!—வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்!—பாரடி!
நீலப்பொய் கைகள்! அடடா நீல
வன்ன மொன்றி லெத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை!—கரிய பெரும் பூதம்!
நீலப்பொய் கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளி பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! காணடி யாங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்."

'தையலே! அதோ காண் அடிவானத்தே. அங்கே இரவி கொடு வேகமுடன் சுழலுகின்றான். இடி மின்னல் பத்துக்கோடி ஒன்றாய் உருக்கிச் செய்தாலென்ன இரு தகடுகள் ஒன்றாய் உருளுகின்றன. அத்தகடுகள் காட்டும் மரகதப்பச்சை நிறமென்ன! இருட் கருமை யென்ன! பொன்னொளி யென்ன!

பாரணங்கே பார்! மின்னலொடு அவ்விரவி சுற்றுவதைக் காண்! அதை அண்மிய கொண்டற் கூட்டம் எரியிடைப்பட் டெரிந்தன! எத்தனை எழில்காட்டி அப்பரிதி செல்லுகின்றது. எத்துணை நிறம்! தன்னையும் மிஞ்சிய வேகத்தில் சுற்றுவதால் நமது கண்ணையும் பறிக்கின்றதன்றே! ஓகோ! நீலப் பொய்கையில் தங்கத் தோணிகள்! நெடு வெளியில் கொடுஞ் சிகரங்கள்! பொன்னாழியில் மின்னுந் திமிங்கிலம்! யாண்டும் பொன் யாறுகள்! எங்கணும் பொன்னோடைகள்! அங்கங்கே வெம்மையற்ற பொன் தீவுகள். எல்லாம் பொன்மயம்! அப்பொன் மயத்தில் பன்னிறம்! நீலச் சுடர்! நீண்டஒளி! அவ் வொளியிடைக் கரும்பூதக் கூட்டங்கள்!" என்றிவ்வாறெல்லாம் காண்டீபன் தங் காதலியிடம் அந்திமாலையின் அழகை விளக்கிக் கூறுகின்றான்.

என்ன அழகான சித்திரம்! எத்துணை பொருணயம்! செஞ்சொற் பொலிவு! பாரதியைப்போல் அந்திமாலையின் அழகை நயமுற கூறிக்காட்டிய பாவலர் தமிழ் மொழியில் ஒரு சிலரேயாம். அவர்தம் மோவியமும் இத்துணை எளிய நடையில் இனியனவாய் அமையப்பெற்றில. பாரதியின் அந்திமாலை இப்பாட்டோவியமோ கதிரவன் குடதிசை சாய்தலின் கவினை அங்ஙனமே அறிவிக்கின்றது. பிறழ்ந்து கூறக் காண்கிலேம்.

பாரதியின் பின்னாட் பெருமைக்கு இத்தகைய பாட்டோவியங்களே சிறந்த துணையாய் அமைந்து விளங்கும். ஒவ்வொரு தமிழ் மகனும் பாரதியின் இத்தகைய பாட்டோவியங்களை நோக்கி அவற்றின் வன்மையை அறிந்து உலகிடை அதன் பெருமையைப் பரப்புதல் வேண்டும். அன்றே நாம் பாரதிக்கு—நமது தெய்வத் தமிழ் கவிக்கு ஏற்ற பணியை இயற்றியவர் ஆவோம். அன்றே தமிழின் பெருமையும் உலகிடை விளங்கும்.

---


## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.





## 55. ஐரோப்பிய மஹா யுத்தம்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

தற்சமயம் உலகத்தில் யுத்தவெறி, நாகரீகர்களெனச் சொல்லப் பட்டும், கருதப்பட்டும் வந்திருக்கும் ஜெர்மனியரிடமும், இதாலியரிடம், ஜப்பானியரிடமும் தலைவிரித்தாடுவதை பத்திரிகைகளில் பிரதிதினமும் படித்து வருகிறோம். ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரும் இதாலிய சர்வாதிகாரியான முஸோலினியும், ஐரோப்பாவையே கலக்கி வருகிறார்கள். தர்மம், ஜீவகாருண்யம், மனித உணர்ச்சி என்பன அவர்களிடம் உண்டோ என்று ஐயுறும்படியும் அநேக நிகழ்ச்சிகளைக் கேள்விப்பட்டும், படித்தும், படங்களிலேயே பார்த்தும் வருகிறோம். பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள், திக்கற்றவர்கள், கோவில்கள், மடங்கள், கஷ்ட நிவாரண ஸ்தாபனங்கள் என்ற பேதா பேதமில்லாமல் சகலமும், ரஸாயனப்படிப்பு முதிர்ச்சியினால், கண்மூடி, கண் திறப்பதற்குள் லக்ஷக்கணக்கானவை நாசமாகின்றன. ரஸாயனமும், பௌதிகமும், பொது அறிவும் ஜனசமூகத்தின் சௌக்கியங்களையும் சுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான ஆக்க முறைகளில் உபயோகப்படுத்தப்படாமல், அழிவு வேலையில் உபயோகப்படுத்தப் படுவதைப் பார்க்குங் காலத்து, "ஓ கடவுளே, இந்த பேய் நாகரீக வளர்ச்சியை ஏன் மனித வர்க்கத்திற்குக் காட்டினாய்? நீ இருப்பதும் உண்மையோ?" என்று அலறும்படியாக இருக்கிறது. ஜப்பான் சமீபகாலத்திலேயே நாகரீக மடைந்து, சுயஆட்சிப் போக்கில் அபரிமிதமான முன்னேற்றத்தை யடைந்து, சகல துறைகளிலும் விருத்தியாகியும், அரக்கத்தன்மையில், மேற்குநாட்டு அசுரர்களையும் தோற்கச் செய்து விட்டது? இதுவோ நாகரீகம்? இதுவோ முன்னேற்றம்? இதுவோ வளர்ச்சி? இவர்களுடைய தீவிரப்போக்கு, பிரிட்டிஷ் சிங்கத்தையும் தத்தளித்துத் திணறும்படி செய்துவருவது அனுபவ பூர்வமானது என்பது விளங்குகின்றது.

இந்த விபரீதப் போக்கிற்கு முன்னைய 1914-ம் வருஷத்திய மாபெரும் போரே காரணம் என்பது வெளிப்படை. சென்ற யுத்த முடிவில், ஐரோப்பிய தேசங்களின் பலவற்றின் கஷ்ட நஷ்டங்களுக்கு ஜெர்மனியரையே பொறுப்பாளியாக்கி, அத் தேசத்தை பூராவும் திவாலாக்கியதுடன், ஐரோப்பாவுக்குப் புறம்பாக இருந்த பல ஜெர்மன் சாம்ராஜ்ய பாகங்களையும் பறிமுதல் செய்த விஷயம்தான் என்று அறியலாம். ஆங்கில சரித்திர புஸ்தகங்களிலேயே காணப்பட்டிருக்கும் காரணங்கள் யுத்தத்திற்கு பின்வருமாறு: "ஜெர்மனிக்கு வியாபாரப் பைத்தியம் பிடித்துவிட்டது. ஏராளமான லாபம் அடையவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. அதிலும்

ஆங்கிலேயருடைய கடலாதிக்கத்தையும் மீறி, வியாபாரத் துறைகளில் போட்டியிட முயன்றது. அதை யொட்டி, வெகுகாலமாகவே யுத்த சன்னத்தமாக இருந்துகொண்டு, ஆயுதங்களையும், யுத்த உபகரணங்களையும், நீர் மூழ்கிக் கப்பல்களையும், நாசகாரிகளையும் வெடிகுண்டுகளையும் ஏராளமாகக் குவித்து வைத்துக்கொண்டு சமயம் எப்போது வாய்க்குமென பார்த்துக் கொண்டே யிருந்தது. மத்திய தரைக்கடலின் கிழக்குப் பாகத்திலிருந்து வந்த துருக்கியுடன் நேசமாக இருந்துகொண்டு, இந்தியாவைப் பிடித்து, இந்திய வியாபாரத்தைக் கொள்ளை கொண்டுவிட முயன்றது. அதற்கு ஆஸ்ட்ரியாவும் துணையிருந்தது. இதற்கு விரோதமாக, தற்காப்பாகப் பல தேசங்களும் வேலைகள் செய்யவேண்டி யிருந்தது. சம்பிரதாயமாக உள்ள (துருக்காட்சிக் குட்பட்டிருந்த கிருஸ்தவர்களின்) நலத்தில் பெருங் கவலை வந்தது. ஏனெனில் துருக்கி ஜெர்மனி கக்ஷியில் இருந்தது. பிரான்ஸ், ரஷியா இங்கிலாந்து முதலிய தேசங்கள் ஒன்று கூடி நேசக்கக்ஷியினராகச் சேர்ந்துகொள்ள, ஜெர்மனியின் விபரீத காரியங்களே தூண்டின. இந்த விபரீத போக்கின் உச்சஸ்தானம், பெல்ஜியத்தின் பொது நிலைமையைப் பங்கப்படுத்தி, திடீரென அந்த தேசத்தின் வழியாக ஜெர்மன் படைகள் சென்று, பிரான்ஸைத் தாக்க முயன்றதில் ஏற்பட்டது. எதிர்த்த பெல்ஜியர்களை ஜெர்மனியர் தவிடு பொடியாக்கினர்.

பெல்ஜியம் பொது தேசமாக வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் எந்த வல்லரசும் யுத்த நோக்கத்துடனாவது, படை நடத்திக் கொண்டாவது, யுத்த சன்னத்தராகவாவது போகக் கூடாது என்ற ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதை மீறியது ஜெர்மனியின் பேரில் குற்றம் என்று பிரிட்டிஷ் சமாசார முறையில் உலகத்தாருக்கும் நம்மைப் போன்றவர்களுக்கும் நாளது வரையில் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு உள்ள செல்வாக்கு, ஆதிக்கம் இவைகளினால் இதை விட வேறு மூலங்களில் விஷய அறிவுக்கு ஹேதுகரம் இல்லை யென்பது உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். பெல்ஜியத்தின் பொது நிலைமைக்குப் பங்கம் ஏற்பட்டு, பெல்ஜியம் தவிடு பொடியானபோது, பிரான்ஸ் எல்லை வரைக்கும் எட்டி, பிரான்ஸின் தலைநகர் பாரிஸுக்கு வெகு சமீபத்தில் ஜெர்மன் படைகள் நெருங்கி விட்டன. அப்படியாகும் போது, இங்கிலாந்தின் கடல் ஆதிக்கத்திற்கும், அதன் மூலமான பலவித கௌரவங்களுக்கும் லாபங்களுக்கும், சுபிக்ஷ ஹேதுக்களுக்கும் ஆபத்து வந்து விட்டது விளக்கமான விஷயம். தவிரவும் கப்பல் படைகள் சுலபமாக சமுத்திரங்களில் வந்து தாராளமாய் நடமாடாதபடி ஜெர்மனியர் நீரில் மிதக்கக் கூடியனவும், மூழ்கக் கூடியனவுமான பலவித நாச காரிகளை, ரகசியமாக, உலகத்தின் பல முக்கியமான கடல் மார்க்கங்களில் நிரப்பி வைத்து விட்டனர். அதனால் பல கப்பல்களும், பிரயாணிகளும், வியாபார பொருள்களும் கணக்கில்லாதபடி அக்கிரமமாக அழிய நேரிட்டது. (இந்தப் போக்கில் தான் "எம்டன்" என்ற ஒரு நீர் மூழ்கிக் கப்பல் உலகத்தில் பல பாகங்களில் திடீரென தோன்றி குண்டு மாரிகளைப் பொழிந்து விட்டு, மின்னலைப் போல் மறைந்தது என்பது பலருடைய ஞாபகத்தில் வரலாம். அந்த எம்டனைப் பற்றிய பல விசித்திர விநோதமான கதைகளும் பறந்தன என்பதும் ஞாபகத்திற்கு வரக் கூடிய விஷயமாகும். கடைசியில் எங்கோ ஆஸ்திரேலியா



வின் பக்கத்தில் அந்தக் கப்பல் பிடிக்கப்பட்டு விட்டதாம்.) இந்த அதிக்ரம காரியத்தினாலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கே மனது வெறுத்து, யுத்தத்தில் கலந்து கொண்டு முடிவுக்குக் கொண்டு வர ஹேதுவாயிற்று. இதிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டினர் யுத்தத்தில் கலந்து கொள்ளும் வரையில் ஜெர்மனியின் சக்தி பொதுவாக குறையவில்லை என்று அறியலாம்.

பிரஞ்சு எல்லைக்கு சமீபத்தில் ஜெர்மனியர் வந்து விட்டபோது தான் "இந்தியாவிலிருந்து சென்ற கூர்க்கர்களடங்கிய சேனை தீவிரமாகப் போர் புரிந்து ஜெர்மனியரைப் பின்னடையச் செய்தது" என்று நமது பிரசாரகர்கள் தெருக்களில் நின்று வீரம் பேசும் சம்பவம் நடந்தது. சமீபகாலத்தில் கூட, மாஜி கெய்ஸர் வில்லியமுக்கு அந்த சம்பவம், மனதில் பசு மரத்தாணி போல் பதிந்திருப்பதுடன், மறக்கக் கூடாததாகவும் இருப்பதாக பிரஸ்தாபமும் உண்டு. ஆகக் கூடி ஜெர்மனி தான் ஹத்து மீறி மாபெரும் யுத்தத்தைக் கிளப்பி பல நஷ்டங்களை அப்போது உண்டாக்கியது என்பது, சிறு குழந்தைகளுக்கும கூட தெரியும்படியாக ஏற்பட்டிருக்கிறது. இந்த உண்மையின் ஊடே மற்றொரு உண்மையும் புலனாவது சிந்தித்தறியக் கூடியதாக இருக்கிறதை உணரலாம். தொழிற் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தின் நிலைமையே பலவித அம்சங்களிலும் மாறி விட்டது. அசுரத்தன்மை வாய்ந்த பலவித இயந்திரங்களுக்கும் விற்பனைச் சந்தை வேண்டும். அந்தப் பலவித இயந்திரங்களின் மூலம் ஆகக் கூடிய செய் பொருள்கள் இருந்தால் தான் வேலைகள் நடந்து ஜனங்கள் புசியாறலாம். அச் செய் பொருள்களுக்கான மூலப் பொருள்கள் கிடைக்கக் கூடிய செழிப்பான சந்தை வேண்டும். அந்த மூலப் பொருள்கள் தங்கள் இஷ்டப்பட்டபடி வாங்கப்பட வேண்டும். இந்த செய்பொருள்களைத் திருப்பி விற்பதற்கான சந்தை இன்றியமையாததாக இருந்து அந்த தேசத்து ஜனங்களும், சோணகிரிகளாக இருக்க வேண்டும். (இவற்றை யுணர்ந்தால் ஓட்டாவா ஒப்பந்தத்தின் தன்மை நன்கு விளங்கலாம்.)

இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில், பலவித தொழில் முறைகளிலும் ஜெர்மனி, அபரிமிதமான அபிவிருத்தியாகி, எந்த ஆங்கில சாமானுடனும் எந்த எல்லைக்கும் போட்டி போட்டு மடக்கக் கூடிய அளவுக்கு இருந்தது. இந்த அபிவிருத்தி இயற்கையாகவே இங்கிலாந்துக்கு உபத்திரவம் என்பது வெள்ளிடைமலை! தன்னுடைய கடலாதிக்கத்தைக் கொண்டு வேண்டியபடிக்கு, ஜெர்மனியின் வியாபாரப் போக்கிற்கு தடைகள் செய்தும் ஜெர்மனிக்கு லக்ஷியம் இல்லை. இவ்வளவு உபத்திரவம் அனுபவித்த ஜெர்மனிக்கு அப்போதும், இப்போதும் பிரிட்டானியா ராணிக்குள்ள மதிப்பினிடம் ஆத்திரம் உண்டானதும் உண்டாவதும் சகஜம்! அதைக் கண்டு அப்போது ஆத்திரமும் அச்சமும் ஆங்கிலேயர் அடைந்ததும் இயற்கையே! அதற்கான முறைகளில் முயன்றதற்குத் தகுந்த காரணங்களையே பிரசாரம் செய்வதும் இயற்கையே! கொஞ்ச காலத்திற்கு முன்பு, மாஜி கெய்ஸர் வில்லியமாலேயே எழுதப் பட்டதான, "என் சரித்திரக் குறிப்புகள்" என்று பொருள்படும் "My Memoirs—by Kaiser William" என்ற ஒரு புஸ்தகத்தைக் கூர்ந்து கவனித்துப் படிக்க நேர்ந்தது. அதில் கண்ட விஷயங்களைச் சிலராவது படித்திருக்கலாம் என்றாலும், ஆனந்தன் வாசகர்களின்

பொருட்டு அதையும் இத்தொடர்ச்சிகளில் வெளியிட்டு, இத்தொடர்களை முடிக்க உத்தேசித்து, இந்த 55-வது பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

மாஜி கெய்ஸர் வில்லியமின் தற்சரித்திரக் குறிப்புகளில், இந்த யுத்த விஷயம், பொரும்பான்மையான ஸ்தானம் பெற்றிருந்தது. தான் விக்டோரியா ராணியின் மகள் வயிற்று பேரனாக இருந்தும், தன்னைச் சந்தேக நோக்குடனும், ஓர வஞ்சனையாகவும் பாட்டியார் நடத்தியதற்கு சில உதாரணங்கள் கொடுத்திருக்கிறார். ஒரு சமயம் இந்த வியாபார சம்பந்தமாகவே ஒரு சிக்கலான நிலைமையில் தன்னைக் கொண்டு வைத்து, ஒரு பிரமாணம் வாங்கவும் முயற்சி செய்தாள் என்றும், அப்போது, தான் “பாட்டி! என் தேசத்து அரசன் நான் என்ற முறையில், என் தர்மமும் மனசாக்ஷியும் வேறு விதமாகக் கூறுகின்றன. ஆகவே மன்னிக்கவும். இவ்விஷயமாகப் பேச்சை நிறுத்தி விடுவோம்” என்று சொல்லி திடீரென முறித்துக் கொண்டு கிளம்பி விட்டதாகவும் கூறியிருக்கிறார். மற்றொரு சமயம், பால பருவத்தில் மாஜி சக்கரவர்த்தி காலஞ் சென்ற ஜார்ஜ் Vன் காலில் கயிற்றைக் கட்டி தரதரவென்று இழுத்துவிட்டு விளையாடியதில், ஜார்ஜ்க்கு காயம் உண்டாகி விட்டதாம். இந்த விதமான குறிப்புகளுக்குப் பிறகு, பெரிய யுத்தத்தைப்பற்றி யெழுதும் போது, வியாபாரப் போட்டியையும் குறிப்பிட்டு, தேசப் பாதுகாப்புக்கும், வியாபாரத்திற்கும் ஆன குறைந்த அளவு தளவாடங்களைத் தான் தயாரித்ததாகவும் சொல்லியிருக்கிறார். யுத்தம் ஆரம்பித்ததாகச் சொல்லப் பட்ட தற்சமயத்தில், சுகாதார வசதிக்காக, நார்வே பிரதேசங்களில் தான் போய் வாசம் செய்துகொண் டிருந்தாராம். பெல்ஜியத்தின் பொது நிலைமையைப் பங்கம் செய்ததாகத் தன்னைக் குற்றஞ் சாட்டுவது அபாண்டம் என்றும், பிரான்ஸ்காரர் சுமார் 1908-ம் வருஷத்திலிருந்தே கோட்டைகளைக் கட்டியும், யுத்த தளவாடங்களை பெல்ஜியத்திற்குள் சேகரித்து வைத்து விட்டதாகவும் பல இடங்களிலும், பல வேஷங்களிலும் ஒற்றர்களையனுப்பி, பல ஸ்தலங்களையும், ஸ்தாபனங்களையும் புகைப் படங்கள் எடுக்கச் செய்தனர் என்றும், யுத்தரங்கங்களைக் கூட நிர்மாணித்து விட்டனர் என்றும் எழுதியுள்ளார். யுத்தத்தை நிறுத்திவிட தன்னாலான வரையில் முயற்சி செய்தும் பலவித குழப்பங்களையும், சூழ்ச்சிகளையும் சதியாலோசனைகளையும் தன் நாட்டிற்குள்ளேயே செய்து தன நிலைமையைச் சமாளிக்கக் கூடாததாகச் செய்து விட்டனர் என்றும், தீராத முறையில் யுத்தம் ஆரம்பித்த பிறகும் கூட உலக கதோலிக குருவான இத்தாலிய போப்பிடம் தான் மன்றாடி சமாதானத்தை நிலை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டதாகவும் அவர் முயன்றும் கூட சமாதானத்தை நிலை நிறுத்த முடியவில்லையென்பதையும் ஸ்பஷ்டமாக விளக்கி, யுத்தத்திற்குப் பொறுப்பாளி தான் அல்லவே அல்ல என்றும் தெளிவாகவும் கோவையாகவும் விளக்கியுள்ளார்.

எவ்வாறாயினும் யுத்தம் நடந்தது. ஆரம்ப கட்டத்தில் ஜெர்மனி வெகு துரிதமாகவும், மூர்க்கமாகவும் முன்னேறியது. பிறகு சமாளிக்க முடியாமல் போனதற்கு ஐக்கிய நாடுகள் யுத்தத்தில் கலந்து கொண்டது தான் காரணம். இத்தாலியும் அப்போது நேசக் கட்சியினர் பக்கம் சேர்ந்து கிளம்பியது. ரஷ்ஷியாவில் புரட்சி ஏற்பட்டது. ஸார் அரசன் வீழ்ந்தான். குடியரசு ஏற்பட்டது. ஜெர்மனி கை சளைத்தது. அதுதான் சமயம் என்று கண்டன நேசதேசங்கள். பட்ட கடன்களுக்கும், ஆன செலவுகளுக்கும்,



ஜெர்மனியையே ஜவாப்தாரியாக்கின! ஜெர்மனி திவாலாகியது! கெய்ஸர் வில்லியம் ஆட்சி துறந்தார்! குடியரசு ஸ்தாபிககப் பட்டது. உள்ள எல்லாக் கடன்களுக்கும் ஜெர்மனியர், உள்ள காலி கஜானாவையே காட்டி “வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லினர். (ஜெர்மன் மார்க்கு நோட்டுகளுககு ஒரு காலத்தில் சிறந்த மதிப்பும் செல்வாக்கும் இருந்து, தற்போது துடைக்கக்கூட உபயோகமாகாத துண்டு காகிதமாகிவிட்டது பலருடைய அனுபவத்தில் இருக்கலாம்.) பிறகு தன் வியாபாரத்திற்கு இடங்கொடுத்தால் கடன்களைக் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொண்டதின் பேரில், தீராத முறையில் வேண்டா வெறுப்பாக, அனுமதித்த பிறகுதான் ஜெர்மன் சாமான்கள் மறுபடியும் மார்க்கெட்டுகளில் வர ஆரம்பித்து சாமான்களின் விலைகளும் குறைந்திருக்கின்றன. (நம்மில் பலருடைய அனுபவத்திலும், 1915 முதல் 1922 வரையில் ஜெர்மன் சாமான்கள் வாராமல் ஜப்பான் சாமான்கள் மார்க்கெட்களில் நிரம்பி விற்றன என்பது வந்திருக்கலாம். உதாரணமாக விளக்கு சிம்னிகள் பட்பட் என்று வாரத்தில் 5, 6 உடைந்தது ஞாபகம் வரலாம். அப்போதுதான் ஜப்பான் பல தொழில்களிலும் ஆரம்ப திசையில் இருந்து ஜெர்மன் சாமான்களின் உறுதிக்கு அத்தாட்சி கூறின.)

யுத்தம் முடிந்து ஜெர்மனியில் புனருத்தாரண வேலைகள் கெடுபடியாக நடந்து பழைய உன்னத நிலையை கைத்தொழில் வகைகளில் அடைந்து விட்டது. இந்த சமயத்தில் சாம்ராஜ்யங்கள் இல்லாததும், வியாபாரத்திற்கு இடங்கள் இல்லாததும் சேர்ந்து, ஜெர்மன் மக்களைத் தூண்டி, இந்தக் குறைகளை எவ்விதத்திலும் தீர்த்துவைத்து விடுவதாக வாக்களித்திருக்கும் ஹிட்லருக்கு சர்வாதிகாரம் கொடுக்கும்படி செய்திருக்கிறது. அதைப் பார்த்த இத்தாலியும் முஸலோனிக்குச் சர்வாதிகாரம் கொடுத்திருக்கிறது. உலகமே சர்வாதிகாரிகளின் உலகமாக இருக்கிறது. அவையெல்லாம் பலாத்கார சர்வாதிகாரங்கள். “மன்னன் வாக்குக்கு மறு வாக்கை” சஹிக்கமாட்டாத சர்வாதிகாரங்கள்! எதிர்த்துப் பேசுபவர்களோ, நடப்பவர்களோ, இந்த இரண்டுவிதத்திலும் சந்தேகப்பட்டவர்களோ விசாரணையேயின்றி மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படும் சர்வாதிகாரம். ஆனால் மகாத்மா காந்தியும் ராஷ்டிரபதி ஜவஹரும் நடத்தும் சர்வாதிகாரம் அன்புருவாகக் கொண்டது! தன்க்கென்று வாழாப் பிறர்க்குரியாளரின் போக்குடையது! உலக க்ஷேமத்தையே குறிக்கோளாகக் கொண்டது! அஹிம்சை தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது! பகைமை யென்பதே யற்ற தூய தன்மை வாய்ந்தது! அப்படியே பகைவர் இருந்தாலும், அப்பகைவர்களுக்கும் அருளும் மேன்மை படைத்தது. உலகத்தாரையே அவர்கள் இஷ்டப்பட்டால் தன் வழிக்கு மயக்கிக்கொண்டு வரக்கூடியது! யாவரும் சுலபமாக கையாளக் கூடியது என்ற பெருமைகள் யாவும் ஒருங்கே பொருந்தியது!

அடுத்து இத்தொகுதிகளுக்குப் பின்னுரையும், முடிவும் வரும்.




(வடசை வாசகன்.)

பல்வேறு பயிர்களைப் பருவத்திற்குத் தக்கவாறு வளர்த்து, அதனைக் காத்து, பின் அவற்றினின்றும் பலனைப் பெறுகின்ற தொழில் பயிர்த் தொழிலின்பா லடங்கும். பயிர் இருபிரிவினது. அவை நன்செய், புன்செய் என்பனவாம். நெற் பயிர் நன்செய்க் கிருஷியினுள் அடங்கும். கேழ்வாகு, சோளம் முதலியன புன்செய்க் கிருஷியினுள் அடங்கும்.

தற்காலத்து மக்கள் பெரும்பாலாராலும் 'இழிவு', 'வெட்கம்' என்று போற்றப்படுகின்ற—(போற்றுதலின்று, தூற்றுதலே)—பயிர்த் தொழிலின் சிறப்பினை நோக்குமிடத்து, அது அள விடற்பால தொன்றதாய் விளங்கும். "மேழிச் செல்வம் கோழைபடாது"; "சீரைத்தேடின் ஏரைத் தேடு" என்பவைகள் பயிர்த் தொழிலின் சிறப்பினை நன்கு விளக்கா நிற்கின்றன. பொய்யாமொழிப் புலவனாரும், "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்"; "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றின்னோரன்ன பற்பல விதங்களாய் பயிர்த் தொழிலின் சிறப்பினை சிறக்கக் கூறியுள்ளார். வேறு ஓர் ஆசிரியர் "இல்வாழ்வான் இல்வழி இல்" என்று கூறிப் போந்துள்ளார். 'இல்வாழ்வான்' என்பது வேளாண்மை செய்பவன். 'வேளாண்மை' என்பது பயிர்த்தொழில். "வரப்புயர" என்ற ஔவையாரின் வாழ்த்துச் சொல் மேற்கூறிய கருத்தினை நன்கு விளக்கும். இனி இத்தகைய சிறப்புக்களையுடைய பயிர்த் தொழிலின் தற்கால நிலையை ஒரு சிறிது நோக்குவோம்.

அரும்பெரும் பெருமை வாய்ந்த உழுதொழிலானது தற் காலத்து ஆற்றுவாரற்று, போற்றுவாரின்றி திகழா நிற்கின்றது. மேல் நாடுகளில் பயிர்த் தொழிலைப் பார்க்குமிடத்து, மேனாட்டு மக்களின் பயிர்த் தொழில் ஊக்கம் நன்கு தெரியவரும். அங்கு மாணவர்களுக்குப் பாடசாலைகளில் பயிர்த்தொழில் சம்பந்தமான கல்விகள் போதிப்பிக்கப்பட்டு வருகின்றன. மேனாடுகளில் ஒரு ஏக்கர் நிலத்தைக் கொண்டு இருபதுக்கு மேலான வீட்டார்கள் ஜீவனம் செய்கின்றனர். நம் நாட்டிலோ அதில் காற்பங்குண்டோ என்பது ஐயப்பாடு. பயிர்த் தொழிலினால் பலனுமன்றி தேகப் பயிற்சியும் கிடைக்கின்றது. இவற்றை அறிந்தும், அறியாதவர்களாகிய நம் மக்கள் "பயிர் தொழில் செய்தல் நாணத்தை விளைவிக்கும்; அது இழிவைத்தரும்; அதனை செய்தல் மிகவும் வருத்தம்" என்று பலவாறு இகழ்ந்து பேசுவதல்லாமல், ஒருவன் கீழிருந்து வேலை பார்க்கவேண்டியதான சர்க்கார் ஜீவனத்தை—அடிமைத் தொழிலை—உயர்வெனக் கொள்கின்றனர். நம்மவரில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேரும் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைப்பது இவ்வடிமைத் தொழிலை நாடியே. இதனாலன்றோ எண்ணிக்கையற்ற



வாலிபர்கள், உயர்ந்த படிப்புகளைப் படித்துக் கொண்டு, ஜீவனம் செய்ய வழியில்லாது தயங்குகின்றதைக் காண்கிறோம்? பெற்றோர்கள் தம் வீடு, நிலம் முதலியவற்றை அடமானம் வைத்து, தம் பிள்ளைகளைப் படிக்கவைக்கின்றனர். வாலிபர்களும் மிக்க வருத்தப்பட்டுப் பயின்று பட்டங்களைப் பெறுகின்றனர். இப்பட்டங்களைக் கொண்டு இவர்களுடையும் பயன் என்ன? "வேலையில்லா திண்டாட்டம்" என்னும் கொடும் அரக்கனுக் காட்பட்டு, "வறுமை" என்னும் நரகத்தில் கிடந்து அழுந்த நேரிடுகின்றது. கொடிது! கொடிது!! வறுமை கொடிது!!! கொடும் வறுமையினுள் ஆழ்ந்து அல்லலுறும் காலத்தும், உழுதொழிலின் நினைவு சிறிது வரினும், இவர்கள் பெற்றிருக்கிற "பட்டம்" என்ற தலைவன், தனது இரு ஏவலாளர்களான "நாணம்", "வெட்கம்" என்பவர்களை ஏவி தன் கீழ்ப்படுத்த முயலுகிறான்.

இனிமேலாவது தொழுதுண்டு பின் செல்வதாகிய அடிமைத் தொழிலை எதிர்பார்ப்பதை விடுவோம். தம் தம் குலத்தொழிலை செய்து பயன்பெற்று, தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வருவோம். "இன்றே செய்யவும் வேண்டும்; இன்னே செய்யவும் வேண்டும்" என்ற கபிலர் கூற்றை நினைவிற் கொள்வோம். ஏர்பிடித்து நீர்மையதாய் நில முழுவோம் வாரீர்; பாட்டுப்பாடி பலவிதமாய் பயிரிடுவோம் வாரீர்.

எத்தொழிலாயினும் அத்தொழிலின் வளர்ச்சிக்கு கவர்ன்மெண்டாரின் ஆதரவு மிகவும் முக்கியமான தொன்று. பயிர்த் தொழிலைப் பொறுத்தமட்டிலும் அவர்கள் செய்ய வேண்டியதென்ன? கிராமாந்தரங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும். பாடசாலைகள் என்றால் தற்போதையவைகளைப் போன்றனவன்று. கட்டாயக் கல்வி ஏற்படுத்தி மாணவர்களுக்கு தொழிற் கல்வி போதிக்கச் செய்யவேண்டும். மாணவர்களில் ஒரு பிரிவினருக்கு பயிர்த்தொழில் சம்பந்தமான கல்வியைப் போதிப்பது மன்றி, அதனை மாணவர்களுக்கு நேரிற் காட்டி, அவர்களை நன்கு பழகவேண்டும். "உத்தியோகத்தை நம்பி படிக்கவைத்தல்" என்ற எண்ணத்தை நம் மனதில் நின்றும் ஒழிகக இடந்தேட வேண்டும். கிருஷி சம்பந்தமான இன்னும் வேண்டிய உதவிகளைச் செய்து, மக்களுக்கு உழுதொழிலின்பால் ஆர்வத்தை உண்டுபண்ணவேண்டும். நாமும் நவீன முறைகளைக் கைக கொண்டு பயிர்த்தொழிலைப் போற்றி வருவோமானால் தற்காலத்தைப் போல் எண்ணற்ற மக்கள் வேலையின்றித் திரிவதற்கும் அளவற்ற வறுமையினுள் ஆழ்வதற்கும் நேரிடுமோ?



# "பட்டப்பகல் கொள்ளை!"

—(0)—

(B. K. முத்துஸ்வாமி.)

"ஸார் !"

பின்னால் திரும்பிப் பார்த்தேன். "புலு புலு"வென்ற குத்திட்ட வெளிர் கலந்த செம்பட்டை படிந்த கிருப்புத்தலை பேர்வழி ஒருவர், தோல்பை சகிதம் அசட்டுப் புன்னகை தவழ காட்சிதந்தார். இன்ஷூர் செய்து கொள்வதால் ஏற்படும் இன்பங்கள், கூவம் நதியில் ஜனித்த ஜனபாதகக் கட்சியின் பெருமை, பீமசேனு பெருங்காயத்தின் மணம், குட்டிச் சுவற்றில் முட்டிக்கொள்ள வெள்ளை யெழுத்தா? பாத்ரோ மீசையின் மகத்வம்–இதுபோன்ற விஷயங்களில் ஏதாவது ஒன்றை அக்குவேறு ஆணி வேருக எடுத்து அலசித்துழாவி காதுகளிலேற்றப் போகிருரோ என எண்ணித் திரு திருவென விழித்தேன்.

"ஸார்...உங்களைத்தானே......"கர்த்தபன்" என்ற புனைப் பெயருடன் பத்திரிகை உலகில் சஞ்சரிப்பவன் யார் என்று நினைக்கிறீர்கள்...... ......" "யாரா யிருந்தால் என்ன?" என்று வெடுக்கென்று கூறிவிட்டு யெழுந்திருந்து போகலாமா என்று எண்ணினேன். ஆனல் இந்த வாய் என்னமோ தவறி "ஓகோ தேவரீர்தானே அது.........?" என்று கேட்டுவிட்டது. அவ்வளவுதான் அவர் என்னைக் கவ்விக்கொண்டார்...... !

சுமார் 10 நிமிடங்களாக நின்று கொண்டிருந்த அவர் என்னருகே உட்கார்ந்தார் உட்கார்ந்தவர் கொஞ்சம் நாசிகா சூரணத்தை நாசியிலேற்றினர். தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டார். அவாது பீடிகையைப் பார்த்தவுடன் பயந்தே போனேன். பாகவதத்தையோ, ராமாயணத்தையோ, பாரதத்தையோ தலைகீழாக எடுத்துப் பிரசங்கம் செய்ய வாரம்பித்தால் என்ன ஐயா செய்வது ?

நிமிடங்கள் 5, 6, 7. நான் வாயைத் திறக்கவில்லை. அவாது கிருப்பு மயிர் காற்றில் பறந்துவந்து கண்களோடு உறவாடுவதைக் கண்டு களித்துக் கொண்டிருந்தேன். ஆனல் அவர்? ஆரம்பித்துவிட்டார்! நான் எவ்வளவோ கணக்கற்ற கட்டுரைகள் எழுதி யிருக்கிறேன். "அல்பாயுஸ்" என்ற பத்திரிகையில் வெளிவந்த எனது "பொருள் விளங்கா உண்டை"யைத் தாங்கள் படித்ததில்லையே...... ?"

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நானு? அதையா? 17 தடவைகள் திரும்பத் திரும்பப் படித்திருக்கிறேனே...........உண்மையில் அதன் பொருள் விளங்கவேயில்லை ஸார்...ஆகா...தலைப்புக்கேற்ற கட்டுரை ஸ்வாமின்னு !"



அவர் முகத்தில் ஒரு தனி ஒளி பிரகாசித்தது. இவ்வளவு தூரம் அவர் என்னிடம் எதிர் பார்க்கவில்லையோ என்னமோ? அக்கட்டுரை வெளிவந்த விஷயம், தனக்கும், வெளியிட்ட புண்யாத்மா பத்திரிகாசிரியர் என்ற ஒரு ஆத்மா நாற்காலியில் குப்பைக் கூடை சகிதம் பிணைக்கப்பட்டிருக்கிருரே, அவருக்குந்தான் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது மூன்ருவது நபராகிய நானும் அதை வாசகர் என்ற ஸ்தானத்தில் படித்திருக்கிறேன் அல்லவா? அவர் முகம் மேரு மலைபோல் புடைத்ததில் என்ன ஆச்சரியமிருக்கப் போகிறது ?"

"அது கிடக்கட்டும் ஸார்......எனது "ஜன்னிப் பிதற்றல்"—என்ற 13 ரஸங்கள் ததும்பும் கட்டுரையைத் தாங்கள் பார்த்தே யிருக்கமாட்டீர்கள்..............."

நான் இடைமறித்து, "என் வெளி வரவில்லையோ ?"

"இல்லவே இல்லை......அது அனுப்பித்த ஆருவது மாதம் பிரசுரமாகி விட்டது" என்று சொல்லி வாய் மூடுவதற்கு முன்னதாவே ஒரே ஒரு துளி கண்ணீர் முந்திக்கொண்டு விட்டது. நான் பக்கத்தில் கிடந்த ஸினிமா நோடீஸால் அவாது கண்ணீரை அகற்றி "என்...என் ஸார்...?" என்றேன் முகத்தை அனுதாபப் படுபவன்போல் வைத்துக்கொண்டு.

"மிஸ்டர்...மிஸ்டர்...!! அதையேன் கேட்கிறீர்கள்? அந்தப் பாழும் பத்திரிகாசிரியர் அந்தக் கட்டுரை பிரசுரமான இதழை எனக்கு அனுப்பவேயில்லை..............."

"உம்...அப்புறம்...? ஒரு நிக்கல் காசை சுண்டியெறிந்து புஸ்தகம் என்று விலைக்கு வாங்கினீர்களாக்கும் !"

"ஹூம்! ஒருநாள் மளிகைக்கடை மாணிக்கஞ் செட்டியார் கடைக்கு உப்பு வாங்கப் போயிருந்தபோது ஷை கட்டுரைத்தான் உப்புப் பொட்டலமாக அலங்கரித்திருந்தது. பார்த்தேன் அவ்வளவுதான்........"

"என்ன செய்தீர்கள்...அந்த விடத்திலேயே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு......" பட்டணம்படி அவ்வளவு கண்ணீர்வாத் தயாராக இருப்பதாக விழிகள் பயமுறுத்தின.

நான் விட்டுக் கொடுக்கவில்லை. "அது இருக்கட்டும் ஸார்......தாங்கள் இப்படி வாரத்திற்கு 107 கட்டுரைகள் தயார் செய்து இப்படி பத்திரிகை உலகிற்கு மகத்தான சேவை செய்து வருகிறீர்களே......தங்களுக்குச் சன்மானமாக ஏதாவது........."

"சன்மானமாவது, மண்ணுங்கட்டியாவது......அதெல்லா மொண்ணுமில்லேன்னு.........?"

"அடடா! தங்களுக்கு எத்தனை மூளை செலவு, எவ்வளவு பேபர் விரயம், எவ்வளவு பொருள்........."

"நீண்ட நாட்கள் மேற்ப[illegible]பார்ப்பதேயில்லை ஆனல் சமீபத்தில் "அஸ்தம[illegible]ன்றின பிறகு

தான் கடவுள் கண்திறந்தார்......" அவர் முகத்தில் தோன்றியது ஒரு வெற்றிக்குறி!

"என்ன......?" என்றேன் அழுத்தமாக ஒரு விஞைமூலம்.

நான் தயார் செய்திருக்கும் கட்டுரைகளைக் கையிலெடுத்துக் கொள்வேன். நேராகச் சென்றுவிடுவேன் "அஸ்தமனம்" ஆசிரியரிடம். ஒருதரம் இறைந்து படிப்பார். மற்றொருதரம் மனதிற்குள் படிப்பார்; இன்னொருதரம் தலைகீழாக வாசிப்பார். பிறகு கட்டுரையின் நீள அகலத்தை அளந்து கத்திரிக்கோலை யெடுத்து கட்டுரையின் உடலை வெட்டி ஒருதரம் மனனம் செய்வார். அவ்வளவுதான்! ஆசிரியர் நாற்காலியோடு சுழல்வார்; அறைச் சுவர்கள் எல்லாம் கிறுகிறுவென்று சுற்றும். ஒரு பூகம்ப அதிர்ச்சிதான்! பிறகு என்ன? உதவி ஆசிரியர் காட்சியளிப்பார். எனது கைகளில் 5, 6 ரூபாய்களை அமுக்கி கட்டுரையோடு என்னை வீட்டுக்கனுப்பி விடுவார். இப்படியாக எனது கட்டுரைகள் பிரசுரமாகாமலேயே சன்மானங் கிடைத்து வந்தது..........."

"பலே! பேஷ்!! நல்லவேலை!!!"—இம் மூன்று வார்த்தைகளும் எனது வாயிலிருந்து துள்ளிக் குதித்தன.

மெதுவாக எழுந்திருந்து போக எத்தனித்தேன். அதன் முதற் காரணம் எனது தொடை அவரது தொடைக்கடியில் மாட்டிக்கொண்டு விழித்ததே!

ஒரு அடி யெடுத்து வைத்தேன். ஆ! என்ன? அவர் முதலைபோல் எனது கையைக் கவ்விக்கொண்டு, "ஸார்..."அல்பாயுஸ்" "அஸ்தமனம்"—என்ற பத்திரிகைகளெல்லாம் தங்களது பெயர்களுக்கேற்ப மடிந்துவிட்டன. இரண்டு நாட்களாகப் பட்டினி; தயவுசெய்து ஒரு ரூபாய் இருந்தால்......' என்றாரம்பித்தார்.

"அடடா இருந்தால் கொடுப்பேன்.........பாருங்கள் இல்லாத சமயம் பார்த்து........" என்று கூறிக்கொண்டே நான் நகர, அவர் எனது கைகளுக் கடியில் தொங்கிக்கொண்டே வர இப்படியாக சுமார் 10 அடிகளைக் கடந்தோம்.

"என்ன இல்லையா......? என்ன சொன்னீர்......?" என்று அந்த எமகாதகன் அதட்டியவண்ணம் தனது தோற்பெட்டியைத் திறந்து ஒரு கட்டுரைக் கத்தையை எடுத்து வெகு வேகமாக எனது செவிகளண்டை மளமளவென்று வாசிக்கத் தொடங்கினார்.

"ஐயோ! வேண்டாம்!! வேண்டாம்!!!" என்று அலறியபடியே ஒரு ரூபாயைச் சுண்டியெறிந்தேன்.

"பட்டப்பகல் கொள்ளை—ஜாக்கிரதை!" என்ற எதிரே இருந்த சுவரொட்டி விளம்பரம் என்னைப் பார்த்துப் பரிகசித்தது!



# நமது ஆகாரம்

(V. சங்கர ஐயர்.)

நமது தென்னிந்தியர்களுக்கு தினசரி முக்கியமான ஆகாரம் அரிசிச் சோறு. இந்த அரிசி விஷயத்தில் நம்மில் பலருக்கு ஏற்பட்டுள்ள அறியாமை வெகு பயங்கரமானதே. வெண்மை நிறத்துக்காக மேல் தவிடு போக நன்றாகக் குத்தி பின் தண்ணீர் விட்டு தேய்த்துத் தேய்த்துக் களைந்து பின் கஞ்சியையும் வடித்துவிட்டு பலர் சாப்பிடுகிறார்கள். இப்படி தவிடு கழுவின நீர், கஞ்சி வழியாக அன்னசாரம் பூராவையும் யாத்திரை அனுப்பிவிட்டு வெறும் சக்கையை மட்டும் உண்டு சொறி, சிறங்கு, வயிற்றுவலி, ஸ்கர்வி முதலிய பல வியாதிகளால் பலர் பீடிக்கப்படுகின்றனர்.

ஆகையால் தயவு செய்து அரிசியை அதிகமாகத் தீட்டாமலும் அதிகமாகக் களையாமலும், கஞ்சி வடிக்காமலும் அன்னத்தை உண்ணும்படிக்குக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவே நமது தேகத்துக்கு நலம் என்று அனுபவத்தினால் தெரிந்துகொள்ளமுடியும்.

நெல் மிஷின் வந்ததானது தென்னிந்தியர்களின் ஆரோக்கியத்துக்கு ஹானியாக இருக்கிறது. கைக் குத்தால் மேல் தவிடு நீங்குமே தவிர உள் தவிடு போகாது. இயந்திரங்கள் முக்கியமான உள் தவிடு நீக்கப்பட்ட வெறும் சக்கையை நாம் உண்ணும்படிச் செய்கின்றன. பணக்காரர்கள் இதனாலிழக்கும் 'பீ' ஜீவசத்துப் பொருள்தனை வேறுவித ஆகார பதார்த்தங்களை உபயோகித்து சரிப்படுத்திக் கொள்வார்கள். ஏழைகள் என்ன செய்வார்கள்! அவர்களுக்கு பீ ஜீவசத்துப் பொருள் குறைவினால் உடம்பு வலி, பலஹீனம், தோல் மரத்துப்போதல், ஹிருதயசக்திக் குறைவு, தலைவலி முதலியனவும் உண்டாகின்றன. தேக சக்தியானது வியாதியை உண்டு பண்ணும் விஷ பீஜங்களைக் கொல்லும். ஆகையால்தான் தைரியசாலியை விஷ பீஜங்கள் ஒன்றுமே செய்யா. தைரியத்துக்கு ஆகாரமே முக்கியம். ஆகவே ஜீவசத்துப் பொருள் உள்ள ஆகாரமுண்ணவேண்டும்.

ஏழைகள் பாலுக்கும் பழத்துக்கும் எங்கே போவார்கள்? சத்து நீக்கின அரிசி யுண்டு சீக்கு அதிகப்பட்டு சாகிறார்கள். ஏன்? அறியாமையே இதற்குக் காரணம். ஆகையால் கவர்ன்மெண்டார் அறியாமையை விலக்க வேண்டும். நெல்லை கைக்குத்துவதனால் வேலை யற்ற ஏழைகள் பிழைக்கவும் அவர்கள் சத்துள்ள ஆகாரமுண்ணவும் ஹேதுவாகும். ஆகையால் மிஷின் பிசாசை ஒழிக்கவேண்டும். தேசத் தொண்டுக்கும், வேலை யில்லாத் திண்டாட்டத்துக்கும், வியாதிகளைத் தடுக்கவும் வேண்டி நெல் குத்தும்

மிஷின்களுக்கு இறக்குமதி வரியையும் அதிகப்படுத்தி அவைகளுக்கு அதிகமான லைசென்ஸ் பீஸ் கொடுக்கும்படிக்கும் சர்க்கார் விதிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அன்னத்தை வாயில் நன்றாகக் கசக்கி உமிழ் நீருடன் சேர்த்து வயிற்றுக்கு அனுப்பினால்தான் நன்றாக ஜீரணமாகி சரீரத்தில் ரத்தத்துடன் கலந்து குணம் கொடுக்கும். அன்றி சீக்கிரம் சாப்பிடுபவன் மார்புகூடு, எலும்புடம்பு, சொறி, சிரங்கு ஊறல் தோல் உடையவனாகவே ஆவான். ஆனால் நமது வீட்டுப்பெண்கள் காலையில் குளிக்கப் போகுமுன் கல்சட்டியில் பழைய சோற்றைப் பிசைந்து குழந்தைகளை அவசர அவசரமாக உண்ணும்படிச் செய்கிறார்கள். குழந்தைகளுக்கு இப்படியே அவசரமாக விழுங்கும்படியான பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. ஆகையால் அன்னாசயம் கெடுகிறது. இதனால் வற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், அன்னத்வேஷம் முதலிய வியாதிகள் உண்டாகின்றன. இவ்விஷயத்தை பெண்கள் கவனிக்க வேண்டும்.

மிளகாய் உபயோகிப்பதை படிப்படியாகக் குறைக்க வேண்டும். இதனால் வயிற்றுக் கடுப்பு மூலக் கடுப்பு, குடல் புண், வயிற்றுப் புண், மலச்சிக்கல், அஜீரணம் இவை உண்டாகின்றன. இது உணவுப் பொருளல்ல. பல தேசங்களில் கோடிக் கணக்கான ஜனங்கள் மிளகாய் உபயோகிப்பதில்லை. சரீர சாஸ்திரம் மிளகாயைக் கண்டிக்கிறது. இது தாமஸ குணமுடைய ஆகாரமென்று பகவத்கீதையில் பகவான் கூறியிருக்கிறார். சிராத்தாதிகளுக்கு இது தள்ளுபடியானது. இது ரத்தத்திலுள்ள சிவப்பு உயிர்க் கிருமிகளைத் தொலைத்து அதைச் சத்தில்லாமல் செய்கிறது. நரம்பு மூளைகளை மழுங்கச் செய்கிறது. கணையை அதிகப் படுத்துகிறது. இது செல்லும் மார்க்கத்தை புண்ணாக்குகிறது. மிளகாயை அரைத்த கைகளை எரியும்படிச் செய்கிறது. கொஞ்சம் உடம்பில் மிளகாயை அரைத்து அப்பிப் பார்க்கவும். தாங்க முடியுமா? அப்படியிருக்கும் பொழுது உள்ளேயுள்ள மிருதுவான தசைகளின் கதிதான் என்ன? கூடிய மட்டும் மிளகாயை மிகச் சொல்பமாக உபயோகிக்கவும்.

ஆகார விஷயத்தில் கவனிக்க வேண்டியது அனேகமிருக்கின்றன. சிலவற்றை மேலே கூறியிருக்கிறேன். ஒருவன் தினப்படி நடக்க வேண்டிய விதிப்படி நடந்தால் கண்டிப்பாக அரோகதிட சரீரியாக இருக்க முடியும். ஆனால் சாஸ்திரத்தைப் புறக்கணித்து விட்டு தன்னிஷ்டப்படி கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் சுவதந்திரமாக நடந்து வந்த பலர், கடுமையான சீக்குகளுக்கு ஆளாகி முடிவில் அகாலத்தில் தென்திசையோனை அடைகிறார்கள்.

ஆகையால் நமது சாஸ்திர விதிகள் சுகாதாரத்தையே வைதீகக் கொள்கையாகக் கொண்டுள்ளது என்று நன்கு உணர்ந்து "சாஸ்திராயச ஸுகாயச" என்றபடி சாஸ்திரத்தில் கூறியிருக்கிறபடி யாவரும் நடக்கும்படியான புத்தியைக் கடவுள் நம் தேச ஏழை மக்களுக்கு கொடுத்து ஆசீர்வதிப்பாராக!

# தமிழ்நாட்டு நிலையும் ஹிந்தியும்

(டாக்டர். எஸ். ஏசுதாஸன்.)

ஹிந்தி பாஷை தென்னிந்தியாவிலுள்ள உயர்கல்வி கற்றோர் யாவருக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்பது நல்லது. ஆனால் மேல்நாட்டாரோடு கலந்து கொள்பவர்களுக்கும் அவர்கள் எழுதும் புஸ்தகங்களை வாசிப்பவர்களுக்கு மாத்திரம்தான் ஒரு ஐரோப்பிய பாஷை உதவியாயிருக்குமோ அப்படியே வட இந்தியரோடு கலந்துகொள்ள நேரிடும் அவசியமும், சமயமும் உள்ளவர்களுக்குத்தான் ஹிந்தி பாஷை பயன்படும். 200-லட்சங்களுக்கு அதிகமான தமிழ்மக்களுக்குள் இப்படி வட இந்தியருடன் கலந்துகொள்ள சமயம் வெகுசொற்பமானதாக இருக்கும். மேலும் ஹிந்தியை கட்டாயமாய்ப் படிக்கச் செய்துவைக்கும் சிறியவர்களுக்கு அந்த பாஷையைப்பேசி வழங்க தென்னிந்தியாவில் சமயம் கிடைப்பதரிது. இவர்களில் உயர்வகுப்புக்குப் போகிறவர்கள் ஹிந்தியை மறந்து விடுவார்கள். தாய்பாஷையில் நன்றாக அஸ்திபாரம் ஊன்றியபின்தான் இதரபாஷையில் படிப்பது நன்மையாய் இருக்கும்.

பாமர மக்களுக்கு கட்டாயப்படிப்பு வைத்திருக்கிற எல்லா தேசங்களும் எட்டு வருஷம் இவர்கள் படிக்கும்படி ஒழுங்கு செய்திருக்கிறார்கள். ஜப்பான் இதற்கு ஒரு நல்ல உதாரணம். இந்த எட்டுவருஷ கல்விக்குப் பின்தான் இதர பாஷையை படிக்க விரும்புகிறவர்கள் ஒன்பதாம் வகுப்புகளிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் அதைப் படிக்கிறார்கள். பாமரமக்கள் அந்நிய பாஷையைச் கற்கிறது வழக்கமல்ல. மேலும் நம்முடைய தேசத்தில் இப்படிப்பட்ட கீழ்வகுப்புகளில் இருக்கும் சிறுவர்கள் ஆங்கிலம் படிப்பதை முதல் நிறுத்திவிட்டுத்தான் பின்பு ஹிந்தி படிக்கச் செய்யலாம். இந்த இரண்டுபாஷைகளும் தென்னிந்தியாவில் ஏராளமான தொகையினருக்கு அந்நியபாஷை யென்பதை நாம் மறந்து விடக்கூடாதென்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

நாலாவது பாரம் தொடங்கி மெட்ரிக்குலேஷன் வகுப்புகளில் ஹிந்தி கற்றுக்கொடுப்பதே நன்மையாய் இருக்கும். தாய்பாஷைகளில் சகல சாஸ்திரங்களும் சர்வகலாசாலைகளில் மாணவர் கட்டாயமாக கற்க ஒழுங்கு செய்துவிட்டால் ஹிந்தி ஆங்கிலம் முதலியன பாஷையாக மாத்திரம் கற்றுக்கொள்ளலாம். பாமரமக்கள் தங்கள் தாய்பாஷையே கற்காது அறியாமையால் அமிழ்ந்திருக்கும் இக்காலத்தில் அவர்கள் தாய்பாஷை கல்வியிலும், தாய்பாஷை மூலமாய் பொது அறிவிலும் விருத்தியடையச் செய்வதே சீக்கிரம் நடந்தேறச் செய்யவேண்டிய அவசரத் தொண்டாகும்.

தாய்பாஷையிலுங்கூட நூற்றுக்கு எட்டுபேர்போல் தானே எழுத்து வாசனை அடைந்தவர்கள். இவ்வித சமுசாரிகள், கூலியாட்கள், சில்லறை வியாபாரிகள், தொழிலாளிகள் போன்ற பாமரமக்கள் தங்கள் நாடோடி வாழ்க்கையில் தங்கள் தாய்பாஷை தெரியாத மக்களோடு கலந்துகொள்ள சமயமோ, அல்லது வெளிநாடு சென்று ஆங்கிலம் ஹிந்தி முதலிய இதர

பாஷை பேச அவசியமோ நேரிடுவது மிக அபூர்வமாகவே இருக்கும். ஆனால் இத்தகையினருக்கு எட்டுவருஷ கட்டாயக்கல்வி அவசியம். சிறு பிராயத்தில் இதற்குக் குறைந்த வருஷக்கல்வி பின் ஜீவியத்தில் அவர்களுக்கு பயன்பட போதாது.

கடவுள் கிருபையால் பாமரமக்கள் சுதந்திரமடைய ஏதுவாக, கூடிய சீக்கிரத்தில் நமது தேசம் பாஷை மாகாணங்களாக பிரிக்கப்படுமென்பது என் பேராவல். மாகாண சட்டசபைகளில் அந்தந்த தாய்ப்பாஷையே அப்போது உபயோகிக்கப்படும்.

அகில இந்திய மத்திய சட்டசபைக்கு அங்கமாவோர் குறைந்தது மெட்ரிக்கிலேஷன் மட்டும் கற்றவர்களா யிருப்பார்கள். நாலாவது பாரத்திலிருந்து ஹிந்தி கட்டாயமாக கற்க வேண்டுமென்று செய்துவிட்டால், அகில இந்திய பொதுபாஷையாகிய ஹிந்தி இவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஹிந்தியைக் கட்டாயமாய் படிக்கச் செய்வதற்காக பொது அறிவு பாடங்களைக் குறைப்பது சரியன்று. இதனால் எட்டாவது அதன் கீழ் வகுப்புகளில் ஹிந்தி பாஷையை கட்டாயமாய்ப் படிக்கச்செய்வது நன்மையாய் இருக்காது. மெட்ரிகுலேஷன் வகுப்பிலேயே ஒன்பதாவது வகுப்புமுதல் ஆங்கிலம் ஹிந்தி என்ற பாஷைகளைக் கற்றுக் கொடுப்பது பிரயோஜனமாயிருக்கும்.

---


## வியாபாரிகளே!

## சினிமா பட முதலாளிகளே!

நீங்கள்

## "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்ததுண்டா?

## இல்லையானால்,

## இன்றே ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்.

தமிழ்நாடெங்கணும், தமிழர்கள் வசிக்கும் மலேயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென்னாப்பிரிக்கா, பர்மா முதலிய இடங்களிலும் பல்லாயிரக் கணக்காகப் பரவியிருக்கும் "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்தால், உங்கள் வியாபாரங்களில் பெருத்த லாபங் கிடைக்கும். ஒரு முறை பரீக்ஷை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், ஆனந்தபோதினி ஆபீஸ்,
:: :: சௌகார்பேட்டை, சென்னை. :: ::


# பாலர்கள் பக்கம்



## அறிவு விளக்க வினா

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

"அறிவு விளக்க வினா" என்னும் இத் தலைப்பின் கீழ் பிரதி மாதமும் ஓர் அரிய வினா நமது "ஆனந்த போதினி"யில் வெளியிடப்படும். அவ் வினாக்களுக்கு விடையளிக்க முயல்வதின் வாயிலாக மாணவர்களின் அறிவு விளக்கம் பெற வேண்டுமென்பதே எமது நோக்கம். மாணவர்கள் தாங்கள் கண்டுபிடித்த விடையைப் பத்திரிகாசிரியருக்கு அனுப்பினால் சரியான விடை யனுப்பிய மாணவர்களின் பெயர்கள் பத்திரிகையில் வெளியிடப்படும். விடை யனுப்பும் மாணவர்கள் "ஆனந்த போதினி"யின் சந்தாதாராக இருக்க வேண்டும். ஆகலின் தங்கள் பெயருடன் சந்தா நெம்பரையும் குறித்தனுப்ப வேண்டும்.

### வினா 1.

காலை ஒன்பது மணி. கோபாலன் தகப்பனார் கடையிலிருந்து வந்தார். அவர் பின்னால் ஒரு கூலியாள் பெரிய காகிதக் கட்டொன்றைத் தூக்கி வந்து இறக்கினான். பாடசாலைக்குப் போகும் நேரம் நெருங்கி விட்டதால் அவசரம் அவசரமாக உடுத்திக் கொண்டிருந்த கோபாலன் தகப்பனாரின் குரல் கேட்டு வெளியே வந்து பார்த்தான்.

தகப்:—கோபாலா! இந்தக் கட்டைப் பிரி. இதற்குள்ளிருக்கும் புஸ்தகங்களை உனக்காக வாங்கி வந்தேன். இன்று உனக்குப் பிறந்த நாளல்லவா! அதற்குப் பரிசாக இவைகளைக் கொடுக்க விரும்புகிறேன். உனக்குப் பிரியந்தானா?

கோபா:—(புஸ்தகம் என்றவுடன்) ஓ! வெகு சந்தோஷம்! இவை என்ன புஸ்தகங்கள்! (என்று கேட்ட வண்ணம் கட்டையவிழ்த்துப் பார்த்து, "கம்பராமாயணம், மூலமும் உரையும்"—என்றெழுதி யிருக்கக் கண்டு சந்தோஷப்பட்டான். அப்பா! கம்பராமாயணம் முழுதும் படிக்க வேண்டுமென்று வெகு நாளாக விருப்பம். சொல்லி வைத்ததுபோல் அதையே நீங்கள் வாங்கி வந்தது பெரு வியப்பாயிருக்கிறது.

தகப்:—சரி, கோபாலா! ஒன்பது பாகங்களாக அச்சிடப்பட்டுள்ள இப் புத்தகங்களைப் பத்திரமாக எடுத்துவை.

கோபாலன் அவைகளை எடுத்துச் சென்று தன் புத்தக அடுக்கில் (Book-shlf) வைத்து விட்டுப் பாடசாலைக்குப் போய் விட்டான். அன்று மாலை வீட்டுக்கு வந்தவுடன் ஆவலாகப் புத்தகங்களை பார்க்கச் சென்றான். பார்த்தபோது காலையில் அவசரத்தில் அவைகளை எண்களின் வரிசைப்படி முறையாக வைக்காமல்,




இப்படி மாற்றி வைத்து விட்டதைப் பார்த்து சிரித்துக் கொண்டே ஒழுங்காக வைக்கத் தொடங்கினான். அப்போது ஓர் எண்ணம் அவன் மனத்தைக் கவர்ந்தது. உடனே வேகமாக உள்ளே சென்று தன் தம்பி ராமுவை அழைத்து வந்து காலையில் நடந்ததைச் சொல்லி, "ராமு! இப் புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும் முறையில் ஒரு வேடிக்கை இருக்கிறது. அது என்ன சொல், பார்ப்போம்" என்றான்.

ராமு:—வேடிக்கை யென்ன? ஒழுங்கீனமாய் வைத்திருக்கிறாய். அவ்வளவு தான்.

**கோபா:—ஒன்றும் வேடிக்கை யில்லையா?**

ராமு:—ஒன்றும் காணோமே.

**கோபா:—அப்படியா! நன்றாக உற்றுப்பார். பின்னக் கணக்கின்படி**

(Fraction) $\frac{6729}{13458}$ ஒன்றில் பாதியாக அமைந்திருக்கின்றதா இல்லையா! பார்.

ராமு:—(பார்த்து ஆச்சரியப்பட்டு) இது தற்செயலாக அமைந்தது. வேண்டுமென்று செய்ய விரும்பினால் இப்படி அமைக்க முடியாது. முடியுமானால் $\frac{1}{3}$ ஆகச் செய்; பார்ப்போம்.

**கோபா:—ஓ என்னால் முடியும்.** $\frac{1}{3}$ மாத்திரமல்ல. $\frac{1}{4}$, 1/5, $\frac{1}{6}$, 1/7, $\frac{1}{8}$, 1/9, ஆகவும் அமைத்துக் காட்டுவேன். (என்று கூறி அப் புஸ்தகங்களை மேற் காட்டிய பின்ன எண்களின்படி அமைத்துக் காட்டினான்.)

**அவன் எந்தெந்த விதமாக எண்களை மாற்றி யமைத்திருப்பான்?**

---




சீன தேசத்தில் வசிக்கும் லிசெங்யூன் என்பவருக்கு இப்போது 250 வயதாகிறது. உலகிலேயே இவர்தான் மிகவும் வயது முதிர்ந்தவராம்.

*　　*　　*　　*

பொலாங்கிர் நகரில் வாழும் சம்பூர்ணரெதைகி என்னும் மாதுக்கு 100 வயதாகிறதாம். இப்போது அக் கிழவிக்கு வாயின் இடது புறத்தில் பற்கள் புதியனவாக முளைத்திருக்கின்றனவாம். அப்பற்களால் கரும்புத் துண்டு போன்ற கடின வஸ்துக்களையும் மெல்ல முடிகிறதாம்.

*　　*　　*　　*

ஸ்டாலின் ருஷியாவுக்குச் சர்வாதிகாரியாக வந்ததிலிருந்து இதுவரை ஏறக்குறைய $3\frac{1}{2}$ லட்சம் பேர் கொல்லப்பட் டிருக்கிறார்களாம்.

*　　*　　*　　*

உலக முழுவதும் உள்ள ஜனத்தொகையில் ஐந்தில் ஒருபங்கு அதாவது ஏறக்குறைய 250,000,000 மக்களுக்குச் சரியான கண் பார்வை கிடையாது என சில டாக்டர்கள் கூறுகிறார்களாம்.

*　　*　　*　　*

ஆப்பிரிக்காவில் 'சிம்ப்' என்ற பிரிவைச் சேர்ந்த மனிதக் குரங்குகள் மூன்று சக்கரங்களோடு கூடிய சைகில்களில் சவாரி செய்கின்றனவாம்.

*　　*　　*　　*

ஒரு காலத்தில் பிரஞ்சு சர்க்கார் லைப் இன்ஷியூரன்ஸ் என்பது ஒருவித சூதாட்டமென்று கூறிச் சட்ட வாயிலாகத் தடுத்திருந்தனராம்.

*　　*　　*　　*

இரு தலைகளைக் கொண்ட ஆமை யொன்று அமெரிக்காவில் விட்டெனவலி என்னுமிடத்தில் இருக்கிறதாம். அது பிறந்து ஆறு மாதகாலமாகியும் ஒரு ரூபாய் அகல அளவுடையதாகவே இருக்கிறதாம்.

*　　*　　*　　*

ருமேனியாவில் அந் நாட்டின் அரசியல் வரலாற்றைக் கூறும் புத்தகமொன்று காப்பிக்கொட்டை அளவினதாக இருக்கிறது. உலகிலேயே இப் புத்தகம் மிகச் சிறியதாம்.

*　　*　　*　　*

பொலீனிவியா என்னும் நாட்டிலுள்ள சுதேசிகள் ஆரஞ்சுப் பழங்களைச் சோப்பு போல் தேய்த்து குளிக்கிறார்களாம்.

*　　*　　*　　*

சீனமக்கள் சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பே மின்சாரத்தைப் பற்றியும் அறிந்திருந்தார்களாம்.

---

# ஆசிரியர் குறிப்புக்கள்

## இந்தியாவின் மகான்

“உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன்”

என்ற தமிழ் மறைமொழிக்கு இலக்கிய புருஷராக இருப்பவர் நமது மகாத்மாகாந்தி. அவர் சத்திய சொரூபி; அஹிம்சா தர்மவீரர். உலகந்தோன்றிய நாளிலிருந்து இதுவரை எத்தனையோ அறிவாளிகள் உதித்தார்கள்; அவர்கள் தங்களது வாணாட்களில் பல அற்புதங்களையும் அரிய செயல்களையுஞ் செய்து அழியாப் புகழை நாட்டிச் சென்றனர். ஆனால் அவர்களில் தங்கள் ஜீவிய காலத்திலேயே போற்றப்பட்ட பெரியார்கள் ஒரு சிலரே யாவர். நமது காந்தியடிகள் தமது ஜீவிய காலத்திலேயே உலகம் போற்றும் உத்தமராய் விளங்குகிறார். அதற்குக் காரணம் அவர் நடத்திய பல அரசியல் போராட்டங்கள் மட்டுமல்ல; சமயத்துக்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்று கண்டு தமது தாய்நாட்டு விடுதலைக் கிளர்ச்சிக்குச் சத்யாக்கிரஹம், அஹிம்சா தர்மக் கொள்கைகளையடிப்படையாகக் கொண்டிருப்பதே யாகும். இத்தகைய புருஷோத்தமரை நமது ஜீவிய காலத்தில் பெற்றிருப்பதற்கு நாம் பெருமை கொள்ளாதிருக்க முடியுமோ! ஆகவே மகாத்மாவின் 69-வது பிறந்த தின விழாவை இந்தியா முழுவதுமே யன்றி—உலகின் பல பாகங்களிலுங்—கொண்டாடியதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

*　　　*　　　*　　　*

## கதர் அணிக!

ஆனால், நாம் காந்தியடிகளின் பிறந்த தின விழாவைக் கொண்டாடுவதோடு நின்று விட்டால் பயனில்லை; இன்னுங் கேட்டால் கராச்சியில் வெளியாகும் ‘ஹிந்து’ (பத்திரிகை) காந்தி மலருக்கு அனுப்பிய செய்தியில் பேரறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷா, ‘நீங்கள் மகாத்மாவுக்கு உண்மையில் சேவை செய்ய விரும்பினால் இந்தியாவெங்கும் அவருக்கு அவரது வயதைப்பற்றி இனி எவரும் ஞாபகப் படுத்தக் கூடாதென்று நீங்கள் உத்தரவிட வேண்டும்’ என்று கூறுவது போல், அவருக்கு வயதாகிக் கொண்டே போவதை ஞாபகப்படுத்தாமல் அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து மனித சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து அவர் போதித்துவரும் உபதேசங்களையும், செய்து வரும் அரிய செயல்களையும் பின்பற்றி நடப்பதே சிறந்ததாகும். அதுவே இந்தியாவின் மகானாகிய மகாத்மாகாந்தியை உண்மையாகப் போற்றுவதாகும். காந்தி ஜயந்தியை யொட்டி பண்டித மாளவியா விடுத்த அறிக்கையின் ஒரு பகுதியை வாசக நேயர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்:—

“காந்திஜீயின் பிறந்த தினத்தைக் கொண்டாட நேர்த்தியான தொரு வழி யிருக்கிறது. அது நம்மால் எவ்வளவுதூரம் கதரை அதிகமாக உபயோகிக்க முடியுமோ அவ்வளவு தூரம் உபயோகிப்பதுதான். மற்றெல்லா



கைத் தொழில்களையும்விட இச்சுலபமான குடிசைத் தொழில் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அதிகமான உணவை அளிக்க முடியுமென்றும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் உண்டாக்க முடியுமென்றும் நான் நினைக்கிறேன். கதர் முரடானதாகவோ நேர்த்தியானதாகவோ இருக்கலாம்; கதர் மலிவாகவோ அல்லது கிராக்கியாகவோ இருக்கலாம். ஆனால் அது ஆடம்பர மற்றது; பரிசுத்தமானது; உறுதியானது. அது இந்தியாவின் பூரண சுயேச்சை அபிலாஷைக்கும் உலகத்துடன் சிநேகமாகப் போக வேண்டுமென்ற விருப்பத்துக்கும் சின்னமாக இருக்கிறது.”

*　　　*　　　*　　　*

## சமஷ்டி ஒற்றுமைக்கு அடிமை கோலுமா!

‘சமஷ்டியா? அதை ஓங்கி தலையில் அடி! கொல்லு’ என்று முழங்குகிறார் காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால். அரசியலைப்பற்றிப் பேசும் போதெல்லாம் பண்டித நேரு சமஷ்டிக்குச் சமாப்தி தேடிவிட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டுமென்று முழக்கஞ் செய்கிறார். மற்ற தேசியத் தலைவர்களும் சமஷ்டியை விஷப் பாம்பைப்போல் மதிக்கின்றனர். அதற்குக் காரணம் அதன் பிற்போக்கான தன்மையே என்று கூற வேண்டியதில்லை. பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் இந்தியாவுக்கு வழங்கி யிருக்கும் புதிய அரசியலையே இந்தியர் யாரும் விரும்பவில்லை. அவ்வரசியலில் இந்திய மக்களுக்குக் கொஞ்ச நஞ்சம் ஏற்பட்டிருக்கும் உரிமையையும் இச்சமஷ்டி கபளீகரஞ் செய்துவிடப் பார்க்கிறதென்றால், இதை இந்தியமக்கள் எப்படிதான் விரும்புவார்கள்? ஆகவே, புதிய அரசியலுக்கு முன் சமஷ்டியைக் குழிதோண்டி புதைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே காங்கிரஸ்காரர்கள் பதவியேற்று அரசியலை நடத்தி வருகிறார்கள். அப்படியிருக்க, வைஸ்ராய் லின்லிதோ பிரபு இன்னும் சமஷ்டிக்குச் சப்பை கட்டு கட்டி, அதைக் கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவருவதில் ஆவலைக் காட்டி வருவதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. சமீபத்தில் ஸிம்லாவில் அரசாங்க சபைத்தலைவர் ஸர். மாணிக்கஜீ தாதாபாய் நடத்திய விருந்தின் போது, மெதுவாகத் தம் ஆவலை வெளியிட்டிருக்கிறார். கூடிய சீக்கிரம் அகில இந்திய சமஷ்டி அரசியல் ஏற்படுமாறு செய்ய முடியுமென்று தாம் நம்புவதாகவும், சமஷ்டித் திட்டத்தின் யோக்ய தாம்சங்களைப் பற்றிப் பலதிறப்பட்ட அபிப்பிராய மிருந்துவருவதை உணர்ந்திருப்பதாகவும், ஆனால் சமஷ்டி சமீபத்தில் ஏற்பட்டால் அது அகில இந்திய ஒற்றுமைக்கு அடிகோலும் என்று தாம் நம்புவதாகவும் வைஸ்ராய் தேனொழுகப் பேசி யிருக்கிறார். லின்லிதோ பிரபு கேட்போர்க்கு இனிக்க இனிக்கப் பேசிச் சமயோசிதமாய் நடந்து தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதில் வெகு சமர்த்தர். மகாத்மா காந்தியைக்கூட தம் பேச்சில் மயங்க வைத்த வைஸ்ராய் மூத்தண்ணாக்களான அரசாங்க சபை மெம்பர்களை வசப்படுத்துவதுதானா பெரிய காரியம்? அவர் கூறுகிறபடி சமஷ்டி அகில இந்திய ஒற்றுமையையுண்டு பண்ணக்கூடியதாக இருக்குமாயின் அதை ஏற்றுக் கொள்ள இந்தியர் எவர்க்கும் ஆட்சேபமில்லை. புதிய அரசியல் சட்டம் குறிப்பிடும் சமஷ்டி அவ்வித யோக்யதையுடையதாக இல்லையே! அதனால் தானே அதை யுடைத்தெறிய வேண்டுமென காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். எனவே, வைஸ்ராய் என்ன தான் தமது ராஜ தந்திரத்தை யுபயோகித்து

இனிமையாகப் பேசினாலும், இந்திய மக்கள் மயங்கிவிட மாட்டார்களென்பது நிச்சயம். வைஸ்ராய் உண்மையிலேயே அகில இந்திய ஒற்றுமையை சமஷ்டி மூலம் ஏற்படுத்த விரும்புவாரானால், மகாத்மா காந்தி, ஸ்ரீ. புலாபாய் தேசாய், ஸ்ரீ. சத்தியமூர்த்தி ஆகியோரை யழைத்துப் பேசியதுபோல், லண்டனிலிருந்து வெளியான செய்தியின்படி காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹரையும் அழைத்து அவருடன் கலந்து பேசி, இந்திய மக்கள் யாவரும் உவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் சமஷ்டியை மாற்றி யமைக்க முயல்வாராக.

* * * *

## அபூர்வ சம்பவம்

நள மஹாராஜா, தருமபுத்திரர் முதலிய அரசர்கள் ஆட்சிபுரிந்தகாலத்தில் சிங்கம், யானை, புலி, மான், ஓநாய், ஆடு முதலிய பிராணிகளெல்லாம் ஒரு துறையில் நீரருந்திக் குலாவி யிருந்ததாகக் கர்னபரம்பரையாகக் கதை சொல்வதுண்டு. அவ்விதமான சம்பவம் உண்மையாகவே நடந்ததென்று கூறினால் கூட நாம் அதிக ஆச்சரியப்பட மாட்டோம். ஆனால், சமீபத்தில் இந்தியா சட்டசபையில் நடந்த ஒரு அபூர்வ நிகழ்ச்சியை—ஆம்; அது அபூர்வ நிகழ்ச்சி யென்றுதான் கூறவேண்டும்.—என்று கூறினால் வாசகர்கள் நம்பமாட்டார்கள் என்பது நிச்சயம். சர்க்கார் சட்ட மெம்பர் ஸர். என். என். சர்க்கார் கொண்டுவந்த இன்ஷியூரன்ஸ் சட்டத்திருத்த மசோதாவை, இந்தியா சட்ட சபையிலுள்ள சகல கட்சியினரும் ஆதரித்ததோடு, அவரையும் பாராட்டினர். அதுவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ. சத்தியமூர்த்தி, ஸ்ரீ. புலாபாய் தேசாய், ஸ்ரீ. ஆனே முதலியவர்களும் பாராட்டிப் புகழ்ந்தனர் என்றால் நீங்கள் பெருவியப்படைகிறீர்களல்லவா! ஆமாம்; அத்தனையும் உண்மையாக நடந்ததே. இம்மசோதா, அன்னிய நாட்டு இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளால்-அவைகளின் செல்வாக்கால் வளர்ச்சியடையாது இருந்து வரும் இந்திய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளின் நன்மையை யுத்தேசித்ததாக இருப்பது ஒன்று; இம்மசோதாவைப் பிரேரபித்த ஸர். சர்க்கார் தேசபக்தி, திறமை, சகலருக்கும் சமமாக் நியாயம் வழங்க வேண்டுமென்ற நடு நிலை யுணர்ச்சி முதலியவைகளைக் காட்டியது மற்றொன்று; ஆக இவ்விரு முக்கிய காரணங்களே, சகல கட்சியினரையும் ஐக்கியப்படும்படி செய்தன. இன்ஷியூரன்ஸ் விஷயத்தில் இந்தியர் உரிமையைப் பாதுகாப்பதில் ஸர். சர்க்கார் ஒரு காங்கிரஸ்வாதி போலவே பேசியிருக்கிறார் என்று ஸ்ரீ. சத்தியமூர்த்தி பாராட்டி யிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இம்மசோதாவுக்கு ஏறக்குறைய 2000 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 19 நாட்கள் விவாதம் நடந்தது. இவ்வளவு சிக்கலான மசோதா இவ்வளவு குறைவான தடவை ஓட்டு எடுப்புகளுடன் முடிவு செய்யப்பட்டது. இச்சபையில் வெகு அபூர்வமென்பதை சட்ட மெம்பரே எடுத்துக் காட்டினார். ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி, புலாபாய் தேசாய், ஸர். கோவாஸ்ஜி, ஸர். ஹட்ஸன், ஸர். மோடி, ஸர். முகம்மது யாகூப் முதலிய பலரும் மசோதாவைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராயம் வெளியிட்டாலும், இதில் நல்ல அம்சங்கள் பலவிருக்கின்றன என்று ஒப்புக்கொண்டனர். தேசத்துக்கே சேம நிதி போன்றுள்ளவை இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், நாட்டின் தொழில் வளர்ச்சி முதலியவைகளுக்கு அவை பெரி



தும் உதவி புரிந்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளெல்லாம் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளின் மூலதனத்தைக் கொண்டே பல துறைகளிலும் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. எனவே நம் நாடு பல துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டுமானால் நம்மவராலேயே நடத்தப்படும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் நன்கு பலப்படுவது அவசியமல்லவா! அவ் வகையில் இந்திய இன்ஷியூரன்ஸ கம்பெனிகளின் ஆக்கத்துக்கான இன்ஷியூரன்ஸ் சட்டத்திருத்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றிய ஸர். என். என். சர்க்காருக்கும், அவருக்கு உதவி புரிந்த மற்ற அங்கத்தினர்களுக்கும் வாழ்த்து கூறுகிறோம்.

* * * *

## சீனாவுக்கு உதவி ?

ஜப்பான் ஏகாதிபத்ய வெறி கொண்டு சீனாமீது அக்கிரமமாகப் படையெடுத்து சுமார் இரண்டுமாத காலமாகப் போரிட்டு வருகிறது. இதுவரை வல்லரசுகள் முன்னும் பின்னும் சகுனம் பார்த்து விழித்துக் கொண்டிருந்துவிட்டு, இப்போது சீன—ஜப்பான் போரைப்பற்றி விசாரணை செய்யக் கமிட்டி யேற்படுத்தியதைக் கண்டதும், அபிஸீனியாவை இத்தாலிக்குப் பலி கொடுத்தமாதிரி, சீனாவை ஜப்பானுக்குப் பலி கொடுக்க காலங்கடத்துஞ் சூழ்ச்சியை இவை கையாளத் தொடங்கி யிருக்கின்றன என்றே எண்ணினோம். ஆனால், ஜினிவா சர்வதேச சங்கத்தில் இருபத்துமூவர் கமிட்டி, பதின்மூவர் கமிட்டி ஆகியவை ஒன்றன் பின்னொன்றாகக் கூடித் தீர்மானித்திருக்கும் முடிவுகளைப் பார்த்தால், கொஞ்சம் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஜப்பான் சீனாமீது படையெடுத்திருப்பது ஒன்பது தேச உடன் படிக்கைக்கும், கெல்லாக் உடன் படிக்கைக்கும் விரோதமானதென்றும், ஆகவே, மேற்படி ஒன்பது தேசங்களும் கலந்தாலோசிதது தக்க நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்து, மொத்தத்தில் சர்வதேச உடன் படிக்கைகளுக்கேற்ப சமாதானத்தை யேற்படுத்த ஒவ்வொரு தேசமும் முயல வேண்டுமென்று கூறியிருப்பது சீனாவுக்கு உதவி கிடைக்கலாம் என்ற நம்பிக்கை யேற்படுகிறது. இக் கமிட்டிகளின் இவ்வித முற்போக்கான முடிவுக்கு,

“சர்வதேசப் பிரதிநிதிகளே! நீங்கள் சீனாவுக்கு யுத்த உதவி புரிய வேண்டுமென்று நான் கேட்கவில்லை; போராட்டத்தை எங்களுக்கே விட்டு விடுங்கள்; ஆனால், அக்கிரமக்காரனைப் பேச்சளவில் கண்டிக்கும் ஆற்றலும் தைரியமும் கடமை உணர்ச்சியும் உங்களுக்கு இருக்க வேண்டாமா? சர்வதேச உடன்படிக்கைகளும் நீதியும் தர்மங்களும் பலாத்காரமாகக் கொல்லப்படுவதை நீங்கள் தடுக்காமல் ஒதுங்கி நிற்கலாம்; ஆனால் அத்தகைய கொடிய செயல்கள் சட்ட விரோதமானவை என்பதை நீங்கள் அறிவிக்கலாகாது?” என்று சீனப் பிரதிநிதி ஐரோப்பிய வல்லரசுகளுக்குக் கொடுத்த சாட்டையடியே காரணமென்று கருதுகிறோம்.

* * * *

## அமெரிக்கா அபிப்பிராயம்

“சீன—ஜப்பான் யுத்தத்தில் அமெரிக்கா தலையிடாது” என்றும் சீனாவிலுள்ள அமெரிக்கர்கள் உடனே வெளியேறவேண்டும் என்றும் உத்தர விட்

அமெரிக்காதலைவர் ரூஸ்வெல்டுகூட இப்போது தம்அபிப்பிராயத்தைமாற்றிக் கொண்டார் என்பது, அவரது பிரசங்கத்திலிருந்தும், யுனைடெட் ஸ்டேட் சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்தும் தெரிகிறது. இவ்விதம் அமெரிக்கா ஜப்பான் செய்கையைக் கண்டித்து அபிப்பிராயந் தெரிவிக்க வேண்டுமென்றே சீனா ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. அதன் அபிலாஷை இப்போது பூர்த்தியாய் விட்டது. "உலகில் நூற்றுக்கு பத்து விகிதமுள்ள யுத்த வெறி பிடித்தவர்கள் மற்ற 90 விகிதமுள்ள மக்களைச் சமாதானமாக வாழவிடாது துன்புறுத்துவதைத் தடுக்க வழி தேடவேண்டும்" என்று ரூஸ்வெல்டு கூறி யிருக்கிறார். ஆகவே, கமிட்டிகளும், அமெரிக்காவும் வாயளவில் கண்டிப்பதோடு நின்றுவிடக் கூடாது. ஒன்பது தேச ஒப்பந்தத்தில் கட்டுப்பட்டுள்ள தேசங்கள் உடனே ஜப்பான்மீது நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வகையில் மற்ற வல்லரசுகளுக்கு அமெரிக்கா தைரியமாக முன்வந்து வழி காட்டவேண்டும். அவ்விதமின்றி வாசா கைங்கரியமாய் மழுப்பிக் கொண்டிருந்தால் 'தற்போது ஏற்பட்டிருக்கும் தகராறைத் தானும் சீனாவும் தீர்த்துக்கொள்ள வேண்டியதொன்று' என்று திமிரோடு கூறும் ஜப்பான் சிறிதும் பயப்படாது.

* * * *

## நடவடிக்கை யெடுத்துக் கொள்ளுமா?

இப்போது இருக்கும் நிலைமையைப் பார்த்தால், சீனாவின்மீது கடவுளின் கருணைகடாட்சம் விழுந்திருக்கிறதென்றே தோன்றுகிறது. சகல தேசங்களின் அனுதாபமும் சீனாவின் பக்கத்தில்தான் இருக்கிறது. பிரிட்டன் ஒரு பெரிய தொகையைச் சீனாவுக்குக் கடனாக உதவி யிருக்கிறது. வியாபார முறையிலும், மற்றும் பல வகைகளிலும் ஜப்பானைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற உணர்ச்சி பிரிட்டனில் மட்டுமல்ல; இந்தியா முதலிய பல தேசங்களிலும் பரவி யிருக்கிறது. ஆனால், "டைம்ஸ," "டெயிலி டெலிகிராப்," "மாஞ்செஸ்டர் கார்டியன்" போன்ற பத்திரிகைகள் ஜப்பானைப் பகிஷ்கரித்தால் எல்லா தேசங்களுக்குமே ஆபத்து நேரிடுமென்று பூச்சாண்டி காட்டுகின்றன. பிரிட்டிஷ் சர்க்காரும் இதில் மௌனஞ் சாதிக்கின்றனர். ஒரு நாடு அக்கிரமமாக நடந்தால்—சர்வதேச சங்க சட்டங்களை மீறி நடந்தால்—மற்ற நாடுகளோடு செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்களையும் மீறி நடந்தால், அதைக் கண்டித்து நடவடிக்கை யெடுத்துக் கொள்வதற்கு இவ்வளவு தூரம் அஞ்சுவானேன்? ஜப்பான் வெடிகுண்டுகளையும், விஷப் புகைகளையும் விட்டு அதர்மயுத்தஞ் செய்து வந்தும் இன்னும் குறிப்பிடத் தக்கவாறு சீனாவில் முன்னேறிச் செல்லாமலே இருக்கிறது. இந் நிலைமையில் ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டுள்ள ஒன்பது தேசங்களும் ஜப்பானைப் பலவகையிலும் பகிஷ்கரித்து, சீனாவுக்கு யுத்த தளவாடங்கள், பொருள் உதவிகளைச் செய்து வந்தால், சீனா வெகு எளிதாக ஜப்பானை அடக்கி வெற்றி கொண்டு விடுமென்பது நிச்சயம். இத் தேசங்கள் இவ்விதஞ் செய்தால் தான் இனியும் எந்த தேசமும் இது போன்ற அக்கிரம வழியில் நாடு பிடிக்கும் வெறியைக் கொள்ளாது தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். தங்கள் சொந்த நலத்தை யுத்தேசித்தாயினும் ஒப்பந்தத்தில் கை யொப்பமிட்டுள்ள ஒன்பது தேசங்களும் தயங்காது தக்க நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக்கூற விரும்புகிறோம்.

தொடர் கதை.

# மாயா விரோதி

(ஸி. எஸ். இராமன், எம். ஏ., எல். டி.)
(Rights Reserved)

(239-வது பக்கத் தொடர்ச்சி.)

"செட்டியாரே, நீங்கள் அப்படிப் பேசக் கூடாது. நீங்கள் இறந்து போனால் நான் உயிருடன் இருக்கமாட்டேன்" என்று துக்கத்துடன் கூறினான். மாயாவிரோதியை பயபக்தி விசுவாசத்தோடு சிறந்த சிநேகிதனாகக் கொண்டிருந்தான்.

"ஒருகால் பிரபுவாவது நானாவது இறந்துபோனால் நீ யாருக்கும் ஏதும் சொல்லாமல் கனகனுக்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாய்கள் கொடுத்துவிட வேண்டும். இதை நீ முக்கியமாக நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்றான் மாயாவிரோதி.

சௌடப்பன் தனது எஜமானனின் பிரியப்படி நடப்பதாக உறுதி மொழி கொடுத்தான். அப்பொழுது அவன் கொண்ட விசனத்தை யாரே அளவிடவல்லார்? உறுதி மொழி தந்தபின் அவன் செங்கோட்டை ஜெமீந்தாரைப் பார்த்தான். அந்த இருளில் அவர் பிணம்போல் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு கதி கலங்கினான். இருந்தாலும் இரண்டொரு விநாடிகளில் தன்னை தைரியப்படுத்திக்கொண்டான்.

"இன்னும் சில மணிகளுள் நாம் உன்னைத் துறைமுகத்திற்கு வெளியே ஒரு படகில் இறக்கிவிடுகிறோம். நீ அதை வலித்துக்கொண்டு கரைபோய்ச் சேர்ந்து மற்ற காரியத்தைச் சாமர்த்தியமாகச் செய். நீ இந்திராவை நேரில் பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். என் பொருட்டு அவளை நன்கு பார்த்து மகிழ்ச்சி அடைவாய். பின்பு பதினைந்து தினங்களுக்குப் பின் நீ வேறு கப்பலில் புறப்பட்டு மலேய நாடுகளின் முக்கிய துறைமுகத்திற்கு.........வேண்டாம்.........இலங்கையில் கொழும்பு துறைமுகத்திற்கு வா. அங்கே நீ கனகனை அதே கப்பலில் காணலாம். இக் கப்பல் சீன தேசத்துக் கொடியுடன் "ஷாங்கே" எனும் பெயருடன் கடலில் இருக்கும். சரி, நீ போகலாம். இதில் உள்ள உல்லாசப் பிரயாணிகளை மலேய நாடுகளில் இறக்கிவிட்டு, இது கொழும்புக்குப் போகும். சரி போய் வா" என்று மெதுவாக மாயாவிரோதி சொல்லிவிட்டு வாளாவிருப்பதானான்.

ஃ ஃ ஃ ஃ

("மித்திரன்" மலேய நாட்டு நிருபர்)

கைதிக் கப்பல் "ஜலதூதன்" மாயாவிரோதியிடம் சிக்கிக்கொண்டதும் அவன் சர்க்கார் கப்பல் அதிகாரிகளைக் கைதி செய்ததும் நேற்று தினசரியில் பிரசுரித்தோம். அக் கப்பல் மற்றொரு கப்பலோடு மோதியதால் கடலில் மூழ்கியதையும் அறிவித்திருந்தோம்.

மாயாவிரோதியும் கனகனும் காந்திமதிச் சீமாட்டியும் இறந்துபோயினர் என்பது இது இப்பொழுது ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரேதங்களினால் கண்டுபிடிக்கப்பட்டது. மலேய நாட்டுச் சர்க்கார் மாயாவிரோதியின் மரணத்தை உண்மையென்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். ஒரு பெரிய கள்வனும் அவனுடைய கூட்டத்தாரும் தொலைந்துபோனதற்கு நாம் மிக்க சந்தோஷப்படுகிறோம்" என்று சௌடப்பன் சென்னைக்குச் சென்ற ஆறாவது நாள் சுதேசமித்திரனில் கொட்டையான எழுத்துக்களில் சென்னை சர்க்காருடைய அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

---

## அதிகாரம்—4

### கள்வனின் கபட நாடகம்

முன்னதிகாரத்தில் கூறிய விஷயங்கள் நடந்து இருபது தினங்களுக்குமேல் மாயாவிரோதியின் நண்பன் சௌடப்பன் குதூகலமாக செங்கோட்டை ஜெமீந்தார் இராஜமன்னாருடன் "ஜலதூதன்" கப்பலை விட்டிறங்கி, கொழும்பு துறைமுகத்தில் காலை வைத்தான். "ஜலதூதன்" கப்பல் வேறு தேசத்துக் கொடியைப் போட்டுக்கொண்டு, துறைமுகத்திற்கு வெளியேதான் இருந்தது. ஒரு படகில் இராஜமன்னாரும் சௌடப்பனும் ஏறிக்கொண்டு கொழும்பின் கரையை யடைந்தனர்.

இருவரும் ஒரு ஹோட்டலை யடைந்து, விசேஷ ஆகாரத்தை உட்கொண்டனர். சிறிதுநேரம் துயின்றபின் அவர்கள் இருவரும் ஜனங்கள் நடமாடாத ஒரு தோட்டத்தினுள் சென்று பின்வருமாறு பேசினர்.

"கனகன் மிகவும் கெட்டிக்காரன். அவனுக்கு நாம் ஒரு லட்சத்திற்கு மேல் பணம் கொடுத்திருக்க வேண்டும்," என்று செங்கோட்டை ஜெமீந்தார் இராஜமன்னாரின் தோற்றத்தைக் கொண்ட மாயாவிரோதி சௌடப்பனைப் பார்த்துக் கூறினான்.

"எனக்கு கனகனைக்கண்டால் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. உண்மைக் கப்பல் அதிகாரிகளையும் உல்லாசக் கப்பலின் விருந்தினர்களையும் சில தினங்களுக்கு முன் விடுதலை செய்தபொழுது, அவன், தாங்கள் இறந்துவிட்டதாக என்னிடம் பொய் சொல்லியிருந்தான். ஐயோ! நான் கொண்ட துக்கத்தின் சிகரத்தை யாரே அளவிடமுடியும்! அவன் சொன்னதை நான் முதலில் நம்பவில்லை. ஆனால் கொடிய தொத்துவியாதி உங்களையும் ஜெமீந்தாரையும் பீடித்திருந்தது எனக்குத் தெரியும்," என்று சொல்லிக்கொண்டே போகையில் சௌடப்பன் பேசுவதை மாயாவிரோதி இடைமறித்துப் பேசினான்.

"உண்மையில் எனக்கு வியாதி ஏதும் இல்லை. இராஜமன்னாருக்கும் ஒன்றும் இருக்கவில்லை. நானும் கனகனும் சேர்ந்து சூழ்ச்சி செய்ததால் தொத்துவியாதி என்ற பேச்சு கப்பலில் எழுந்தது. என்னுடைய கட்டளையின்படி கனகன் நடந்தான். அவன்மீது ஏன் கோபம் உனக்கு?" என்று சொல்லிச் சிரித்தான்.



"நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் எனக்கு அவனைக்கண்டால் வெறுப்பே. அவன் தனது வைத்திய சாமர்த்தியத்தினால் ஜெமீந்தாருடைய மூக்கையும் கைகளையும் உங்களுடைய தேகத்தில் பொருத்திவிட்டான். உங்களுடைய கைகளும் மூக்கும் என்னவாயின?"

"சௌடி, நான் எனது கரங்களை இழக்கக் காரணம் சொல்கிறேன். என் மூக்கை பூராவும் இழக்கவில்லை. இராஜமன்னாரின் மூக்கு சிறிது நீண்டு, கெம்பீரத் தோற்றத்தைக் கொடுக்கும். எனது கொஞ்சம் நீண்டு வளைந்திருக்கிறது. கனகன் என்ன செய்தான் தெரியுமா? இராஜமன்னாரின் மூக்கில் சதையைப் பெயர்த்து, ஒருவகை திராவகத்தால் எனது மூக்கின் வளைவில் ஒட்டிவிட்டான். இப்பொழுது எனது மூக்கு ஜெமீந்தாருடைய மூக்கைப்போலவே உளது. திராவகம் போடும்பொழுது எனக்கு உண்டான வேதனை பொறுக்கமுடியாது. எல்லாம் எனது பழைய காதலியும் ஜெமீந்தாரணியுமான இந்திராவை அடையவே இங்ஙனம் செய்ய வேண்டியதாயிற்று," என்று ஆச்சரிய உருவமாக உட்கார்ந்திருந்த சௌடப்பனுக்கு முத்தய்யசெட்டி சொன்னான்.

"நீங்கள் "இவன் கைகள் வேண்டாம்," என்று முன்பு அலறினீர்களே?" எனக் கேட்டான் சௌடப்பன்.

"அதுவா? எனது இரண்டு கரங்களிலும் ஜெயிலில்போட்ட குறிகள் இருந்தன. அவை நானிறந்தாலொழியப் போகா. ஆதலால் ஜெமீந்தார் தன்னுடைய கரங்களை இழக்க வேண்டியதாயிற்று. நானும் எனது கைகளை நீக்கி, அவனுடைய கைகளை வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. வலியும் வீக்கமும் பொறுக்க முடியவில்லை. இப்பொழுது அவனுடைய கைகள் என்னுடையதே! அவனது மனைவியும் எனக்குச் சொந்தமே! நான் அவள் புருஷன்!" என்று ஆர்வத்தோடு பேசினான் முத்தய்யசெட்டி.

"நீங்கள் பழிக்குப்பழி ஜெமீந்தார்மீது வாங்கிவிட்டீர்கள்! மிக்க சாமர்த்தியவான்," என்று புகழ்ந்தான் சௌடப்பன்.

"சென்னை சர்க்கார் மாயாவிரோதியாகிய நானும் எனது சகாக்களும் கடலில் மாய்ந்து போனதாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். நான் இப்பொழுது கபட நாடகம் நடிப்பது அவர்களுக்குத் தெரியாது. ஜெமீந்தார் தொலைந்தான்; கடலின் அடியில் இருக்கின்றான். ஆனால் அவனுடைய விரோதியாகிய நான் இப்பொழுது அவனைப்போல் பட்டமும் பதவியும் வகிக்கிறேன். உண்மையை உலகினர் அறியவே மாட்டார்கள். அது எப்படி முடியும்? சரி, நாம் சரியாக நமது புதிய வேஷத்தில் நடிக்கவேண்டும். நீ எனக்கு காரியதரிசி. உன் பெயர் பிரசாத். நான் செங்கோட்டை ஜெமீந்தார். எனக்கே சிரிப்பு வருகிறது. துப்பறியும் கொக்கு ஸிம்ஹநாதனை இனிமேல் நன்கு ஏமாற்றுகிறேன் பார்," என்றான் மாயாவிரோதி.

சௌடப்பனும் (இனிமேல் நாம் அவனை பிரசாத் என்றே அழைப்போம். மாயா விரோதியைப் பல விடங்களில் ஜெமீந்தார் என்றே கூப்பிடுவோம்) சிரித்தான்.

இரண்டு தினங்கட்குப் பின் செங்கோட்டை ஜெமீந்தாரும் அவருடைய காரியதரிசி பிரசாதும் ஒரு மோட்டார் வண்டியில் சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

ஜெமீந்தார் பிரபுவின் உள்ள உணர்ச்சிகளை நாம் அறியவேண்டுமன்றோ? தமது இன்பக் காதலியான இந்திராவைத் தாம் சடுதியில் அடைந்து பேசிச் சந்தோஷ முறவேண்டும் எனும் எண்ணத்தினால் தாக்கப்பட்டாராதலின், அவர் கொண்ட குதூகலம் அளவிடுவதற்கு முடியாத காரியமாக இருந்தது. பல இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தார்.

அதனால் அவரது மனம் கட்டுக்கடங்காமல் எல்லா விடத்திலும் இன்பமாக சஞ்சரித்துக் கொண்டிருந்தது. எப்பொழுது அம்மாதரசியைக் காண்போம், களிகொள்வோம் எனும் ஆனந்தக் கருத்துடன் பிரபுவினுடைய மனம் வேகமுள்ள குதிரையைப்போல் ஓடிக் கொண்டிருந்தது. சௌந்தரியம் பொருந்திய இந்திராவின் பழைய செய்கைகளையும பேச்சுகளையும் பிரபு ஞாபகப்படுத்திக் கொண்டா'. அத்தகைய ஆழ்ந்த இன்பக் கருத்தில் புதைந்து கிடந்தது அவரது மனம்.

சிறிது நேரமானதும் செங்கோட்டை ஜெமீந்தார் பல்லாவரத்தையடைந்தார். அங்கே, சிறு வயதில் அவர் போய்வந்த ஹோட்டல் ஒன்றுண்டு. வீதியில் ஒரு பெரிய “போர்டு” தொங்குவதைக் கண்டு, “நான் சுயாதீனம் பெற்று இருக்கையில் இருந்தமாதிரியே இந்த ஹோட்டல் இப்பொழுதும் இருக்கிறது. எத்தனை வருஷங்கள் நான் சிறையில் இருந்தேன்,” என்று பிரசாத்திடம் கூறினார்.

“பதினாறு பதினேழு ஆண்டுகளாக நீங்கள் காவலோடு இருந்தீர்கள்,' என்று காரியதரிசி மெல்லப் பேசினான்.

“நாம் உள்ளே போய் ஏதாவது சாப்பிடலாமா?” என்று பிரபு கேட்டார்.

“பதவியும் பவிஷும் மிக்க தாங்கள் போவது கூடாது,” என்று சொன்னான் பிரசாத்.

“நம்மை யார் தெரிந்துகொள்ளப் போகிறார்கள்?”

“அப்படியல்ல. ஜெமீந்தாரல்லவா தாங்கள்? வேண்டாம்.”

செங்கோட்டை ஜெமீந்தார் வேறு பேச்சு பேசாமல் மோட்டார் வண்டியை ஓட்டுவதாயினார்.

சாயுங்காலம் ஏழுமணி சமயம். நீலநிற வானத்தில் அஸ்தமிக்கும் சூரியனது செங்கிரணங்கள் ஆகாயத்தின் வருணத்தை மாற்றிப் பார்ப்பதற்கு பொன்னோ என்று சந்தேகிக்கும்படி செய்தன. பிரபுவும் அவருடைய காரியதரிசியும் அடையாறில் சமுத்திரத்தை யடுத்திருந்த மாளிகைக்கு வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இந்திராவின் எழிலையும் அன்பையும் தாம் பெற்று மகிழவேண்டும் என பேராவல் கொண்டிருந்த பிரபு இந்திராவை உண்மை ஜெமீந்தார் எந்தப் பெயரால் அழைத்தார் என்பதை



அறிய ஆவல் கொண்டார். ஆனால் அதை எப்படி அறிவது? ஜெமீந்தாரும் அவருடைய நண்பர்களும் ஒருவரை யொருவர் எப்படி அழைத்துக் கொண்டார்களோ? பழைய ஜெமீந்தார் தமது மனைவியைச் சரியாக நேசிக்காமல் வேறு பிரபு ஒருவருடைய மனைவியை நேசித்து வந்ததை பிரபு எப்படியோ அறிந்திருந்தார். அந்த அம்மாள் தங்களைக் கண்டால் தாங்களும் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? இந்திரா எப்படியும் தங்களை மணாளனாகவே நினைத்துக் கொண்டாலும், தாங்கள் அவளோடு சாமர்த்தியமாக நடந்து கொள்ளவேண்டும் என்று கருதினார்.

“பிரசாத், நாம் எப்படியும் மாளிகைக்குச் செல்லுகிறோம். நமது வருகையை நாளையதினம் அல்லவா மாளிகையில் உள்ளவர்கள் எதிர்ப்பார்கள்?” என்று ஜெமீந்தார் கேட்டார். இன்ப எண்ணங்களும் தாம் நடந்துகொள்ள வேண்டிய விதமும் அவரது மூளையைக் கொஞ்சம் குழப்பி விட்டனவென்று சொல்லவேண்டும்.

“அப்படியானால் நாம் மாளிகைக்கு இப்பொழுது போகலாகாது. இன்றிரவை வேறு எங்கேயாவது கழித்துவிட்டுப் போதலே நலம்,” என்று காரியதரிசி பிரசாத் பதிலளித்தான்.

“ஆமாம்; அப்படித்தான் செய்ய வேண்டும். ஒரு ஹோட்டலில் தங்கிச் செல்லலாம். (சிறிது யோசனை செய்து) பிரசாத், என் பொருட்டு நீ பணம் கொண்டுவரச் சென்ற பொழுது ஜெமீந்தாரிணி அம்மாள் இந்திராவை நேரில் கண்டு பேசினையா?” என்று மாயாவிரோதி கேட்டான்.

“இல்லை, பிரபுவே, அந்த அம்மாளின் வக்கீலைக் கண்டு பேசி, பணத்தைக் கொண்டு வந்தேன். இப்பொழுது அந்த வக்கீல் இறந்துபோய் விட்டார். மற்றொருவர் புதிதாக எஜமானியவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்தேன். அவர் பெயர் ராஜதேவர்,” என்று சௌடப்பன் சொன்னான்.

“ஓ! பிரசாத், ராஜதேவர் நல்லவர். நீ இந்திராவைப் பார்க்காதது எனக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஏன் தெரியுமா? உனக்கு ஒருகால் அவள் அழகாக இல்லாமல் தோன்றியிருக்கலாம். அப்பொழுது அவள் சர்வ சாதாரண அழகு வாய்ந்தவள் என்று நீ என்னிடம் சொல்லியிருந்தால் உன்மீது எனக்கு அடங்காச் சினம் உண்டாகியிருக்கும். நீ பார்த்தால் அவளை அழகுத் தெய்வம் என்றுதான் கூறுவாய்,” என்று தமது மனம் போனவாறு ஜெமீந்தார் கூறினார்.

அதைக் கேட்டு காரியதரிசி மௌனம் சாதித்தான். இது நிற்க.

செங்கோட்டை மாளிகையில் மறுநாள் காலையில் நடக்கும் விஷயத்தைப் பார்ப்போம்.

(தொடரும்)

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஈசுவரஞு ஐப்பசிமீ—கலியுகாதி 5039, சாலிவாகனம் 1860,
பசலி 1347, கொல்லமாண்டு 1113, ஹிஜரி 1356,
இங்கிலீஷ் 1937ஞு அக்டோபர்மீ—நவம்பர்மீ

| ஐப்பசிமீ | அக்டோபர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | ஞா | து10-45 | பூர48-40 | சி48-40அ | பிரதோஷம், துலாஸ்நாரு |
| 2 | 18 | திங் | திர6-13 | உத்44-48 | சித்60 | விவாகம் [ரம்பம் |
| 3 | 19 | செவ் | ச○0-10 பௌ53-8 | ரே39-45 | சித்60 | பௌர்ணமி. தனபால விர தாரம்பம், அன்னாபிஷே |
| 4 | 20 | புதன் | பிர45-10 | அஸ்34-3 | மர43-3சி | ஆஸ்வீயபதுளம் [கம் |
| 5 | 21 | வியா | துதி37-10 | ப✲27-50 | சி27-50ம | கிருத்திகை (அனுஷ்டா |
| 6 | 22 | வெள் | திரி29-15 | கிரு21-50 | சி21-50ம | கிருத்திகை [னப்படி) |
| 7 | 23 | சனி | சது21-43 | ரோ16-5 | அ16-5சி | |
| 8 | 24 | ஞா | பஞ்14-53 | மிரு11-5 | சித்60 | |
| 9 | 25 | திங் | சஷ்8-58 | திரு6-58 | சித்6-58அ | |
| 10 | 26 | செவ் | சப்4-5 | புன3-50 | சித்60 | |
| 11 | 27 | புதன் | அ0-28 நவ58-3 | பூச1-58 | சித்60 | |
| 12 | 28 | வியா | தச57-0 | ஆயி1-15 | சித்1-15அ | |
| 13 | 29 | வெள் | ஏகா57-8 | மக1-53 | ம1-53சி | |
| 14 | 30 | சனி | து58-20 | பூர3-38 | சி3-38மர | |
| 15 | 31 | ஞா | திர60 | உத்6-33 | அமி60 | |
| 16 | 1937ஞு நவம்பர்மீ 1 | திங் | திர0-53 | அஸ்10-35 | சி10-35பி | நரகசதுர்தசிஸ்நானம் (இர |
| 17 | 2 | செவ் | ச●4-30 | சித்15-45 | சித்60 | சர்வத்ர அமாவாசை, [வில்) தீபாவளி பண்டிகை, கேதாரகௌரி விரதம் |
| 18 | 3 | புதன் | அமா9-22 | சு21-40 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 19 | 4 | வியா | பிர14-45 | வி28-40 | சித்60 | சந்திர தெரிசனம் [28 |
| 20 | 5 | வெள் | துதி20-58 | அ36-10 | சி36-10ம | விசாக கார்த்திகை நா-40. |
| 21 | 6 | சனி | திரி27-40 | கே44-3 | சித்60 | ஆலோசன கௌரி விரதம். |
| 22 | 7 | ஞா | சது34-30 | மூல51-58 | அ51-58சி | மாச சதுர்த்தி விரதம் |
| 23 | 8 | திங் | பஞ்40-55 | பூரா59-20 | மர60 | கணிதாரம்பம், கடன்தீர்க்க |
| 24 | 9 | செவ் | சஷ்46-33 | உத்60 | அமி60 | சஷ்டி, கந்தர் சஷ்டி, சூர சம்ஹாரம், மஹா சஷ்டி |
| 25 | 10 | புதன் | சப்50-45 | உத்5-38 | அமி5-38சி | சுப முகூர்த்தம் செய்ய |
| 26 | 11 | வியா | அ58-3 | திரு10-33 | சித்60 | கோவாஷ்டமி [மறை |
| 27 | 12 | வெள் | நவ58-28 | அவி13-43 | சித்60 | அக்ஷய நவமி, 1-க்குள் |
| 28 | 13 | சனி | தச54-15 | சத14-48 | அ14-48ம | கர்ம்நதீ புஷ்கரம் |
| 29 | 14 | ஞா | ஏகா47-55 | பூர13-58 | சி11-58அ | சர்வ, மத்வ ஏகாதசி |
| 30 | 15 | திங் | து42-25 | உத்11-18 | சித்60 | யோகீஸ்வர த்வாதசி |

| | | | |
|---|---|---|---|
| சனி | | கே | |
| | 5-துலா-புத<br>16-மகர-செ<br>22-துலா சுக்<br>24-விரு-புத<br>28-மகர-குரு. | | |
| செ குரு | ராகு | சூரி | புத சுக் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத
சிங்கபலத்தைத் தருவதேது?

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக்காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.




விளம்பரம். ஆதைக் கண்ணுறும் கனவான்களே! இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரு தடவையிலேயே இவற்றின் குணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரங்களால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:—

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவருக்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கை கால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம் அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத் தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கி விடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்குமிஞ்சின இலேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு கக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதி

களைக் கண்டித்து தினந்தோறும் மலத்தை தாராளமாய்ப் போக்குவதில் இந்தலேகிய செந்தூரங்களே முதன்மையானதுயென்பதை நாம் எமது அநுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தான் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்தரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன்மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக் கணக்கான யோக்கியதாம்ச பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் நாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாக யிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்த காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பலகாரங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும் போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ.4.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூ. 1-12-0. தபாற்கூலி ரூ. 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உட்பட ரூபா 5-8-0 சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்பட மாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
**44, நம்புலையர் தெரு, மதராஸ்.**

## நரை மயிர் கருக்குந் தைலம்



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூபா 1.

## கர்ணபிந்து



காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும். புட்டி 1-க்கு அணா 4. வி. பி. தபால்கூலி வேறு.

## (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்

இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், இரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகாசங்களின் ரோகத்தை குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூபா 1—8—0.

தனலட்சுமி கம்பெனி நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

**பட்டவுடனே விஷம் பறந்தும்!** **அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை காலபட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

**ஏககாலத்தில் 5-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.**

# மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்றுநாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக நீர், மேக வெடிப்பு, எல்லாவகைகளான வெள்ளை, மூத்திரக் கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15 நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும்.

3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்து ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண விவரத்தை தெரியப்படுத்தவும்.

# சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை தேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துகொள்ளலாம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்**

# சர்வமேக நிவாரணத் தைலம்




இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால் வாதம், குதிகால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், தொடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கு வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

# சர்வபடை சம்மாரன்



சரீரத்தில் ஒடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு விலை அணா 4. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து



இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பூளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச்சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்**

## நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக் குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூலாக்கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்துவரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்த மயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை, கிழங்கு புல் முதலிய இந்திய வாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரி வருவதினால் மயிர் கருப்புப் பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம் விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு அணா 12. தபாற்கூலி வேறு.



## சூதக நிவாரணி மாத்திரை

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந் தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலேயிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல்மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும், ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.





## அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கருப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முக வசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும், க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும், மூலச் சூடு, மூலவாய்வு, மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக இடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவர் 40-நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.
20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

## கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷிபத்திரங்கள் பெற்றிருக்கிறபடியாலும் நமது தேசத்தில் வரவுக்கு மிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலஹீனப்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து ஹீனதிசை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் ... ஔஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை ... உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பிவைக்கப்படும். ... விலை ரூபா 2.



# புத்திர சந்தான எண்ணெய்



ஆண்மலடு சொன்னாலும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரிசேர்ந்தால்
ஊன்மிருந்தால் புழுதரித்தால் உதிரங்கெட்டா
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால் [ல்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்துவிடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோறி பற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கியிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயில் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# யூகலிப்டஸ் ஆயில்

## (சுத்தமான நீலகிரித் தைலம்)




வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறா, வெட்டுக் காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய் பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம். 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை அணா 4.

1 ,, 1-டஜன் (12)-க்கு ரூ. 2—8—0

187533

# கல் [illegible] ரை

குழந்தைகள் முதல் [illegible] த்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், [illegible] தலைப்பாரம், நெஞ்சு [illegible] ருகொருப்பு, ஜலதோஷம் முதலியவை [illegible] கும். இதன் விலை பு [illegible] க்கு அணா 12.

---

தனலட்சுமி கம்பெனி, [illegible] 1/6, வெங்கடேச [illegible] தெரு, மதராஸ்